நெசவுக் கைத்தொழில் அமைச்சர்

கௌரவ எம்.ஏ. அப்துல் மஜீத், எம்.பீ. அவர்களின்

பாராட்டு விழா

# சிறப்பு மலர்






# FELICITATION SOUVENIR

HON. M.A. ABDUL MAJEED, M.P.

MINISTER OF HANDLOOMS INDUSTRY

0057

நெசவுக் கைத்தொழில் அமைச்சர்

கௌரவ எம். ஏ. அப்துல் மஜீட் எம். பி., அவர்களின்

முப்பத்திரண்டாண்டு

பாராளுமன்ற சேவை நலன் பாராட்டுவிழா

# சிறப்பு மலர்

**1992.08.10**

# HON. M. A. ABDUL MAJEED M. P.

**MINISTER OF HANDLOOMS INDUSTRY**

# FELICITATION SOUVENIR

**TO MARK HIS**
**THIRTY TWO YEARS OF SERVICE**
**AS A PARLIAMENTARIAN**

# சமர்ப்பணம்.

சமூக அரசியல் பொதுவாழ்வில்
முப்பத்திரண்டு ஆண்டுகள்மேல்
சாதனைகள் பலபடைத்தும்,
ஆறுதல் அடையாது மக்களுக்காய்த்
தொடர்ந்துந்தன் வாழ்வுதனை
அர்ப்பணித்து உருகிஒளிர்கின்ற,
தியாகி அப்துல் மஜீதென்னும்
திருமகனை மன்னுயிர்க்காய்த்
தவமிருந்து பெற்றளித்து,
இவ்வுல கைவிட்டும் பிரிந்துசென்ற
அன்னவர்தம் மாதாபிதாவிற்கு
எங்களிவ் விதயமலர்
சமர்ப்பணம்!

# OUR LEADER



Hon. M. A. Abdul Majeed M.P.,
Minister of Handlooms Industry

# Message from His Excellency The President of Sri Lanka



I congratulate Mr. M. A. Abdul Majeed, M.P, Minister of Handloom Industries on the occasion of the completion of 32 years of service as a Parliamentarian. Today, he is one of our senior and respected Members of Parliament. He has an unbroken record of service as a Member of Parliament since March, 1960.

During his long tenure in Parliament, Mr. Abdul Majeed has served his constituents and our country well. He has championed the cause of the hard working people of the Eastern Province. He has a distinguished record of service as the District Minister of Batticaloa.

On a wider scale, as a Deputy Minister in several key Ministries he has made an important contribution to national development. Today, he is in charge of an area of economic activity, which is of vital importance to the country.

I wish him good health and long life so that he could continue to serve his people and our country, for many more years to come.

**Ranasinghe Premadasa**
PRESIDENT

# அதி உத்தம ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்கள்

## ஆங்கிலத்தில் வழங்கிய ஆசிச் செய்தியின் தமிழ் மொழி பெயர்ப்பு

பாராளுமன்ற உறுப்பினராக 32 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்யும் நெசவுக் கைத்தொழில் அமைச்சர் ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீட் எம்.பி அவர்களை நான் பாராட்டுகின்றேன். இன்று எமது பாராளுமன்றத்தின் கண்ணியம் மிக்க சிரேஷ்ட உறுப்பினர்களில் இவரும் ஒருவர். இவர் பாராளுமன்ற உறுப்பினராக 1960 மார்ச் முதல் இடையீடற்ற சேவை ஆற்றியுள்ளார்.

பாராளுமன்றத்தில் அவரது நீண்ட பதவிக் காலத்தில் ஜனாப் அப்துல் மஜீட் அவர்கள் தமது தொகுதி மக்களுக்கும் எமது நாட்டுக்கும் மிகச் சிறந்த பணிபுரிந்துள்ளார். இவர் கிழக்கு மாகாணப் பாட்டாளி மக்களின் நலனுக்காகத் தீவிரமாகப் போராடியவர். மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராக இவராற்றிய சேவை அளப்பரியது.

பரந்த ரீதியில் பல்வேறு அமைச்சுக்களினதும் பிரதி அமைச்சராக அவர் தேசிய அபிவிருத்திக்கு முக்கியமான பங்கினை வழங்கியுள்ளார். இன்று இவர் நாட்டிற்கு மிக முக்கியமான பொருளாதார நடவடிக்கைத்துறை ஒன்றிற்குப் பொறுப்பாக விளங்குகின்றார்.

எதிர்காலத்தில் மேலும் பல்லாண்டுகள் எமது நாட்டிற்கும் நமது மக்களுக்கும் தொடர்ந்தும் சேவையாற்றக் கூடியவகையில் அவருக்கு நல்ல உடல் நலனும் நீண்ட ஆயுளும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

ரணசிங்க பிரேமதாஸ
ஜனாதிபதி.

# Message from Hon. Prime Minister of Sri Lanka



It is a matter for gratification that a grateful and appreciative public has come forward to celebrate the completion of 32 years of service as Parliamentarian by the Hon. M. A. Abdul Majeed by publishing a souvenir.

It has been my good fortune to have known Hon. Abdul Majeed during almost the entire period of his career as a Parliamentarian. The years that he worked with me as the Deputy Minister when I was the Minister of Posts and Telecommunications are yet fresh in my memory. He was hard-working and devoted to the public he served. He is loyal to the Government of which he is a member. I still recall that period with great satisfaction.

Simplicity and sincerity have been the hallmarks of his personal life and these are the qualities that have endeared him to the people at large. Being a keen student himself he has encouraged learning and studious life. The Eastern Province - the large constituency which he has served in an exemplary manner is a miniature replica of our country. All the three major communities live here. It has been Hon. Majeed's earnest effort to see that justice is done to all members of all the communities represented here.

It is a pleasure for me to wish Hon. Abdul Majeed happiness on this felicitous occasion. I am sure that many more years of sincere and selfless service for our entire country is reserved for him in the coming years.

I wish him well.

**D.B. Wijetunga**
**Prime Minister**

# பாராட்டு விழா சிறப்புமலருக்கு
# கௌரவ பிரதம மந்திரி D. B. விஜேதுங்க அவர்கள்
# வழங்கிய ஆசிச் செய்தி.

### (ஆங்கில மூலத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு)

பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ M. A. அப்துல் மஜீட் அவர்களின் 32 ஆண்டுச் சேவை நிறைவினை நினைவு மலர் வெளியிட்டுக் கொண்டாட நன்றியுணர்வும், பாராட்டும் மனமும் கொண்ட பொதுமக்கள் முன் வந்துள்ளமை உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

பாராளுமன்ற உறுப்பினராக கௌரவ அப்துல் மஜீட் அவர்களின் பணிக்காலம் பூராகவும் அவரை நான் அறியக் கூடியதாயிருந்தது எனது நற்பேறாகும். நான் அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சராயிருந்த போது பிரதி அமைச்சராக என்னுடன் அவர் கடமையாற்றிய அந்த ஆண்டுகள் இன்னும் என் நினைவில் பசுமையாகப் பதிந்துள்ளன. அவர் கடின உழைப்பும், தாம் சேவையாற்றிய மக்கள் மீது ஈடுபாடும் கொண்டவர். தாம் உறுப்பினராயிருக்கும் அரசாங்கத்தின் மீது விசுவாசம் கொண்டவர். அவர் என்னோடு சேவையாற்றிய அக்காலத்தை நான் இன்னும் மிகுந்த மனத்திருப்தியுடன் நினைவு கூருகின்றேன்.

எளிமையும் நேர்மையும் அவரது தனிப்பட்ட வாழ்வின் இலக்கணமாக விளங்கின. இந் நற்பண்புகளே பொதுமக்களை அவர்பால் ஈர்த்தன. கல்வியில் அளவற்ற அக்கறை கொண்ட அவர் கற்றறிதலையும், கல்வியில் ஈடுபாடுடைய வாழ்வினையும் ஊக்கப்படுத்தினார்.

இவர் எடுத்துக்காட்டாகச் சேவையாற்றிய பெரியதோர் தேர்தல் தொகுதியான கிழக்கு மாகாணம் எமது நாட்டின் சிறியதோர் பிரதிபிம்பமாகும். பிரதான மூன்று சமூகத்தினரும் இங்கு வாழ்கின்றனர். இங்கு பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சகல சமூகங்களினதும் சகல உறுப்பினர்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டுமென்பதே கௌரவ அப்துல் மஜீட் அவர்களின் உளமாந்த முயற்சியாயிருந்தது.

இப்பாராட்டு விழாவில் கௌரவ அப்துல் மஜீட் அவர்களின் மனம் மகிழ வேண்டுமென நான் வாழ்த்துகின்றேன். எதிர்காலத்தில் மேலும் பல்லாண்டுகள் அவரது நேர்மையான, தன்னலமற்ற சேவை எமது நாடு முழுவதற்கும் கிடைப்பது உறுதி.

- அவர் வளமாக வாழ வாழ்த்துகின்றேன். -

D. B. விஜேதுங்க
பிரதம அமைச்சர்.

# Message by Al - Haj M. H. Mohamed, Hon. Speaker, Parliament of Sri Lanka



I consider it a priviledge to be given this opportunity of penning a few lines to the felicitaion volume which is being released to commemorate thirty two years of public service by my good friend, colleague and brother Hon. M. A. Abdul Majeed, M. P. This commemoration celebration is a fitting tribute to a person who have spent a good part of his life towards the welfare and well being of the people, particularly in the Eastern Province.

My Association with Mr. Abdul Majeed dates back to our early life in politics. I still have some pleasant memories of the times the two of us had shared during the years of our politics. Mr. Majeed is a person who deserves admiration for his wisdom, courage and loyalty.

Yet, it is not my wish to mention in this page his successes and drawbacks during his political life - span, because it is widely known by all who share in his friendship.

He is a cool and an amiable person who is worthy of the high praise. Mr. Majeed is undoubtedly the most popular political figure of repute in the Eastern Province. Naturally he is loved by people from all shades of community and political colour. He is one person I know who will overcome obstacles and challenges by facing them. It is this great determination and willpower that has enabled him to achieve the position in which he is today.

Mr. Majeed could be considered as one of the distinguished politicians in Parliament to have represented the Eastern Province in the recent times. He also has an unbroken record as a sitting Member in Parliament since March 1960. I recognise him as a "Gentleman Politician", who has great potential to reach higher positions in his future political career.

May Almighty give him strength, courage and wisdom to achieve these goals.

Best Wishes,

**M. H. MOHAMED**
**SPEAKER**

# பாராட்டு விழா சிறப்புமலருக்கு
# கௌரவ சபாநாயகர் அல் - ஹாஜ் M. H. முஹம்மட் அவர்கள் வளங்கிய ஆசிச் செய்தி.
## (ஆங்கில மூலத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு)

எனது நல்ல நண்பரும், சகாவும், சகோதரருமான கௌரவ எம்.ஏ. அப்துல் மஜீட் எம்.பி அவர்களின் முப்பத்திரெண்டாண்டு பொதுச் சேவையை நினை ஆட்டும் முகமாக வெளியிடப்படும் நினைவு மலரில் ஒரு சில வரிகளை எழுத்திற் பொறிப்பதற்கு கிடைத்த இவ்வாய்ப்பினை எனக்களிக்கப்பட்ட பெரும் பேறாக நான் கருதுகின்றேன். இப்பாராட்டு விழாக் கொண்டாட்டம் குறிப்பாக கிழக்கு மாகாண மக்களின் நலனுக்கும், நல்வாழ்வுக்குமெனத் தம் வாழ்நாளின் பெரும்பகுதியைச் செலவிட்ட ஒருவருக்கு வழங்கப்படும் மிகப்பொருத்தமான பாராட்டுச் சின்னமாகும்.

ஜனாப் அப்துல் மஜீதுடனான எனது தொடர்பு எமது ஆரம்பகால அரசியல் வாழ்விலேயே தொடங்கிவிட்டது. அரசியலில் நாம் ஈடுபட்டிருந்த அவ் வாண்டுகளில் நாமிருவரும் பகிர்ந்து கொண்ட காலங்களைப்பற்றிய இனிய நினைவுகள் இன்றும் என் மனதில் நிலைத்து நிற்கின்றன. ஜனாப் மஜீட் அவர்கள் அவரது மதி நுட்பத்திற்கும் துணிவிற்கும் விசுவாசத்திற்கும் வியந்து பாராட்டுவதற்கு தகுதியுடையவரே.

எனினும் அரசியல் வாழ்வில் அவரது வெற்றிகளையும் குறைபாடுகளையும் இப்பக்கத்தில் குறிப்பிடுவது எனது நோக்கமல்ல. ஏனெனில் அவருடன் நட்பைப் பகிர்ந்து கொள்ளும் அனைவருக்கும் அவை நன்கு தெரிந்தவையே.

அவர் உயர்வாகப் போற்றிப் புகழ்வதற்குத் தகுதியுடைய மிகச் சாந்த மான, அன்புகொள்ளத்தக்க மனிதர். ஜனாப் அப்துல் மஜீட் கிழக்கு மாகாணத்தில் கீர்த்தி பெற்ற மிகப் பிரபலமான அரசியல்வாதி என்பதில் சந்தேகமில்லை. சமூகத் தின் சகல தரங்களையும், சகல அரசியற் கட்சிகளையும் சாந்தமக்கள் இயல்பாகவே அவரை விரும்புகின்றனர். முட்டுக்கட்டைகளையும் சவால்களையும் எதிர்நோக்கி வெற்றிகொள்ளும் ஒரு மனிதராக அவரை நான் அறிவேன். இந்த மனஉறுதியும் தன்னம்பிக்கையுமே அவர் இன்றுள்ள நிலையை எய்துவதற்கு வழி வகுத்தன.

ஜனாப் மஜீட் அவர்களை அன்மைக்காலங்களில் பாராளுமன்றத்தில் கிழக்கு மாகணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய புகழ்பெற்ற அரசியல்வாதிகளில் ஒரு வராகக் கருதலாம். 1960 மார்ச் முதல் பாராளுமன்ற உறுப்பினராக இடையீடின்றித் தொடர்ந்து இருந்துவரும் சாதனையையும் அவர் புரிந்துள்ளார். அவரது எதிர்கால அரசியற் பணியில் மேலும் உயர்ந்த நிலைகளை எய்தக்கூடிய மிகுந்த செயலாற்றல் வாய்ந்த ஒரு ‘‘பெருந்தன்மையான அரசியல் வாதியாக’’ அவரை நான் காண் கின்றேன்.

இக்குறிக்கோள்களை எய்துவதற்கு வேண்டிய வலிமையையும், துணிவை யும், மதி நுட்பத்தையும் எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு வழங்குவானாக.

-நல்வாழ்த்துக்கள்-

எம்.எச். முஹம்மட்
சபாநாயகர்.

# Message From Hon. S. Thondaman, M. P.
# Minister of Tourism & Rural Industrial Development



I have great pleasure in sending this message for a Souvenir to mark the completion of 32 years of service as a Parliamentarian by Mr. M. A. Abdul Majeed.

I have known Mr. M. A. Abdul Majeed as a Parliamentarian and I have watched with interest his activities to help not only the Muslims of Eastern Province but people of all communities in the area.

I wish him a long career as a Politician and as one who will help the people of his area and the country.

**S.THONDAMAN**
Minister of Tourism & Rural Industrial Development

## கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி, உல்லாசப் பிரயாணத் துறை அமைச்சரும், இலங்கை தோட்டத் தொழிலாளர் தலைவருமான கௌரவ எஸ். தொண்டமான் அவர்களின்

### ஆங்கில ஆசிச் செய்தியின் தமிழ் மொழி பெயர்ப்பு.

ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீட் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக 32 ஆண்டுகள் சேவையைப் பூர்த்தி செய்துள்ளதை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவு மலருக்கு இவ்வாசிச் செய்தியை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஜனாப் எம்.ஏ. அப்துல் மஜீட் அவர்களை ஒரு பாராளுமன்ற உறுப்பினராக நான் நன்கறிவேன். கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாது அப்பிரதேசத்திலுள்ள சகல சமூகங்களையுஞ் சார்ந்த மக்களுக்கும் உதவும் பொருட்டு அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளை நான் மிகுந்த ஆர்வத்தோடு அவதானித்து வந்துள்ளேன்.

ஓர் அரசியல் வாதியாகவும் அவரது பகுதி மக்களுக்கும் நாட்டுக்கும் நல்லுதவி புரியும் ஒரு சீராளனாகவும் அவர் நீண்டகாலம் சேவையாற்ற வேண்டுமென நான் அவரை வாழ்த்துகின்றேன்.

எஸ். தொண்டமான்
சுற்றுலா, கிராமியத் தொழிற்றுறை அமைச்சர்.

# Message from Hon. A.C.S. Hameed M.P. Minister of Justice and Minister of Higher Education



I have known Mr. Majeed for over 32 years better personally than as a Parliamentarian, and over the years I have come to value much his friendship and his contrbution as a Parliamentarian who has served the constituency. uninterrupted for three decades, a very remarkable achievement for any public figure.

If Mr. Majeed has achieved this distinction. it is not only because of the confidence and the loyalty of the voters but due to his own persona, qualities of dedication and commitment to the service of the people.

Mr. Majeed has the distinction of being first in many fields. He was the first Muslim graduate produced by the Eastern province. He is also the first Eastern Province M.P., to represent a constituency for such a long period. The Eastern Province is a crucial area for the Muslim of this country largely because the largest concentration of Muslims in this country is in that province That part of the country being in the periphery had not, in earlier times, been included in the agenda for develop Nment. ow matters have changed. This is now being hindered by the ethnic conflict.

Therefore, the responsibility of Muslim Parliamentarians from that region is an onerous one.

It is quite fortunate Muslims of that area to have Mr. Majeed as a representative. The affairs of the Muslims are safe in his hands.

I value much Majeed's friendship and many personal qualitiesl He must serve his people for many more years. While congratulating Mr. Majeed on this occasion, I wish him good health and long life so that he could continue to serve his people.

**A.C.S. Hameed**
**Minister of Hiaher Education**

கௌரவ நீதி, உயர்கல்வி அமைச்சர்

## அல் - ஹாஜ் A. C. S. ஹமீட் எம். பி. அவர்கள்

ஆங்கிலத்தில் அளித்த ஆசிச் செய்தியின் தமிழ் மொழியாக்கம்.

ஜனாப் மஜீட் அவர்களை 32 ஆண்டுகளுக்கு மேலாகப் பாராளுமன்ற உறுப்பினரென்ற விதத்தைவிடக் கூடுதலாகத் தனிப்பட்டமுறையில் நானறிவேன். இவ்வாண்டுகளில் அவரது நட்புறவையும், பாராளுமன்ற உறுப்பினராக அவரது பங்களிப்பையும் நான் பெரிதும் மதிக்கலானேன். மூன்று தசாப்தங்களாக தமது தொகுதி மக்களுக்கு அவராற்றிய சேவை, பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள ஒருவரென்ற முறையில் மிகச் சிறப்புமிக்க சாதனையாகும்.

இத்தனிச் சிறப்பை ஜனாப் மஜீத் சாதித்துள்ளாரென்றால் அது அவரது வாக்காளர்கள் அவர் மீது வைத்துள்ள நம்பிக்கையினாலும் விசுவாசத்தினாலும் மட்டுமன்றி அர்ப்பணிப்புடனும் அளவற்ற ஈடுபாட்டுடனும் மக்களுக்குச் சேவை யாற்றுகின்ற அவரது சுயமான தனிப்பட்ட பண்புகளாகும்.

ஜனாப் மஜீட் அவர்கள் அனேகதுறைகளில் முதலாமவரென்ற தனிச் சிறப்பைப் பெற்றுள்ளார். கிழக்கு மாகாணத்தில் உதித்த முதலாவது முஸ்லிம் பட்டதாரி இவரே. ஒரு தேர்தல் தொகுதியை இவ்வளவு நீண்டகாலத்துக்குப் பிரதி நிதித்துவப் படுத்திய முதலாவது கிழக்கு மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரும் இவர்தான். இந்நாட்டு முஸ்லிம்கள் மிகச்செறிவாக வாழ்கின்ற மாகாணம் என்ற முறையில் கிழக்கு மாகாணம் இந்நாட்டு முஸ்லிம்களுக்கு மிக முக்கியமான பிரதேச மாகும். நாட்டின் புறப்பரப்பில் இப்பகுதி அமைந்துள்ளதனால் முன்னைய காலங் களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் இதற்கு இடமளிக்கப் பட வில்லை, இப்போது சூழ்நிலை மாறிவிட்டது. இனமுரண்பாடு இப்போது இதற்கு இடையூறாக நிற்கின்றது.

எனவே இப்பிரதேச முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மிகப் பெரும் பொறுப்பொன்றுள்ளது.

ஜனாப் மஜீட் அவர்களைப் பிரதிநிதியாகப் பெற்ற இப்பகுதி முஸ்லிம் மக்கள் உண்மையில் பாக்கிய சாலிகளே. முஸ்லிம் அலுவல்கள் அவர் சரங்களில் பாதுகாப்பைப் பெற்றுள்ளன.

ஜனாப் மஜீட் அவர்களின் நட்புறவையும் அவரின் தனிப்பட்ட அனேக பண்புகளையும் நான் பெரிதும் மதிக்கின்றேன். அவர் மேலும் பல்லாண்டுகள் அவரது மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும்.

இந்நன்னாளில் ஜனாப் மஜீட் அவர்களைப் பாராட்டுகின்ற அதே வேளையில் அவர் தொடர்ந்தும் அவரது மக்களுக்குச் சேவையாற்றும் வண்ணம் அவருக்கு நல்ல சுக நலமும் நீண்ட ஆயுளும் கிடைக்க வேண்டுமெனவும் வாழ்த் துகிறேன்.

**A.C.S. ஹமீட்**
**நீதி, உயர்கல்வி அமைச்சர்.**

# Message from Hon. P. Dayaratna M. P.
**Minister of Reconstruction, Rehabilitation and Social Welfare**



To write a note on Mr. M.A. Abdul Majeed is a pleasure. He is a Muslim admired by all communities of Ampara District. His early education in Shivananda Vidyalaya, run by Ramakrishna Mission where children of all three communities and all religions study together, laid the foundation for this admiration.

His higher education later in the University, provided him the understanding and exposure needed for living in harmony in a multi-national, multi-religious society. Keeping to his respected family traditions he contributed his share as an Educationist, and as a social worker in the field of Education and in co-operative movement.

Once people of pottuvil where Tamils and Muslims had equal share of population voted him to be their Member of Parliament nearly uncontested as his only opponent lost his deposit. Mr. Abdul Majeed, who has more than 32 years of political experience, can contribute a lot further to bring back the much needed communal harmony and peace to the ongoing conflict.

I wish Mr. Majeed longer life and a prosperous political career.

**P. Dayaratna**
**Minister of Reconstruction,**
**Rehabilitation and Social Welfare**

பாராட்டு விழா சிறப்பு மலருக்கு

# கௌரவ புனரமைப்பு புனர்வாழ்வு சமூக நலத்துறை அமைச்சர் P. தயாரட்ண M.P. அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

(ஆங்கில மூலத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு)

ஜனாப் அப்துல் மஜீட் அவர்களைப் பற்றிக் குறிப்பொன்றை எழுதுவதே மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அவர் அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல சமூகத் தினரும் வியந்து பாராட்டுகின்ற ஒரு முஸ்லிம். இராமகிஷ்ன மிஷனால் நடாத்தப் படுவதும் மூன்று சமூகத்தினையும் சகல சமயங்களையும் சார்ந்த பிள்ளைகளும் ஒன்றிணைந்து கற்பதுமான சிவானந்தா வித்தியாலயத்தில் இவர் பெற்ற ஆரம்பக் கல்வி இவ்வாறு இவர் வியந்து போற்றப் படுவதற்கு அத்திவாரமாக அமைந்தது.

பின்னர் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற உயர்கல்வி பல இனங் களும் பல சமயங்களும் கொண்ட சமுதாயமொன்றில் இணக்கமுடன் வாழ்வதற்குத் தேவையான புரிந்துணர்வையும், சூழ்வளாவு நிலையினையும் இவருக்கு வழங்கியது. மிகக் கண்ணியமான இவரது குடும்பப் பாரம் பரியங்களுக்கு ஏற்ற வகையில் இவர் ஒரு கல்வியாளனாகவும், கல்வித்துறையிலும் கூட்டுறவு இயக்கத்திலும் ஒரு சமூக சேவையாளராகவும் தமது பங்கினை ஆற்றினார்.

ஒரு சந்தர்ப்பத்தில் தமிழரும் முஸ்லிம்களும் சனத்தொகையில் சமமான பங்கினைக் கொண்ட பொத்துவில் மக்கள் இவருக்கெதிராகப் போட்டியிட்ட ஒரே யொரு வேட்பாளரும் கட்டுப்பணத்தை இழக்கும் வகையில் ஓரளவிற்குப் போட்டி யின்றியே இவரைத் தமது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிந்தெடுத்தனர். அரசியலில் 32 ஆண்டுகளுக்கு மேலான அனுபவத்தைக் கொண்ட ஜனாப் அப்துல் மஜீட் அவர்கள் தற்போது தொடர்ந்து இடம்பெறுகின்ற முரண்பாட்டினைத் தீர்ப் பதற்கு மிக அவசியமாகத் தேவைப்படும் சமூக இணக்கத்தையும் சமாதானத்தையும் மீண்டும் கொண்டுவருவதற்கு மேலும் பெருமளவு பங்களிக்கலாம்.

ஜனாப் மஜீட் அவர்கள் நீண்ட ஆயுளையும் சுபீட்சமான அரசியல் வாழ்வினையும் பெறவேண்டுமென நான் வாழ்த்துகின்றேன்.

**பி. தயாரட்ண**
புனரமைப்பு, புனர்வாழ்வு,
சமூகநலத்துறை அமைச்சர்.

# Message from Hon. P. Dayaratna M. P.

## Minister of Reconstruction, Rehabilitation and Social Welfare



To write a note on Mr. M.A. Abdul Majeed is a pleasure. He is a Muslim admired by all communities of Ampara District. His early education in Shivananda Vidyalaya, run by Ramakrishna Mission where children of all three communities and all religions study together, laid the foundation for this admiration.

His higher education later in the University, provided him the understanding and exposure needed for living in harmony in a multi-national, multi-religious society. Keeping to his respected family traditions he contributed his share as an Educationist, and as a social worker in the field of Education and in co-operative movement.

Once people of pottuvil where Tamils and Muslims had equal share of population voted him to be their Member of Parliament nearly uncontested as his only opponent lost his deposit. Mr. Abdul Majeed, who has more than 32 years of political experience, can contribute a lot further to bring back the much needed communal harmony and peace to the ongoing conflict.

I wish Mr. Majeed longer life and a prosperous political career.

**P. Dayaratna**
**Minister of Reconstruction,**
**Rehabilitation and Social Welfare**

பாராட்டு விழா சிறப்பு மலருக்கு

# கௌரவ புனரமைப்பு புனர்வாழ்வு சமூக நலத்துறை அமைச்சர் P. தயாரட்ண M.P. அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

(ஆங்கில மூலத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு)

ஜனாப் அப்துல் மஜீட் அவர்களைப் பற்றிக் குறிப்பொன்றை எழுதுவதே மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அவர் அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல சமூகத்தினரும் வியந்து பாராட்டுகின்ற ஒரு முஸ்லிம். இராமகிஷ்ன மிஷனால் நடாத்தப் படுவதும் மூன்று சமூகத்தினையும் சகல சமயங்களையும் சார்ந்த பிள்ளைகளும் ஒன்றிணைந்து கற்பதுமான சிவானந்தா வித்தியாலயத்தில் இவர் பெற்ற ஆரம்பக் கல்வி இவ்வாறு இவர் வியந்து போற்றப் படுவதற்கு அத்திவாரமாக அமைந்தது.

பின்னர் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற உயர்கல்வி பல இனங்களும் பல சமயங்களும் கொண்ட சமுதாயமொன்றில் இணக்கமுடன் வாழ்வதற்குத் தேவையான புரிந்துணர்வையும், சூழ்வளாவு நிலையினையும் இவருக்கு வழங்கியது. மிகக் கண்ணியமான இவரது குடும்பப் பாரம் பரியங்களுக்கு ஏற்ற வகையில் இவர் ஒரு கல்வியாளனாகவும், கல்வித்துறையிலும் கூட்டுறவு இயக்கத்திலும் ஒரு சமூக சேவையாளராகவும் தமது பங்கினை ஆற்றினார்.

ஒரு சந்தர்ப்பத்தில் தமிழரும் முஸ்லிம்களும் சனத்தொகையில் சமமான பங்கினைக் கொண்ட பொத்துவில் மக்கள் இவருக்கெதிராகப் போட்டியிட்ட ஒரே யொரு வேட்பாளரும் கட்டுப்பணத்தை இழக்கும் வகையில் ஓரளவிற்குப் போட்டி யின்றியே இவரைத் தமது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிந்தெடுத்தனர். அரசியலில் 32 ஆண்டுகளுக்கு மேலான அனுபவத்தைக் கொண்ட ஜனாப் அப்துல் மஜீட் அவர்கள் தற்போது தொடர்ந்து இடம்பெறுகின்ற முரண்பாட்டினைத் தீர்ப் பதற்கு மிக அவசியமாகத் தேவைப்படும் சமூக இணக்கத்தையும் சமாதானத்தையும் மீண்டும் கொண்டுவருவதற்கு மேலும் பெருமளவு பங்களிக்கலாம்.

ஜனாப் மஜீட் அவர்கள் நீண்ட ஆயுளையும் சுபீட்சமான அரசியல் வாழ்வினையும் பெறவேண்டுமென நான் வாழ்த்துகின்றேன்.

**பி. தயாரட்ண**
புனரமைப்பு, புனர்வாழ்வு,
சமூகநலத்துறை அமைச்சர்.

# வர்த்தக வாணிப அமைச்சர்
# கௌரவ A.R. மன்சூர் M.P. அவர்கள்
# வழங்கிய ஆசிச் செய்தி.



எனது இனிய நண்பன் ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீது அவர்கள் தொடர்ந்து 32 ஆண்டுகள் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்து வருவதற்கு விழா எடுக்கப்படுவது கண்டு நான் பெருமிதம் அடைகிறேன். கிழக்கிலங்கை அரசியல் வாணில் இவ்விதம் தொடர்ந்து பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த முஸ்லிம் இவராகத்தான் இருப்பார் என நினைக்கின்றேன்.

முதன் முதலாக சம்மாந்துறை பட்டண சபைத் தலைவராக அரசியல் வாணில் பிரவேசித்த இவர் 1956 ஆம் ஆண்டிலே கல்முனைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டார். அன்று, அத்தேர்தலில் வெற்றிவாகை சூட முடியாமற் போனாலும், சம்மாந்துறை பட்டண சபையின் தலைவராகத் தொடர்ந்து மக்களுக்குச் சேவையாற்றி வந்தார். இதன் காரணமாகத்தான் 1960 ஆம் ஆடிண்லே பொத்துவில் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பலமுறை தேர்தலில் சுயேட்சை அங்கத்தவராக வெற்றியீட்டிய பெருமை இவருக்குரியது. 1970 ஆம் ஆண்டு முதன்முறையாக ஐ. தே. கட்சியில் சேர்ந்து அபேட்சகராக போட்டியிட்டு வெற்றியீட்டினார்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவிருந்து அரிய பெரிய தொண்டுகளை ஆற்றிவந்துள்ளார். இவருடைய அரசியல் வாழ்விலே இவரடைந்த வெற்றிகளுக்கு பெரும்பாலும் உழைத்தவர்கள் சம்மாந்துறை வாழ் மக்கள் என்றால் அது மிகையாகாது.

இவரை எமது பகுதி மக்கள் ''பீ. ஏ.'' என்று அன்பாக கூறுவர். காரணம் இப்பகுதியிலே கொழும்புப் பல்கலைக் கழகத்திலே முதன் முதலாகப் பட்டதாரியாகத் தேறிய கிழக்கிலங்கை முஸ்லீம் என்ற பெருமை இவருக்கு இருப்பதனாலேயே யாகும்.

இவர் எல்லாருடனும் இனிமையாகப் பழகும் சுபாவம் உடையவர். இன்னாரது பாராளுமன்றக் காலத்தில், இப்பகுதி மக்கள் பலதரப்பட்ட பொருளாதார, சமூக கல்வி அபிவிருத்திகளைப் பெற்றுள்ளனர். குறிப்பாக சென்ற ஐ. தே. கட்சியின் அரசுக் காலத்தில் மூவாயிரத்துக்கும் அதிகமான வீடுகளை அமைப்பதற்குக் காரணமானவர் ஜனாப் மஜீத் என்றால் அதனை அனைரும் ஏற்றுக் கொள்வர்.

இவரது காலத்தில் பல கல்விக் கூடங்கள் கட்டப்பட்டு அவை இன்று பொலிவுடன் திகழ்கின்றன.

நண்பர் மஜீத் அவர்கள் தொடர்ந்தும் மக்கள் பிரதிநிதியாக இருந்து அவரது நற்சேவைகள் இப்பகுதி மக்களுக்கு கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

''வஸ்ஸலாம்''

**ஏ. ஆர். மன்சூர்**
கௌரவ வர்த்தக வாணிப அமைச்சர்.

# Message from Lt. Gen. G. D. G. N. Seneviratne VSV Governor-Northern & Eastern Provinces

It gives me great pleasure to send this message on the occasion of the commemoration of thirty years of service by Hon. M. A. Abdul Majeed, M. P. as a parliamentarian. I am pleased to place on record that Mr. Majeed has been the first young Arts graduate in the area. He was fondly referred to as MR BA by his constituents because of this. Mr. Majeed has rendered yeomen service during the 32 years without any racial, religious or ethnic discrimination. Mr. Majeed is a simple person who can be approached, by his constituents at any time of need and redresses their grievances without delay.

Mr. Majeed hails from a very respectable family in his area and is held in high esteem by the people of all religious in the Ampara District. Mr. Majeed has rendered dedicated service during his career as a parliamentarian and as Deputy Minister of Posts and Telecommunications. His services have been recognised by His Excellency the President and he has appointed him recently as the Project Minister of Handloom Industries.

I wish Mr. Majeed long life and many more years of dedicated service to his country.

**Lt. Gen. G. D. G. N. Seneviratne VSV**
**Governor-Northern & Eastern Provinces**

## வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர்
## லெப். ஜென. ஜீ. டி. ஜீ. என். செனெவிரத்ன VSV அவர்கள்
### ஆங்கிலத்தில் வழங்கிய ஆசிச் செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்பு.

பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ எம். ஏ. அப்துல் மஜீத் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் முப்பத்திரெண்டு ஆண்டுச் சேவையை நிறைவு செய்யும் நினைவு விழாவிற்கு இவ்வாசிச் செய்தியை அனுப்புவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். அப்பகுதியில் முதலாவது இளம் கலைப்பட்டதாரி ஜனாப் மஜீத் அவர்களே என்பதை எழுத்தில் பொறிப்பதில் நான் பெருமையடைகின்றேன். இதன் காரணமாகவே அவரது தொகுதி மக்கள் அவரை 'மிஸ்டர் பீ. ஏ.' என அன்புடன் அழைத்தனர். ஜனாப் மஜீத் அவர்கள் கடந்த 32 ஆண்டுகளாக சாதி சமய, இனப்பாகுபாடு ஏதுமின்றி அளப்பரிய சேவை ஆற்றியுள்ளார். தொகுதி மக்கள் எவரும் தமது குறைகளை எடுத்துத் தாமதமின்றி நிவாரணம் பெறுவதற்கு எந்நேரத்திலும் அணுகக் கூடியதோர் எளிமையான மனிதர் ஜனாப் மஜீத் அவர்கள்.

ஜனாப் மஜீத் அவர்கள் அவரது பகுதியில் மிகக்கண்ணியமான குடும்பத்தில் பிறந்தவர். அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல சமய மக்களாலும் மிக உயர்வாக மதிக்கப்படுபவர். ஜனாப் மஜீத் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகவும், அஞ்சல், தொலைத்தொடர்பு பிரதி அமைச்சராகவும் பணிபுரிந்த காலத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் சேவையாற்றியுள்ளார். அவரது சேவைகளை மேதகு ஜனாதிபதி அவர்கள் அங்கீகரித்துள்ளதோடு அண்மையில் அவரைக் கைத்தறிக் கைத்தொழிலுக்கு கருத்திட்ட அமைச்சராகவும் நியமித்துள்ளார்.

ஜனாப் மஜீத் அவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்று மேலும் பல்லாண்டுகள் அர்ப்பணிப்பான சேவையை நாட்டுக்கு ஆற்ற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

லெப். ஜென. ஜீ. டி. ஜீ. என், செனெவிரத்ன விஎஸ்வி
ஆளுநர் - வடக்கு, கிழக்கு மாகாணங்கள்

## Message from Hon. Al - Haj A. H. M. Azwer, M. P., Minister of State for Muslim Religious & Cultural Affairs.



It gives me great pleasure to send this message of felicitation on the occasion of the completion of 32 continuous and uninterrupted years of service as a Parliamentarian by M. A. Abdul Majeed Esqr., M. P. It is a rare feet for any person in Sri Lanka to serve as Parliament arian continuously for such a long time without interruption. There are only one or two others who have this rare achievement to their credit. This indeed is a distinguished record in the annals of our Parliamentary history.

Mr. Abdul Majeed comes from a family which has been traditionally associated with cultural, social, religious and political matters. His grand father Abdul Majeed Vanniyar contested for the state Council. His uncle late Mr. A. M. Merza was a Member of the House of Representatives from 1952 to 1956, and his brother - in - law late M. I. M. Abdul Majeed was representing ths Pottuvil Electorate. As such the entry of Mr. Abdul Majeed to Parliament was nothing, but natural in keeping with a family tradition.

It is interesting to note that Mr. Abdul Majeed is more popularly known the Eastern part of Sri Lanka as "B. A. Majeed" for the reason that he was the first to graduate from his area and from that time onwards his degree has become part of his name and up till today he is more popularly known as "B. A. Majeed."

After a short period when he taught at Shivananda Vidyalaya, Batticaloa, he entered local politics and was elected uncontested to the Sammanthurai Town Council and remained as Chairman until he, on his own, gave it up after several years.

Entering Parliament as an Independent in 1960 and winning many subsequent elections as an Independent candidate, is a clear indication and eloquent teslimay to his unfailing prestige and propularity. Later he joined the U. N. P. and remains to this day as a very royal member of the Party holding responsible posts of Deputy Minister, Project Minister District Minister and Acting Minister on several occasions.

I had the unique privilege of interpreting Dr. T. B. Jayah's speech 32 years ago at a a function held to felicitate Hon. M. A. Abdul Majeed who was the first Muslim Graduate of this area. It was also a Meelad-un-Nabi function. There is a pleasant stir of historical memories in my mind when I vividly recall the prophetic words of Dr. Jayah's who saw in Mr. Majeed signs of future leadership and greatness. Today I am more than overjoyed to see this statement of Dr. Jayah come true.

Mr. Majeed is a personality endowed with the rare qualities of simplicity and humility. It is his conviction of courage that he maintains his independence of out look. He has always stood for interracial and inter-religious harmony and, even in the height of ethnic disturbances in the Eastern Province, he used to freely visit any area belonging to any community without being harmed in his pursuit to foster social, ethnic and racial harmony. This has brought him a permanent and abiding goodwill and affection of the people.

May Allah bestow his blessings on Mr. M. A. Abdul Majeed for many more years of continuous and selfless service.

**Alhaj A. H. M. Azwer, M. P.**
Minister of State for Muslim
Religious & Cultural Affairs

# முஸ்லிம் சமய கலாச்சார விவகார இராஜாங்க அமைச்சர் கௌரவ அல் - ஹாஜ் A. H. M. அஸ்வர் எம். பி. அவர்கள்

### ஆங்கிலத்தில் அளித்த ஆசிச் செய்தியின் தமிழ் மொழியாக்கம்.

ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக 32 ஆண்டுகள் தொடர்ச்சியாக இடையீடற்று ஆற்றியுள்ள சேவை நிறைவினைப் பாராட்டி இவ்வரசிச் செய்தியை அனுப்புவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கையரொருவர் பாராளுமன்ற உறுப்பினராக இவ்வளவு நீண்டகாலம் தொடர்ச்சியாக இடையீடற்ற சேவை ஆற்றியுள்ளாரென்றால் அது உண்மையிலேயே அரியதோர் சாதனையாகும். இத்தகைய அரிய சாதனை புரிந்துள்ளோர் ஓரிருவரே. எமது பாராளுமன்ற வரலாற்றுப் பதிவேடுகளில் இது புகழ்மிக்கதோர் சாதனையே.

ஜனாப் அப்துல் மஜீத் அவர்கள் கலாச்சார, சமூக, சமய, அரசியல் விடயங்களில் பாரம்பரியமாக ஈடுபாடுடைய குடும்பத்தைச் சாந்தவர். இவரது பாட்டனாரான அப்துல் மஜீத் வன்னியனார் அவர்கள் அரச பேரவைக்குப் போட்டியிட்டவர். இவரது மாமனாரரான காலஞ் சென்ற ஜனாப் ஏ. எம். மேர்சா அவர்கள் 1952 முதல் 1956 வரை சனப்பிரதிநிதிகள் சபையின் உறுப்பினராயிருந்தவர். இவரது மச்சான் காலஞ்சென்ற ஜனாப் எம். ஐ. எம். அப்துல் மஜீத்' அவர்கள் பொத்துவில் தொகுதி உறுப்பினராயிருந்துள்ளார். எனவே ஜனாப் அப்துல் மஜீத் அவர்கள் பாராளுமன்றத்துள் பிரவேசித்தமை குடும்ப மரபின்படி இயல்பானதே.

ஜனாப் அப்துல் மஜீத் அவர்கள் இலங்கையின் கிழக்குப்பகுதியில் கூடுதலாக ''பீ. ஏ. மஜீத்'' என்றே பிரபலம் பெற்றுள்ளாரென்பது சுவாரஸ்யமான விடயமாகும். அப்பகுதியின் முதற்பட்டதாரியென்ற முறையில் அன்றிலிருந்து இன்று வரை அவரது பெயரின் ஒரு பகுதியாக அவரது பட்டமும் இணைந்து ''பீ. ஏ. மஜீத் என்று பிரபலமாக அழைக்கப்படுகின்றார்.

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் சிறிதுகாலம் ஆசிரியராயிருந்து பின்னர் உள்ளூர் அரசியலில் பிரவேசித்த அவர் சம்மாந்துறை நகர சபைக்குப் போட்டியின்றியே தெரிவு செய்யப்பட்டு தாமாகவே பதவி துறக்கும்வரை அனேக ஆண்டுகள் அதன் தலைவராகச் சேவை புரிந்துள்ளார்.

1960 இல் சுயேச்சை உறுப்பினராகப் பாராளுமன்றத்தில் பிரவேசித்து அதனைத் தொடர்ந்து வந்த பல தேர்தல்களில் சுயேச்சை அபேட்சகராகவே தெரிவு செய்யப்பட்டமை, என்றுங் குறையாத அவரது செல்வாக்கிற்கும் பிரபல்யத்திற்கும் மிகத் தெளிவான சிறந்த சான்றாக விளங்குகின்றது. பின்னர் ஐக்கிய தேசிய கட்சியில் சேர்ந்த அவர் இன்றும் அதன் விசுவாசமான உறுப்பினராக, பல சந்தர்ப்பங்களில் பிரதி அமைச்சர், கருத்திட்ட அமைச்சர், மாவட்ட அமைச்சர், பதில் அமைச்சர் ஆகிய பொறுப்பான பதவிகளை வகித்து வந்துள்ளார்.

ஜனாப் மஜீத் அவர்கள் எளிமை, அடக்கம், ஆகிய அருங்குணங்களைக் கொண்டவர். அவரது அசைக்க முடியாத துணிவும் உறுதியும் ஒரு சுதந்திரமான நோக்கை அவருக்கு வழங்கின. அவர் என்றும் இனங்களுக்கிடையிலும் சமயங்களுக்கிடையிலும் இணக்கம் நிலவவேண்டுமெனப் போராடியவர். கிழக்கு மாகாணத்தில்

இனக்கலவரங்கள். உச்சக்கட்டத்தையடைந்த வேளைகளிலும் சமூகங்களுக்கும் சமயங்களுக்கும் இனங்களுக்குமிடையில் இணக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு எந்தவொரு சமூகத்தையுஞ் சார்ந்த எப்பகுதிக்கும் தீங்கின்றிச் சுதந்திரமாகச் சென்று திரிந்தவர். இது மக்களின் நிரந்தரமான நல்லெண்ணத்தையும் அன்பாதரவையும் அவருக்கு ஈட்டிக் கொடுத்தது.

கௌரவ அப்துல் மஜீத் அவர்கள் இப்பகுதியின் முதல் முஸ்லிம் பட்டதாரியானதை முன்னிட்டு 33 வருடங்களிற்கு முன் நடைபெற்ற வைபவத்தில் கலாநிதி T.B. ஜயா அவர்களின் பேச்சை மொழிபெயர்க்க எனக்கு சந்தர்ப்பம் கிட்டியது. அந்நாள் மீலாதுன் நபி கொண்டாட்டமும்கூட அன்று கலாநிதி ஜயா அவர்கள் ஜனாப் மஜீத் வருங்காலத்தில் ஒரு சிறந்த தலைவராக வரக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளது. என ஆருடம் கூறியது எனது மனதில் இனிமையான வரலாற்று ஞாபகங்களை அலற வைக்கிறது. இன்று கலாநிதி ஜயா அவர்களின் ஆருடம் உண்மையானதில் எனக்கு அளவிலா இன்பத்தை ஊட்டுகிறது.

ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் தொடர்ந்து தன்னலமற்ற சேவை புரியும் வண்ணம் அல்லாஹ் அருள்புரிவானாக!

**அல்-ஹாஜ் ஏ. எச். எம் அஸ்வர்**
**முஸ்லிம் சமய கலாச்சார விவகார இராஜாங்க, அமைச்சர்.**

# Message from Hon. M. L. M. Aboosally M. P., Minister of Plantation Services



It gives me great pleasure to send a message, for the souvenir which is being published to mark 32 years of service rendered by Hon. M. A. Abdul Majeed as a Parliamentarian, to the people of the Eastern Province.

Hon. Abdul Majeed who graduated from the University of Ceylon as a B. A. Hon. (Econ) was a distinguished old boy of Jaffna Central College.

He started his career, as a teacher at Shivananda Vidyalaya, Batticaloa where he had his secondary education. He also served as a Social Service officer in Batticaloa South.

He entered politics and served as the Chairman of Sammanthurai Town Council. He was in Local Government politics from 1955 - 1961. He then entered Parliamentary politics on the Independent ticket and was M. P. Pothuvil from 1960 - 1965 as an Independent Member. From 1970 - 1977 he was re-elected M. P. Pothuvil as member of the UNP. In 1977 he was elected M. P. of Sammanthurai. He was appointed M. P. on the National List in 1989. He has held the following portfolios, with distinction.

Deputy Minister / Land & Agriculture, Deputy Minister / Power & Energy, Deputy Minister / Posts and Telecommunications, District Minister / Batticaloa, and presently Project Minister of Handloom Industries.

He is dedicated to serving the people of his area, and is deeply involved in social service activities, such as development of schools, utilization of agricultural lands, and irrigation facilities and creating employment opportunities for the unemployed. He also contributes towards social welfare projects, rural electrification schemes and health services schemes, amongst other public works.

He has rendered an invaluable service to his people, and I take this opportunity to wish him continued success in the years ahead, in his contribution to the national cause.

**M. L. M. Aboosally**
**Minister of Plantation Services.**

## சிறப்பு மலருக்கு
## பெருந்தோட்டச் சேவை அமைச்சர் கௌரவ
## எம். எல். எம். அபுசாலி M. P. அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி
(ஆங்கில மூலத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு)

கிழக்கு மாகாண மக்களின் பாராளுமன்ற உறுப்பினராக கௌரவ எம். ஏ. அப்துல் மஜீத் அவர்கள் ஆற்றியுள்ள 32 ஆண்டுச் சேவையினைக் குறித்து வெளியிடப்படும் நினைவு மலருக்கு ஆசிச் செய்தியொன்றை அனுப்புவது எனக்குப் பெருமகிழ்ச்சியை அளிக்கிறது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் பீ. ஏ. சிறப்புப் பட்டம் பெற்ற கௌரவ அப்துல் மஜீத் அவர்கள் யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் புகழ்பெற்றதோர் பழைய மாணவராவார்.

அவர் தம் தொழிலை தாம் இடைநிலைக் கல்விகற்ற மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் ஓர் ஆசிரியராக ஆரம்பித்தார். அவர் மட்டக்களப்பு தெற்கில் ஒரு சமூகசேவை உத்தியோகத்தராகவும் சேவையாற்றியுள்ளார்.

அவர் அரசியலில் பிரவேசித்து சம்மாந்துறை நகரசபைத் தலைவராக பணியாற்றினார். அவர் 1955 முதல் 1961 வரை உள்ளூராட்சி அரசியலில் ஈடு பட்டிருந்தார். அதன்பின்னர் சுயேச்சை வேட்பாளராகப் பாராளுமன்ற அரசியலில் பிரவேசித்த அவர் 1960 முதல் 1965 வரை பொத்துவில் பாராளுமன்ற உறுப் பினராக சுயேச்சையாக இயங்கினார். 1970 முதல் 1977 வரை ஐ. தே. க வேட் பாளராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டு பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினராக விளங்கினார். 1977 இல் அவர் சம்மாந்துறைப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். 1989 இல் தேசிய நிரலிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவர் பின்வரும் பதவிகளைத் தனிச் சிறப்புடன் வகித்துள்ளார்.

பிரதி அமைச்சர் / காணி கமத்தொழில், பிரதி அமைச்சர் / மின்வலு சக்தி, பிரதி அமைச்சர் / தபால் தந்திப் போக்குவரத்து, மாவட்ட அமைச்சர் / மட்டக்களப்பு, அத்துடன் தற்போது கைத்தறிக் கைத்தொழிலுக்கான கருத்திட்ட அமைச்சர்.

அவர் தமது பகுதி மக்களின் சேவைக்கெனத் தன்னை அர்ப்பணித்துள் ளார். அத்துடன் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல், கமத்தொழிற் காணிகளையும் நீர்ப்பாசன வசதிகளையும் பயன்படுத்துதல், தொழிலற்றோருக்குத் தொழில் வாய்ப் புக்களை உருவாக்குதல் போன்ற சமூக சேவை நடவடிக்கைகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். ஏனைய பொதுப்பணிகளோடு சமூகநலக் கருத்திட்டங்கள், கிராம மின்னிணைப்புத் திட்டங்கள், சுகாதார சேவைத் திட்டங்கள் என்பவற்றிற்கும் அவர் பங்களித்துள்ளார்.

அவர் தமது மக்களுக்கு அளப்பரிய சேவையினை ஆற்றியுள்ளார். எதிர் வரும் ஆண்டுகளிலும் தேசிய நலனுக்கான அவரது பங்களிப்பில் அவர் தொடர்ந்தும் வெற்றியடைய வேண்டுமென இத்தருணத்தில் அவரை நான் வாழ்த்துகிறேன்.

**எம். எல். எம். அபுசாலி**
பெருந்தோட்டச் சேவைகள் அமைச்சர்.

# Message from Hon. Al - Haj M. E. H. Maharoof M. P., Minister of State for Ports of Shipping



I am extremely pleased to send a message for the Souvenir to mark 32 years of service as a Parliamentarian by Hon. M. A. Abdul Majeed, a senior Member of Parliament from the Eastern Province.

In one way, Political life can be considered as a Social Service. A person is elected and rejected by the people under the democratic set-up. This is decided by the people on the performance and achievements of a politician. 32 Years of service is a long period in a persons lifetime. Hon. Abdul Majeed is one of the few Politicians in the present Parliament. who has achieved this milestone in Political history.

Hon. M. A. Abdul Majeed was the first Graduate among the Muslims in the Eastern Province. During his political tenure, he has been a Chairman of the Sammanthurai Town Council, a Member of Parliament, a Deputy Minister, a District Minister and now a Project Minister.

I have known him since 1966. He is a person who has been outspoken, and never failed to speak for his community. He has contri buted immensely to the welfare and upliftment of the people of Pottuvil, Sammanthurai and the Muslim farmers in the Amparai district.

During his Parliamentary career he has travelled widely on parliamentary delegations and represented in various Seminars where he has never failed to speak of the people of Sri Lanka and their upliftment.

Hon. M. A. Abdul Majeed has been a witness to all the happenings in Parliament during the past 32 years and has withstood many storms and trials of parliamentary life. I see him as a model Parliamentarian.

I wish Hon. M. A. Abdul Majeed good health and long life, to continue his good work as a successful Parliamentarian.

**M. E. H. Maharoof**
Minister of State for Ports & Shipping and
M. P. for Trincomalee District

## சிறப்பு மலருக்கு
## துறைமுகங்கள், கப்பற்றுறை இராஜாங்க அமைச்சர் கௌரவ அல்-ஹாஜ் எம். ஈ. எச். மஹ்ரூப் M. P. அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி (ஆங்கில மூலத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு)

கிழக்கு மாகாணத்தின் ஒரு சிரேட்ட பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ எம். ஏ. அப்துல் மஜீத் அவர்கள் பாராளுமன்றத்தவராக 32 ஆண்டுகள் ஆற்றியுள்ள சேவையைக் குறித்து வெளியிடப்படும் நினைவு மலருக்கு ஆசிச் செய்தியொன்றை அனுப்புவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

அரசியல் வாழ்க்கையானது ஒருவகையில் ஒரு சமூகசேவையாகக் கருதப் படலாம். ஜனநாயக அமைப்பின் கீழ் மக்கள் ஒருவரைத் தெரிவு செய்கின்றனர் அல்லது நிராகரிக்கின்றனர். ஓர் அரசியல் வாதியின் செயலாற்றுகையையும், சாதனைகளையும் கொண்டு மக்கள் இதனைத் தீர்மானிக்கின்றனர். ஒருவரின் ஆயுட்காலத்தில் 32 ஆண்டுச் சேவையென்பது ஒரு நீண்ட காலமாகும். அரசியல் வரலாற்றில் இம்மைல்கல்லை எய்தியுள்ள தற்போதய பாராளுமன்ற அரசியல் வாதிகள் ஒரு சிலரில் கௌரவ அப்துல் மஜீத் ஒருவர்.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மத்தியில் முதலாவது பட்டதாரியாக விளங்கியவர் கௌரவ எம். ஏ. அப்துல் மஜீத் அவர்களே. அவரது அரசியல் பதவிக் காலத்தில் சம்மாந்துறை பட்டினசபைத் தலைவராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், பிரதி அமைச்சராகவும், மாவட்ட அமைச்சராகவும் விளங்கிய இவர் தற்போது கருத்திட்ட அமைச்சராக விளங்குகின்றார்.

1966 ஆம் ஆண்டு முதற்கொண்டே அவரை நான் அறிவேன். எப்போதும் மனந்திறந்து பேசுகின்ற அவர் தமது சமூகத்திற்காகக் குரலெழுப்ப ஒரு போதும் தவறியதில்லை. அம்பாரை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் விவசாயிகளையும், பொத்துவில், சம்மாந்துறை மக்களையும் மேம்படுத்தவும் அவர்களின் நலனுக்காகவும் அவர் அளப்பரிய பங்களிப்புச் செய்துள்ளார்.

அவரது பாராளுமன்றச் சேவையின் போது பாராளுமன்றத் தூதுக் குழுக்களில் அங்கம் வகித்துப் பல நாடுகளுக்குப் பயணமுஞ் செய்துள்ளார். பல்வேறு கருத்தரங்குகளில் பிரதிநிதியாகக் கலந்து கொண்டுமுள்ளார். அங்கெல்லாம் இலங்கை மக்களுக்காகவும் அவர்களின் மேம்பாட்டுக்காகவும் உரையாற்றுவதற்கு அவர் ஒரு போதும் தவறியதில்லை.

கௌரவ எம். ஏ. அப்துல் மஜீத் அவர்கள் கடந்த 32 ஆண்டுகளில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள்யாவற்றுக்கும் சாட்சியாக விளங்கியவர். பாராளுமன்ற உறுப்பினருக்கு இலக்கணமாக அவரை நான் காண்கிறேன்.

கௌரவ எம். ஏ. அப்துல் மஜீத் அவர்கள் வெற்றிகரமான ஒரு பாராளுமன்ற உறுப்பினராகத் தமது நல்ல பணியைத் தொடர்ந்து ஆற்றுவதற்கு நல்ல சுக நலமும் நீண்ட ஆயுளும் அவருக்குக் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

எம். ஈ. எச். மஹ்ரூப்
துறைமுகங்கள், கப்பற்றுறை இராஜாங்க அமைச்சர்.

# Message from Hon. Maithripala Senanayake M. P.



As the most senior Parliamentarian, it is my privilege to send a Message on the occasion of the Felicitation Ceremony to mark Hon. M. A. Abdul Majeed's Thirty Two years of service as a Parliamentarian.

Hon. M. A. Abdul Majeed has been a model parliamentarian. He is soft-spoken, Non-communal, non-racial and non-partisan in his outlook. He was never greedy for power or publicity. This was very evident specially during his period in parliament as an independant member. I still remember with gratitude the stand he took to support our party at the Press Bill.

During my tenure as Minister, Hon. Majeed was a frequent visitor to my office. The purpose of his visit has always been requests for the development of his area. Converting the Earthen Bunds to concrete structures in the River division of the Gal Oya Valley and the opening of the Straw Collecting Centre come to my mind. He also took great pains in developing the educational facilities of the Eastern Province.

Hon. Majeed has been a very vociferous advocate of communal harmony both in and outside parliament. This in no way prevented him from defending his community when the circumstances demanded. He always maintained that the Muslim community to which he belongs stood for a United Shri Lanka.

I wish him many more years of fruitful service.

**Hon. Maithripala Senanayake M. P.**

# கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரி பால சேனநாயக்க அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி
(ஆங்கில மூலத்தின் தமிழ் மொழியாக்கம்)

அதி சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினராகிய நான் கௌரவ எம். ஏ. அப்துல் மஜீத் அவர்களின் 32 ஆண்டுகள் பாராளுமன்ற சேவையைப் பாராட்டும் வைபவத்திற்குச் செய்தி அனுப்புவது எனது விஷேட உரித்தாகும்.

கௌரவ மஜீத் அவர்கள் ஒரு சிறந்த பாராளுமன்ற உறுப்பினர்க்கு எடுத்துக்காட்டாவர். மென்மையான பேச்சுடைய இவர் தனது செயல்பாட்டில் இன, மத, பக்கசார்பு வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாதவராகும். பாராளு மன்றத்தில் சுயேச்சை அங்கத்தவராக இருக்கும் பொழுது இச்செயல்பாட்டைக் குறிப் பாக அவதானிக்க முடிந்தது. பத்திரிகை மசோதாவில் பல சிக்கல்களின் மத்தியில் எங்களது கட்சியை ஆதரித்து வாக்களித்தது மறக்க முடியாத இனிய நினைவாகும்.

நான் மந்திரியாகப் பதவி வகிக்கும் காலத்தில் கௌரவ மஜீத் அவர்கள் பல தடவை வருகை தருவார். அவர் வருகைதந்த ஒவ்வொருதறுவாயும் தனது பிரதேசத்தின் முன்னேற்றத்திற்குரிய விடயங்களையும், திட்டங்களையுமே, உதவியாகக் கேட்பார். இவரின் பெருமுயற்சியால் தான் கல்லோயா ஆற்றுப்பாய்ச்சலில் உள்ள மண்கட்டுகள் எல்லாம் நிரந்தரக் கொங்கிறீட் கட்டுகளாக மாற்றப்பட்டதும், சம்மாந் துறை வைக்கோல் சேகரிப்பு நிலையம் நிறுவியதும் எனக்கு ஞாபகம் வருகின்றது, கிழக்கு மாகாணத்தின் கல்வி வசதியை முன்னேற்ற அரும்பாடுபட்டார்,

கௌரவ மஜீத் பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் இனஒற்று மைக்கு முன்னணியில் நின்று குரல் எழுப்பியவராவர். இவ்வாறிருந்தும் சந்தர்ப்பம் வரும்பொழுதெல்லாம் தனது சமூகத்தைப் பாதுகாப்பதில் பின்னின்றதில்லை, இவர் தனது சமூகமாகிய முஸ்லிம்கள் ஒரு ஐக்கிய சிறீலங்காவேயே விரும்புகின்றார்கள் என்ற கருதுகோளையுடையவராவார்.

இவர் பல்லாண்டு காலம் நற்சேவை செய்ய வாழ்த்துகிறேன்,

மைத்திரி பால சேனநாயக்க
பாராளுமன்ற உறுப்பினர்,

# Message from Hon. M. Haleem Ishak M. P.



Over thirty five years of public life and that too, thirty two years out of that searving as a representative of the people of the East in Parliament without a break is creditable indeed. The most Senior Parliamentarin today among the living who continues to be a member of Parliament is Hon. Maithripala Senanyka. Next to him comes my friend the first Muslim graduate from the East Hon. M. A. Abdul Majeed and Hon. A. C. S. Hameed Minister of Junstice & Higher Education

I have been asked by the "organising committee for the celebrations to mark the 32 years of Hon. Abdul Majeed M. P." to contribute a message to the proposed souvenir to be published. Hon. Majeed belongs to a Party which is opposed to policies of the party to which I belong to. Nevertheless, as a man who has made contributions to the upliftment of the poor and needy people of the Eastern province and the country and one who has won the confidence of the people of his electorate who have elected him to the legislative body in the country for over three decade cannot pass without a record of appreciation. Hon. Majeed's life from the beginning has been service oriented, starting his life as a teacher at Shivananda Vidyalaya; Social Service Officer of Batticaloa South; chairman of T. C. Sammanthurai; Deputy Minister; District Minister and now the Minister of Handloom Industry amply speaks of this achievement.

The beauty of and the achievement in public life is how small the number of enemies one has. I must state that Hon. Majeed has less enemies or hardly any one. He is an affable and a pleasent person of charming personality.

May I take this opportunity to wish him prayerfully for long and contended life and continued succss in his future ventures.

May Allah Bless him and the people whom he serve.

**M. Haleem Ishak M. P.**

# சிறப்பு மலருக்கு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ M. ஹலீம் இஷாக் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி

### (ஆங்கில மூலத்தின் தமிழ் மொழியாக்கம்)

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலான பொதுவாழ்க்கையில் முப்பத்திரெண்டு ஆண்டுகள் கிழக்கு மாகாண மக்களின் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்தில் இடையீடின்றித் தொடர்ச்சியாகச் சேவையாற்றியமை உண்மையிலேயே பாராட்டுக்குரியது. தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இன்று உயிரோடிருப்பவர்களில் மிகவும் மூத்த பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மைத்திரி பால சேனநாயக்க அவர்கள். அவருக்கடுத்து வருபவர்கள் எனது நண்பரும் கிழக்கின் முதலாவது முஸ்லிம் பட்டதாரியுமான கௌரவ எம். ஏ. அப்துல் மஜீதும், நீதி அமைச்சரும் உயர்கல்வி அமைச்சருமான கௌரவ ஏ. சி. எஸ். ஹமீதும் ஆவர்.

''கௌரவ அப்துல் மஜீத் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் 32 ஆண்டுச் சேவைக்கு விழாவெடுக்கும் ஒழுங்கமைப்புக் குழுவினர்'' வெளியிடும் நினைவு மலருக்கு ஆசிச்செய்தியொன்று வழங்கும்படி என்னைக் கேட்டுள்ளனர். கௌரவ மஜீத் அவர்கள் நான் சார்ந்துள்ள கட்சியின், கொள்கைகளுக்கு எதிரான கட்சியைச் சார்ந்தவர். அவ்வாறிருபினும் நாட்டிலுள்ள, அதிலும் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்திலுள்ள வறிய வசதியற்ற மக்களின் மேம்பாட்டுக்குப் பங்களித்தவரும், மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாட்டின் சட்டவாக்க சபைக்குத் தொடர்ச்சியாத் தெரிவு செய்யப்படுமளவிற்குத் தமதுதொகுதி மக்களின் நம்பிக்கையைப் பெற்றவருமான ஒருவரைப் பாராட்டாமல் விட்டுவிட முடியாது. கௌரவ மஜீத் அவர்களின் வாழ்க்கை ஆரம்ப முதலே சேவை நோக்காகக் கொண்டது. சிவானந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகத் தொடங்கி, மட்டக்களப்புத் தெற்கு சமூகசேவை அலுவலரரகவும், சம்மாந்துறை நகரசபைத் தலைவராகவும், பிரதி அமைச்சராகவும், மாவட்ட அமைச்சரரகவும், தற்போது கைத்தறிக் கைத்தொழில் அமைச்சராகவும் அவர் ஆற்றியுள்ள சேவை இதற்குச் சிறந்த சான்றாக விளங்குகின்றது.

பொது வாழ்வில் ஒருவருக்கு எத்தனை குறைவாக எதிரிகள் உள்ளனரோ அதுவே அவரது சிறப்புக்கும் சாதனைக்கும் சான்று. கௌரவ மஜீதுக்கு எதிரிகளே இல்லை. இருப்பின் மிகச்சிலரே. இவர் மனதைக் கவரும் ஆளுமை கொண்ட அன்பான இனிய மனிதர்.

அவர் நீண்ட ஆயுளும், மனநிறைவான வாழ்வும் பெறவேண்டுமெனவும் தமது எதிர்கால முயற்சிகளில் தொடர்ந்தும் வெற்றியீட்ட வேண்டுமெனவும் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

அல்லாஹ் அவருக்கும் அவர் சேவையாற்றும் மக்களுக்கும் அருள் புரிவானாக.

M. ஹலீம் இஷாக்
பாராளுமன்ற உறுப்பினர்.

# கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஜே. திவ்விய நாதன் அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

**எனது எம். பி. மஜீத் அவர்கள் இனிது பல பெற்று வாழ்க!**



கிழக்கு மாகாணத்தின் தமிழ் பேசும் இனத்துள் ஒரு சிரேஷ்ட அரசியல்வாதியின் 30 வருட அரசியல் துறை நிறைவு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிக மன நிறைவு காணுகிறேன். இந்த மன நிறைவுக்கு வேறு பல காரணங்களும் உள. இந்த விழா நாயகன் கௌரவ புடவைக் கைத்தொழில் கருத்திட்ட அமைச்சர் எம். ஏ. அப்துல் மஜீத் அவர்கள் எனது சொந்தத் தொகுதியான பொத்துவில் தொகுதிக்கே முதன் முறையாக மக்கள் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். எனக்கு வாக்குரிமை கிடைத்த பின்பு எனது வாக்கினைப் பெற்ற முதல் பாராளுமன்றப் பிரதிநிதியும் அவரே. இவ்வாறு பல காரணங்களால் இந்த வாழ்த்துமடல் வழங்குவதில் மகிழ்வு காணுகின்ற நான் அவர் காலத்திலேயே சக பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு மேலும் பன்மடங்கு மகிழ்ச்சி காணுகின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் வீழாத ஒரு பாராளுமன்ற உறுப்பினராகப் பணி தொடருகின்ற அண்ணன் மஜீத் அவர்கள், எம். ஏ. அப்துல் மஜீதாக இருந்தாலும் ''பி. ஏ. மஜீத்'' என்று பெயர் கூறப்பட்டு பிரகாசிக்கின்றவர். முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாந்தரின் மாணவனாகப் பயிற்றப்பட்ட காரணத்தினாலும், மிகப் பண்பாடான உயர்ந்த குடும்பத்தில் பிறந்த காரணத்தினாலும் நமது பகுதியின் தமிழ், முஸ்லிம் மக்களின் ஐக்கியத்திற்கு அரும்பணி புரிகின்றவர்.

அரசியலில் எழுச்சியும், வீழ்ச்சியும் சமம் என இனம் கண்டு தயங்காமல், தடுமாறாமல், நிதானமாகப் பணி தொடரும் கௌரவ மஜீத் அவர்களுக்கு அவர் பணி கண்டே இறைவன் மீண்டும் அவருக்குப் பதவி உயர்வு கொடுத்திருக்கிறான். பல வழிகளில் அவர் எமக்கெல்லாம் முன்னோடி. நிதானமான அரசியல் பணிகள் நேர்த்தியான நடையுடை பாவனை, தன்னிலை உயர்ந்தாலும் தலைக்கனம் கொள்ளாத் தன்மை என்பவை அவர் இயல்புகள். இடது சாரிச் சித்தாந்தங்ளில் நிலைத்து சுயேச்சை வாதியாக அரசியலில் நுழைந்து, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து 30 ஆண்டுகளை அரசியலில் கடந்து இன்று உயர்ந்து நிற்கின்றவர் கௌரவ மஜீத் அவர்கள். காணி, நீர்ப்பாசன உதவி அமைச்சராகவும், தபால், தந்தி உதவி அமைச்சராகவும், மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராகவும் பணி புரிந்து சிறப்புப் பெற்றமை போல எந்தப் பொறுப்பினை ஏற்றாலும் இணையில்லாப் புகழ்பெற இறைவன் அருளுவான் என்ற விசுவாசம், நம்பிக்கை எனக்குண்டு. அவரை வாழ்த்தவோ அல்லது ஆசீர்வதிக்கவோ நான் எம் மாத்திரம்? அவர் காலத்தில் மக்கள் மன்றத்தில் இருக்கின்ற எனக்கு அவர் வாழ்த்துகள், அவர் வழி காட்டுதல்கள், அவர் ஆசீர்வாதங்கள் தேவை.

இந்தச் செய்தியை என்னிடம் இருந்து அன்போடு கேட்ட விழாக் குழுவினருக்கு எனது இதய பூர்வமான நன்றிகள். விழா வெற்றி காண வாழ்த்துக்கள்.

**ஜே. திவ்வியநாதன்**

**நாடாளுமன்ற உறுப்பினர், திகாமடுல்ல(அம்பாரை)மாவட்டம்.**

# Message from Hon. Mangala Moonesinghe, M. P.

It has been my privilege to have known Hon. Abdul Majeed, M. P. and Minister for a period spanning twenty five years. He is a graduate of the Colombo University and has combined his political acumen and academic skills to have a maximum beneficial effect on the people he represented since 1960. He is firstly a gentleman, with all the accompanying refinements of that creed, and has brought these qualities to contribute to maintain and enrich the lofty standards of Parliamentary democracy. His tireless efforts to develop the Eastern regions, in order to make these areas economically viable, has helped to increase incomes and generate greater employment opportunities for his people. His emancipated political outlook has been directed to shun narrow communal positions and to encourage and foster a multi ethnic and a multi religious society in Sri Lanka.

On this occasion to commemorate the completion of dedicated service to the people by a distinguished personality of our times, may I take this opportunity to wish a faithful friend the best of everything and all success for the future.

**Mangala Moonesinghe, M. P.**

# கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
# மங்கள முனசிங்க அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி
## (ஆங்கில மூலத்தின் தமிழ் மொழியாக்கம்)

அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ அப்துல் மஜீத் அவர்களை இருபத்தைந்து ஆண்டுகளாக அறிந்து பழகும் வேறுபெற்றவன் நான். கொழும்பு பல்கலைக்கழகப் பட்டதாரியான அவர், 1960 முதல் தாம் பிரதிநிதியாக விளங்கிய மக்களுக்கு ஆகக்கூடிய நன்மை பயக்கும் விதத்தில் தமது அரசியல் மதி நுட்பத்தையும், வித்துவத்திறன்களையும் இணைத்துச் சேவையாற்றியவர். முதன்மையாக அவரொரு கனவான். கனவான்களுக்குரிய அத்தனை நேர்த்தியான பண்புகளையும் கொண்டவர், அப்பண்புகளைக் கொண்டு பாராளுமன்ற ஜனநாயகத்தின் உன்னத தரங்களைப்பேணி வளப்படுத்தினார். பொருளாதார வாய்ப்பும் வளமுமுள்ள பகுதிகளாக கிழக்குப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு அவர் மேற்கொண்ட அயராத முயற்சிகளின் பயனாக அதிகளவு தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன. அப்பகுதிமக்களின் வருமானம் உயர்ந்தது. தளைகளைத் தகர்த்தெறிந்த அவரது அரசியல் மனப்பாங்கு, குறிகிய மனப்பாங்கு, இனவாதப் போக்குகளை உதறித்தள்ளி இலங்கையில் பல இனங்களையும் பல சமயங்களையும் கொண்ட சமூகமொன்றை ஊக்குவித்து, ஊட்டி வளர்க்கும் நோக்கில் செயற்பட்டது.

ஏமது சமகாலத்தில் புகழ்பெற்று விளங்கும் எனது அன்புக்குரிய நண்பர் ஆற்றியுள்ள அர்ப்பணிப்பான சேவையைப் போற்றி மக்கள் விழாவெடுக்கும் இவ் வேளையில் அவர் எல்லா நலமும் பெறவேண்மெனவும், எதிர்காலத்தில் எண்ணும் கருமம்யாவிலும் வெற்றிகாண வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.

மங்கள முனசிங்க
பாராளுமன்ற உறுப்பினர்.

# Message from Hon. Prince Casinader M. P.

I deem it a privilege to have been invited to contribute a message on the occasion of the publication of a souvenir to mark the period of 32 years as a Parliamentarian of the Hon. M.A. Abdul Majeed.

The greatest tribute I can pay to my fellow Parliamentarian who today serves us also as an Honourable Minister is that I never think of him being an M. P. for any constituency or Distridt for he is one of few M. P. s who thinks and works as the own he belonged to all people of all communities, caste and creed in this tiny island of ours.

He has preferred not to win political power and votes by ever playing the communal or racial drum. In the political firmament of the East he stands out as a shining star of being one of the first graduates to enter politics.

I have many ties with his village of Sammanthurai since many of my old pupils are here holding posts as Kathis, top officers in the A. D. A, as Grama Sevakas, as postal officers etc. I had the privilege of having taught two of his brothers who later served the people in high posts they were called to serve.

I wish that not Batticaloa alone, not Ampara alone, not the East alone, but that our beloved nation continues to give him the opportunity even in higher spheres of service of our people where all of us must only think of ourselves as Sri Lankans.

I wish him long life and all the blessings of the Divine.

**Prince Casinader M. P.**

# கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
# பிரின்ஸ் காசிநாதர் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி
### (ஆங்கில மூலத்தின் தமிழாக்கம்)

கௌரவ எம். ஏ. அப்துல் மஜீத் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக 32 ஆண்டுகள் நிறைவு செய்வதை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவு மலருக்கு ஆசிச்செய்தி வழங்கும்படி என்னை அழைத்ததை எனக்குக் கிடைத்த பெரும்பேறாகக் கருதுகிறேன்.

இன்று ஒரு கௌரவ அமைச்சராகவும் சேவையாற்றுகின்ற என்னுட னொத்த இப்பாராளுமன்ற உறுப்பினரை ஒரு குறிப்பிட்ட தேர்தல் தொகுதியின் அல்லது மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராக நான் ஒரு போதும் எண்ணு வதில்லை. ஏனெனில் சமூக, சாதி, சமய வேறுபாடு ஏதுமின்றி இச்சிறிய நாட்டின் சகலமக்களுக்கும் உரியவராகப் பணியாற்றும் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களில் அவரும் ஒருவர். இது அவருக்கு நான் வழங்கும் தலையாய புகழுரை.

வகுப்பு வாத முரசு கொட்டி அல்லது இனவாதக்குரலெழுப்பி அரசியல் அதிகாரத்தையோ வாக்குகளையோ பெறுவதற்கு அவர் ஒருபோதும் விரும்பியதில்லை. கிழக்கு அரசியல் வானில் தோன்றிய முதற் பட்டதாரிகளில் ஒரு மின்னும் நட்சத் திரமாக அவர் திகழ்கிறார்.

அவரது கிராமமான சம்மாந்துறையில் எனது பழைய மாணவர் பலர் காதிகளாகவும், விவசாய அபிவிருத்தி அதிகாரசபையின் உயர் உத்தியோகஸ்த்தராகவும், கிராமசேவையாளர்களாகவும், அஞ்சல் அலுவலர்களாகவும் உயர்பதவி வகிப்பதனால் அக்கிராமத்தோடு எனக்கு அனேக தொடர்புகளுண்டு. உயர் பதவிகளில் பின்னர் மக்களுக்குச் சேவையாற்றிய அவரின் இரு சகோதரர்களுக்குக் கல்வியைப் புகட்டும் பெரும் பேற்றை நான் பெற்றிருந்தேன்.

நாம் அனைவரும் இலங்கை மக்கள் என்று மட்டும் சிந்திக்கின்ற சூழ் நிலையில் மட்டக்களப்பு மட்டுமன்றி, அம்பாறை மட்டுமன்றி, கிழக்கு மட்டுமன்றி முழுநாடுமே மேலும் உயர்துறைகளில் எமது மக்களுக்கு அவர் தொடர்ந்து சேவை யாற்றுவதற்கான வாய்ப்புக்களை வழங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

அவருக்கு நீண்ட ஆயுளும் இறைவனின் அருளும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**பிரின்ஸ் காசிநாதர்.**
பாராளுமன்ற உறுப்பினர்.

# கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
# எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி



'தோன்றிற் புகழொடு தோன்றுக' என வள்ளுவன் சொன்ன தெள்ளு தமிழ் வாழ்த்துக்கேற்ப புகழொடு தோன்றிய சகோதரர் எம். ஏ. அப்துல் மஜீத் பீ. ஏ. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அமைச்சர் அவர்களின் புகழையும், சேவைகளையும் நினைவு கொண்டு பாராட்டும் இந்த விழா மலருக்கு எனது வாழ்த்து மடலை அனுப்பி வைப்பதில் நான் பெருத்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கிழக்கிலங்கையர் ஒருவர் 32 வருடம் தொடர்ச்சியாகப் பாராளுமன்றத்திலிருந்து மக்கள் சேவை செய்யும் பாக்கியம் இதற்கு முன் யாருக்கும் கிடைத்ததில்லை. இந்தப் பெருஞ் சிறப்பு எம் சகோதரர் கௌரவ அப்துல் மஜீது அவர்களுக்கு மாத்திரமே உரியது. பல்வேறு சமூக நடவடிக்கைகளில் தம்பிரதேச மக்களுள் ஒருவராக நின்று அவர் ஆற்றிய தொண்டு அவரது அரசியல் ஸ்திர மான நிலைப்பாட்டிற்கு காரணமாக அமைந்திருந்தன.

இவ்வளவு காலமும் எவ்வளவோ சேவைகளைச் செய்திருந்த போதும் சகோதரர் கௌரவ அப்துல் மஜீத் அவர்கள் இந்தமுறை செய்திருக்கும் சேவையே சம்மாந்துறைப் பிரதேச மக்கள் தமது வாழ்நாள் பூராவும் மறக்க முடியாததாகும். இப்பிரதேச மக்களின் பன்நெடுங்காலப் பிரச்சினையான குடி நீர்ப் பிரச்சினை எம்மிவரால் தீர்க்கப்பட்டமை அந்த மக்களுக்கு ஒரு வரப்பிசாதமாகும்.

இந்தத் தண்ணீரில் தாகத்தையும், தேவைகளையும் தீர்த்துக் கொள்ளும் ஒவ்வொரு சம்மாந்துறை வாசியும் அவருக்கு என்றென்றும் கடமைப்பட்டவர்களாகும்.

இந்த நினைவு என்னைப் புல்லரிக்கச் செய்கிறது. இதுபோல மறக்க முடியாத சேவைகளைச் செய்ய என்போன்ற இளந் தலை முறையினருக்கு அவரது சேவைகள் பொன்னெழுத்திலான பாடங்களாகும். பாராளுமன்றத்தில் எல்லோரினதும் அன்புக்குரியவரான இந்தப் பண்பாளர் மிக இனிமையானவர் என்பது நாடறிந்த கௌரவமாகும்.

முஸ்லிம், தமிழ் மக்கள் இவர் மீது கொண்டிருந்த அபிமானத்தினதும், மரியாதையினதும் வெளிப்பாடு கடந்த கால தேர்தல்களில் நாமனைவரும் நிதர்சன மாக அறிந்தவை. இவ்விரு சமூகங்களிடையே இவரின் செல்வாக்கு உறுதியான இன ஐக்கியத்திற்கு காத்திரமான பங்களிப்புச் செய்தது.

அவரது மிச்சமுள்ள பதவிக்காலத்தில் முஸ்லிம்களை அரசியல் ரீதியாக ஐக்கியப் படுத்தும் சேவைகளையும் அவர் செய்ய வேண்டுமென்பது என் அவாவாகும்.

எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா
பாராளுமன்ற உறுப்பினர்.

# Message from Hon. Athawuda Seneviratne, M. P.

I am very happy to contribute this small message to felicitate the Hon. M. A. Abdul Majeed on his completion of 32 years service as a Parliamentarian.

He had his early education at Sammanthurai Boys School, secondary education at Shivananda Vidyalaya Batticaloa and Jaffna Central College. Thereafter he entered the University of Ceylon, where he graduated having optained the B. A. Hons (Econ.) degree. He was the first Muslim Graduate from the Eastern Province.

After graduation he selected teaching as a profession and was a teacher at Shivananda Vidyalaya, Batticaloa his Alma mater. Thereafter, he was a Social Service Officer of Batticaloa South. He entered the political field by contesting the Local Government elections and was the Chairman of the Sammanthurai Town Council from 1955 to 1961.

He contested the Pottuvil seat as an Independent candidate and was elected a Member of Parliament in both the March and July election of 1960. In the 1965 general elections too he represented the pottuvil seat. In 1970 he joined the United National Party and and was once again elected a Member up to 1988. In 1989 he was appointed a Member under the UNP National List. As a Member of Parliament he has held various portfolios such as Deputy Minister of Land & Agriculture, Power and Energy, Posts and Telecommunications, District Minister of Batticaloa and he is presently the project Minister of Handloom Industry.

He is a very soft spoken person, who has gained vast experience as a teacher, Social Service Officer and as Depury Minister of various Ministries. His stewardship was never found wanting. Considering his multi faceted experience, his talents could be harnessed for the betterment of the masses. He has served the people with a great sense of loyality and dedication irrespective of cast, creed or religion. I am sure that with his amiable ways and his integrity he could be instrumental in bringing peace to the Eastern Province between the waring factions. He is a "friend to all enemy to none"

I wish him the very best for years ahead.

**Athawuda Seneviratne M. P.**

# கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
# அதாவுட செனிவிரட்ன அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி
(ஆங்கில மூலத்தின் தமிழாக்கம்)

கௌரவ எம். ஏ. அப்துல் மஜீத் அவர்களின் முப்பத்திரண்டு வருட பாராளுமன்ற அங்கத்தவர் சேவையை முன்னிட்டு எடுக்கும் விழாவிற்கு இச்சிறு செய்தியை அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் தனது இளமைக்கல்வியை சம்மாந்துறை ஆண்கள் பாடசாலையிலும் இடைநிலைக்கல்வியை மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், யாழ்ப்பாண மத்திய கல்லூரியிலும் கற்றார்.

இதன் பின் இலங்கை பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதார விசேட பட்டப்படிப்பில் சித்தி பெற்றார். கிழக்கிலங்கையின் முதல் முஸ்லிம் பட்டதாரி என்ற புகழையும் பெற்றார்.

பட்டப்படிப்பின் பின் தனது பழைய கல்லூரியாகிய மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமை புரிந்தார். இதன்பின் மட்டக்களப்பு தெற்கு பகுதிக்கு சமூகசேவை உத்தியோகத்தராக பணி புரிந்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டதன் நிமிர்த்தம் அரசியல் வாழ்வில் புகுந்து சம்மாந்துறை பட்டின சபையின் தலைவராக 1955 இல் இருந்து 1961 ஆம் ஆண்டு வரை செயலாற்றினார்.

பொத்துவில் தொகுதியில் சுயேட்சை அபேட்சகராக போட்டியிட்டு 1960 ஆம் ஆண்டு ஆடி, பங்குனி மாதங்களில் நடைபெற்ற தேர்தலில் பாராளுமன்ற அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டார். 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும், பொத்துவிலின் அங்கத்தவரானார். 1970 ஆம் ஆண்டில் இவர் ஐக்கிய தேசியக்கட்சியில் சேர்ந்து பாராளுமன்ற அங்கத்தவராக 1988 ஆம் ஆண்டு மட்டும் பணிபுரிந்தார். 1989 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியலின் ஓர் அங்கத்தவரராக நியமிக்கப்பட்டார்.

பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த காலகட்டத்தில் காணி விவசாயம், மின்சக்தி எரிபொருள், தபால் தொலைத் தொடர்பு பிரதி அமைச்சர், மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராகவும் தற்பொழுது நெசவுக் கைத்தொழில் அமைச்சராகவும் நற்பணி புரிகிறார்.

ஆசிரியராக, சமூகசேவை உத்தியோகத்தராகவும் பல அமைச்சர்களின் பிரதியமைச்சராகவும் பணிபுரிந்து பரந்த அனுபவத்தைப் பெற்றுள்ளார். மென்மையாக பேசும் சுவாபமுடைய இவர், தனது கடமையில் கண்ணும் கருத்துமாக தொழிற்பட்டார். இவரது பலதரப்பட்ட அனுபவத்தையும் ஆற்றலையும் பொது மக்களின் உயர்வுக்கு திறம்பட உபயோகிக்கலாம்.

இன, மத, பேதம் அற்ற மக்களின் சேவகனாகத் தொழிற்பட்டார். இவரின் நேர்மையும் சிநேக வழிவகைகளும் கிழக்கு மாகாணத்தில் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் பிரிவுகளிடையே சமாதானத்தை ஏற்படுத்த சிறந்த கருவியாக இருப்பார் என்பது எனது கருத்தாகும்.

''இவர் அனைவரதும் சிநேகிதர், யாரினதும் பகைவரல்லர்''
இவரின் எதிர்காலம் சிறந்து விளங்க எனது நல்லாசிகளைத் தெரிவிக்கிறேன்.

அதாவுட செனிவிரட்ன
பாராளுமன்ற உறுப்பினர்.

# Message from Deshamanya Al - Haj Dr. Badiuddin Mahmud



It gives me great pleasure to send this message to the Souvenir on the occasion to felicitate the 32 years of service of Hon. M. A. Abdul Majeed, M. P. and Minister of Handloom Industry.

Mr. Majeed hails from a very respectable family in his area, and is held in high esteem by the people of all communities in the East.

Mr. Majeed rendered a lot to the upliftment of his people, and is always interested in the educational development of his area and his community in particular. It is in recognition of his services to his area that the people have returned him time and again to the Parliament since 1960.

Having accomplished the educational upliftment of the Muslim community in this country as the then Minister of Education, it was my wish that the Technical Education too should be made available to the people of that area. While pondering over this, it was Mr. Majeed who came to my rescue by making available the existing Agricultural Farm School building and the necessary land for this purpose. I am now very happy that this Technical College has been upgraded to the level of a Senior Technical College in par with other Technical Colleges in this country.

I wish a great success on the occasion of the felicitation to this remarkable man, and pray to the Almighty for his long life and many more years of dedicated service to his people.

**Al - Haj Dr. Badiuddin Mahmud**

# சிறப்பு மலருக்கு முன்னாள் கல்வி அமைச்சர் தேசமான்ய கலாநிதி பதியுதீன் மகுமூட் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி

(ஆங்கில மூலத்தின் தமிழ் மொழியாக்கம்)

பாராளுமன்ற உறுப்பினரும் கைத்தறிக் கைத்தொழில் அமைச்சருமான கௌரவ எம். ஏ. அப்துல் மஜீத் அவர்களின் 32 ஆண்டுச் சேவையைப் பாராட்டும் பொருட்டு வெளியிடப்படும் நினைவு மலருக்கு இவ்வாசிச் செய்தியை அனுப்புவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அவரது பகுதியில் பெரும் மதிப்பிற்குரிய குடும்பத்தைச் சார்ந்த ஜனாப் மஜீத் அவர்கள் கிழக்கிலுள்ள சகல சமூக மக்களாலும் மிக உயர்வாக மதிக்கப்படுபவர்.

ஜனாப் மஜீத் அவர்கள் தமது மக்களின் மேம்பாட்டுக்கென அளப்பரிய சேவையாற்றியுள்ளார். அவர் தமது பகுதியின் கல்வி வளர்ச்சியில் அதிலும் குறிப்பாக அவரது சமூகத்தினரின் கல்வி வளர்ச்சியில் எப்போதும் அக்கறை செலுத்தி வருபவர். அவரது பகுதிக்கு அவராற்றிய சேவைகளுக்கு அங்கீகாரமாகவே அப்பகுதி மக்கள் 1960 ஆம் ஆண்டு முதல் மீண்டும் மீண்டும் தொடர்ந்து அவரைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்து வந்துள்ளனர்.

அன்றைய கல்வி அமைச்சராக இந்நாட்டிலுள்ள முஸ்லிம் சமூகத்தினரின் கல்வியை மேம்படுத்துவதில் வெற்றி கண்ட நான், அப்பகுதி மக்களுக்குத் தொழில் நுட்பக்கல்வியும் கிடைக்கச் செய்யவேண்டுமென விரும்பினேன். இதைப்பற்றித் தீவிர மாகச் சிந்தித்து வருகையில் இதற்குத் தேவையான காணியையும் அப்பகுதியிலிருந்த விவசாயப் பண்ணைப் பாடசாலைக்கட்டிடத்தையும் கிடைக்கச் செய்ததன் மூலம் எனக்கு மீட்புக்கரம் நீட்டியவர் ஜனாப் மஜீத் அவர்களே. இத்தொழில் நுட்பக் கல்லூரி நாட்டிலுள்ள ஏனைய தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு இணையாக ஒரு சிரேஸ்ட்ட தொழில் நுட்பக் கல்லூரி மட்டத்திற்குத் தரமுயர்த்தப்பட்டுள்ளதையிட்டு நான் இப்போது பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சிறப்பு மிக்க இம்மனிதருக்குப் பாராட்டுவிழாவெடுக்கும் இச்சந்தர்ப்பத்தில் அவர் பெருவெற்றி பெறவேண்டுமென வாழ்த்துவதோடு அவருக்கு நீண்ட ஆயுளையும் அவரது மக்களுக்கு மேலும் பல்லாண்டுகள் அயராது சேவைசெய்யும் வாய்ப்பையும் வழங்க வேண்டுமெனவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கிறேன்.

**அல் - ஹாஜ் கலாநிதி பதியுதீன் மகுமூட்**

# சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபைத் தலைவர்
# அல் - ஹாஜ் யூ. எம். ஏ. கபூர் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி



கௌரவ M.A. அப்துல் மஜீட் M.P., நெசவுக் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் அரசியல் வாழ்வில் பிரவேசித்து முப்பத்தி இரண்டு (32) ஆண்டுகள் பூர்த்தியடைந்திருப்பது எமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகின்றது. மேலும் அவர்களது சேவையும், வாழ்வும் நீடித்து நிலைபெற்று எம் பிரதேசம் - எமது சமூகம் பயன் பெற வாழ்த்தி ஆசிக்கின்றோம்.

எமது பிரதேசத்தின் நெருக்கடியான காலக் கட்டங்களில் பள்ளிவாசல் ரீதியிலான ஒழுங்கு முறைகளுக்கு - சமூகங்களின் உறவு நெருக்கத்திற்கு நாம் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளின் போதும் அவர்களின் ஆலோசனைகள் எமக்குப் பெரிதும் உதவின.

எமது பிரதேசம் அரசியலில் அந்நியப்படுத்தப்பட்டிருந்த காலக்கட்டத்தில் இவர்களது அரசியல் பிரவேசம், அன்று எம்மை தலைநிமிர்ந்து வாழ வழிவகுத்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**யூ. எம். ஏ. கபூர்**
**நம்பிக்கையாளர் சபைத் தலைவர்.**

## Message from Mr. A. I. Wickrema
## Government Agent, Ampara.

I consider it a pleasure to have been given an opportunity to write a few lines to this Souvenir published on the occasion of the Felicitation Ceremony to Hon. M. A, Abdul Majeed, M. P., and Minister of Handlooms Industry. This Felicitation is a tribute to a rare personality who has dedicated his whole life in serving his people and has exceeded a land mark of 32 years as a Parliamentarian.

I have heard and known, from colleagues and comtemporaries, about Hon. Abdul Majeed, his political life, his eagerness to serve his people and the way he moved with them. But, during this very short period of time I have served as the Government Agent of Ampara, I have had many occasions of contact with Hon. Abdul Majeed and I feel privileged indeed to serve with personalities like him.

During this period I was able to note the way in which Mr. Abdul Majeed moved with Government Officers, creating confidence in them and getting things done. His gentlemanly ways have always won him praise and a readiness to oblige him by the officer concerned. I have also closely watched Mr. Majeed at Conferences, Meetings and discussions. His straight forward actions, clear convictions and his open heartedness made easy access to others' hearts.

Hon. Abdul Majeed is working to a planned schedule by allocating funds from his Decentralised budget for the development in the fields of Education, Health, Agriculture, Electricity facilities in Sammanthurai and in the adjoining areas and in projects to create self - employment, all to the benefit of the people of this area irrespective of language, religion of any creed.

I would be failing in my duty if I do not commend the public of Sammanthurai who have taken the task of felicitating their leader for his hard work and achievements in their cause. May the blessings of the Triple Gem be upon Mr. Abdul Majeed for his long and healthy life and many years of service to the Muslims, Tamils and the Sinhalese who constitute this area and the country as a whole.

**Mr. A. I. Wickrema**
**Government Agent, Ampara.**

# அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஏ. ஐ. விக்ரம அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி

(ஆங்கில மூலத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு)

நெசவுக் கைத்தொழில் அமைச்சர் கௌரவ எம். ஏ. அப்துல் மஜீட் M. P. அவர்கள் 32 வருடங்கள் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் வகித்து தனது முழு ஆயுளையும் அர்பணித்து சேவையாற்றியமையைக் கௌரவிக்கு முகமாக வெளியீடு செய்யப்படும் மலருக்கு சில வரிகள் எழுதக் கிடைத்தமைக்காக நான் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

குறுகிய காலம் அம்பாறை மாவட்ட அரச அதிபராக கடமையாற்றிய காலத்தில் எனது சம உத்தியோகத்தர்களிடம் இருந்தும், ஏனைய அரச ஊளியர்களிடமிருந்தும் அமைச்சர் அப்துல் மஜீட் அவர்களின் அரசியல் போக்கு, மக்களுக்கு சேவை செய்யும் ஆர்வ உணர்வு, உத்தியோகஸ்தர்களை அணுகும் முறை போன்றவைகளை உணர்ந்து, அன்னவர் போன்றவர்களுடன் கடமை புரியக் கிடைத்தமையை பெரும் வாய்ப்பாகக் கருதுகின்றேன்.

அமைச்சர் அப்துல் மஜீட் அவர்கள் உத்தியோகஸ்தர்களுடன் உறவாடி அவர்களின் மண உணர்வை அணுகி சட்டங்களுக்கு அடிபணிந்து மக்களின் குறைகளை போக்குவதில் ஆற்றல் மிக்கவர் என உணர்கின்றேன். பிறர் கருத்தை பெரிதென கருதுவதும், மக்களின் தேவையே தனது தேவை என கருதுவதும் அன்னாரின் பெருங்குணங்கள் என உணர்கின்றேன். மாவட்ட கருத்தரங்குகளிலும் கலந்துரையாடல்களிலும், ஏனைய கூட்டங்களிலும் அமைச்சர் மஜீட் அவர்களின் நேர்மையான பேக்கும், துலக்கமான கொள்கைகளும், சிறந்த உணர்வுகளும் என்னை மேலும் கவர்ந்துள்ளன.

தனது நிதி ஒதுக்கீடுகளை கல்வி, சுகாதாரம், விவசாயம், மின்சாரம், வீட்டுவசதி போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கும் சுயமுயற்சி வேலைகளில் மக்களை ஈடுபடுத்துவதற்கும் சாதி, மத, பேதமின்றி ஒதுக்கீடுகள் செய்து சம்மாந்துறையினதும் அதைச் சார்ந்த மக்களினதும் நலனுக்காக அல்லும் பகலும் உழைத்தவர் என உணர்ந்தேன்.

அன்னவரின் அயராத உழைப்பைக் கௌரவிக்க முன்வந்த சம்மாந்துறை பொதுமக்களின் நற்பணியை நான் பாராட்டுகின்றேன். அமைச்சர் அப்துல் மஜீட் அவர்களின் நீண்ட ஆயுளுக்கும் - பொதுநல சேவைகளில் முஸ்லிம், தமிழ், சிங்கள மக்களின் நலனுக்காக நாடளாவ உழைக்க எல்லாம் வல்லவனை பிரார்த்திக்கின்றேன்.

**ஏ. ஐ. விக்ரம,**
**அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர்.**

# மலரின் உள்ளே...


- சிறப்பு மலர் ஆசிரியரின் வார்த்தைகள்.
- முகம்மதலி அகமட் அப்துல் மஜீட் ஓர் அறிமுகம்.
- ஏனிந்த விழாக் கொண்டாடுகின்றோம்.
- தன்னலம் கருதா மக்கள் சேவகன்.
- கௌரவ எம். ஏ. அப்துல் மஜீட் எம். பி. அவர்கள் சம்மாந்துறை வடக்குப் பிரதேசத்துக் காற்றிய அருஞ் சேவை...
- எனது அரசியலுக்கு வழிகாட்டி அப்துல் மஜீட்.
- பாராட்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் சில காட்சிகள்.
- எங்கள் தங்கத்துரை! (கவிதை)
- 32 வருடங்கள் எப்படியப்பா தப்பாமல்... (கவிதை)
- எம். ஏ. அப்துல் மஜீட் அவர்களின் சமூக நலன் சேவைகள் ஒரு கண்ணோட்டம்.
- சம்மாந்துறையின் பொருளாதார அபிவிருத்திக்கு கௌரவ எம். ஏ. அப்துல் மஜீட் அவர்கள் ஆற்றிய பணி.
- இனிய நெஞ்சமே நீ என்றும் வாழ்க! (கவிதை)
- பொய் முகம் இல்லாத அரசியல் படைத்தவர் அப்துல் மஜீட்.
- வான் மழை போலவந்த வள்ளலே! (கவிதை)
- செவ்வி கேட்போம்...
- நெஞ்சிலே இடம்பிடித்தாய்! (கவிதை)
- பாராட்டுவிழா தொடர்பான நிகழ்ச்களின் விபரம்.
- பா்ராட்டுவிழா ஏற்பாட்டுக் குழு.
- Felicitation Organising Committee (photograph)
- Souvenir Publication Committee
- விழா ஏற்பாட்டுக் குழு சார்பாக செயலாளர்...

# சிறப்பு மலர்
# ஆசிரியரின் வார்த்தைகள்

மனிதகுலத்தின் உயர்வுக்கு வழிவகுப்பவர்களுள் அரசியல் வாதிகளும் பிரதானமானவர்கள் என்பதைத் தற்கால மக்கள் சமூகம் உணர்ந்து கொண்டு வருகின்ற இவ்வேளையில் - இவ்வுணர்வுக்கு உரமூட்டும் வகையில் 'எமது நாட்டு அரசியல் வாதிகள் சிலரும் இன்று எம் மத்தியில்' பிரகாசிக்கின்றனர்.' என்கின்ற உலக மன்றங்களின் கருத்துக்களுக்கு மத்தியில் நானும் ஓர் இலங்கையன் என்ற வகையில் இதை ஜீரணித்துப் பெருமைப்படுகின்றேன். அரசியல் வாதிகளுக்கு இலக்கணம் வகுக்கும் கற்றோர் உலகும் - அமைப்புக்களும், ஜனநாயக வழிமுறையில் அரசியலுக்குப் பல்லாண்டுகாலமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணிபுரிபவர்களை இதுவிடயத்தில் முக்கிய பாத்திரமாகக் கொள்வதை இன்று நாம் அவதானித்து வருகிறோம். இலங்கைப் பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் இடையீடற்று பல்லாண்டுகள் தொடர்ந்து அரசியலில் பங்களிப்புச் செய்துகொண்டிருப்பவர்கள் விரல்கொண்டு எண்ணத்தக்க அளவினரே. இப்பேற்பட்டவர்களுள் 'எமது நெசவுக் கைத்தொழில் அமைச்சர் கௌரவ எம். ஏ. அப்துல் மஜீட் எம். பி. அவர்களும் ஒருவர்' என அறியும்போது எமது பிரதேச மக்களின் உள்ளம் பூரிப்படைவது இயல்பானதொன்றாகும்.

கௌரவ அப்துல் மஜீட் எம். பி. அவர்கள் 1960 ஆம் ஆண்டு பாராளுமன்ற அரசியலுக்குள்ப் பிரவேசித்து இன்று முப்பத்திரெண்டு ஆண்டுகளைக் கடந்து வீறுநடைபோடுகின்றார். இவரின் பாராளுமன்ற அரசியல் சேவைகளினால் கிழக்குப் பிரதேசம் கண்ட கல்வி வளர்ச்சி, பொருளாதார விருத்தி, சுகாதாரச்சேவை, சமூக உயர்வு போன்ற இன்னோரன்னவற்றில் ஏற்பட்ட மாறுதல்களில் இப்பிரதேச மக்கள் திருப்தி கண்டுள்ளனர். ''மனிதனுக்கு நன்றி கூறாதவன் இறைவனுக்கு நன்றி செலுத்த மாட்டான்'' என்ற நபிகள் (ஸல்) அவர்களின் போதனைக்கிணங்க - எம்பிரதேச மக்கள் அப்துல் மஜீட் அவர்கள் புரிந்த நற்சேவைகளுக்காக அன்னவரைப் பாராட்டி விழா வெடுக்கும் மனிதத்தன்மையின் உயர்ந்த பண்பினை இங்கு நாம் பாராட்டாமலிருக்க முடியாது. இப்பாராட்டு விழாவின் ஒரு அங்கமாக சிறப்பு மலர் ஒன்றை வெளியிட விழா ஏற்பாட்டுக்குழுவினர் தீர்மானித்து - இதற்கான மலர்க் குழு ஒன்றையும் உருவாக்கி அச்சிறப்பு மலரை வடிவமைக்கும் பொறுப்பை என்மீது சுமர்த்தி விட்டனர். இப்பொறுப்பு வாய்ந்த சுமையை ஓரளவு நிறைவு செய்துவிட்டேன். என்கின்ற உணர்வோடு இங்கு நான் ஒரு சில வார்த்தைகளை உங்கள் மத்தியில் எத்திவைக்க விழைவது எனக்கு ஒரு கடமையாக இருக்கிறது.

இச்சிறப்பு மலரின் பிரதம ஆசிரியர் என்ற பாத்திரத்தை நான் ஏற்றதும் - மலருக்காகக் குவிந்த தகவல்களும், விடயங்களும் எனக்குப் பெரும் சுமையாக ஆரம்பத்தில் காணப்பட்டது. என்றாலும் இவைகளை உரியமுறையில் நெறிப்படுத்தி உங்கள் மனங்களில் மணம்கமழப் பிரயோசனமுள்ள நல்ல மலராக ஆக்கி அளித்துள்ளேன். இதில் அடங்கியுள்ள ஆசிச்செய்திகளும், கட்டுரைகள், கவிதைகள், செவ்விகள் போன்ற இன்னோரன்ன ஆக்கங்களும் - கௌரவ அப்துல் மஜீட் எம். பி. அவர்களின் குணநலப் பண்புகளுடன், அவர் ஆற்றிய அரசியல் சேவைகளையும் ஆழமாகத் தெரிந்து கொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பை எனது பணியில் நான் பெற்றேன். இப்பணி எனக்கு ஒரு சுமையாக அமைந்த போதிலும் இது எனக்கு அறிவாக அமைந்துள்ள பெருமையில் உவகை அடைகின்றேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனது முயற்சிக்கும் மகிழ்ச்சிக்கும் உறுதுணையாக நின்ற கௌரவமான நல்லுள்ளங்களை மறந்துவிட முடியாது. எங்களது வேண்டுகோளை ஏற்று இச்சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி மூலம் - அப்துல் மஜீட் அவர்கள் பற்றிய பல தகவல்களை வழங்கி உதவியுள்ள அதி மேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி, கௌரவ சபாநாயகர், மற்றும் கௌரவ அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்கள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், முந்நாள் அமைச்சர், மாகாண ஆளுணர், மாவட்ட அரச அதிபர், நம்பிக்கையாளர் சபைத் தலைவர் போன்றோரை அன்புடன் பாராட்டி மலர்க் குழுவினதும், விழாஏற்பாட்டுக் குழுவினதும் சார்பான மன முவர்ந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்வதில் ஆத்ம திருப்தி அடைகின்றேன்.

பாராட்டு விழாக் கதாநாயகரின் பிறப்பும், கல்வியும், சமூகத்தொண்டுகளும், அவர் படைத்திட்ட அரசியல் நெறிமுறைகளும் எதிர்காலச் சந்ததியருக்கு நல்ல ஒரு பாடமாய் அமைவான் வேண்டி பல தகவல்களுடனான ஆக்கங்களையும் கவிதைகளையும், செவ்வியையும் வழங்கிய மற்றும் பெரியார்கள், கல்விமான்கள், நண்பர்கள் என்போர்களும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டப்படவேண்டியவர்களாவர். இவர்களுடன் இச்சிறப்பு மலரின் அட்டையை அலங்கரித்திட்ட ஓவியரும், படங்களைத் தந்துதவிய புகைப்படப்பிடிப்பாளரும் கூட எங்களது பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்களாகி விட்டனர். இத்துடன் குறுகிய காலவேளையில் பல சிரமங்களின் மத்தியில் தனது நிறுவனத்தின் கன்னிமுயற்சியாக இம்மலரைச் சிறந்த முறையில் அச்சேற்றித் தந்த சம்மாந்துறை ''அலெஸ்கோ'' அச்சக உரிமையாளரும், ஊழியர்களும் சாதனை படைத்து உதவி புரிந்தவர்கள் என்ற முறையில் எங்களது மனமார்ந்த நன்றிக்குரியவர்களாகி விட்டனர். இவர்களுடன் - இப்பெருவிழாவையும், கௌரவ அப்துல் மஜீட் அவர்களையும் சிறப்பு மலரில் பாராட்டி ஆசிகூற விழைந்திட்ட சங்கங்கள், நிறுவனம், வர்த்தகப் பிரமுகர்கள், போன்ற மற்றோரையும் அவர்களது நல்ல சிந்தனைக்கும், முயற்சிக்குமாகப் பாராட்டி நன்றி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

குறைவான அறிவும், நிறைவில்லா அனுபவமுமுள்ள என்னை நெறிப்படுத்திய சிறப்புமலர் வெளியீட்டுக் குழுவின் தலைவரும் உறுப்பினர்களும், விழா ஏற்பாட்டுக் குழுவினரும் எனது முயற்சிக்கும் இதன் வெற்றிக்கும் முக்கிய காரணங்களாக அமைந்தனர். இவர்களுடன் ஆக்கங்களை உருவாக்குவதற்குப் பல தகவல்களைத் தந்துதவி இம்மலராக்கத்துக்கு துணைபுரிந்த ஏனைய ஆர்வலருக்கும் எனது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வதில் திருப்தியடைகின்றேன்.

சம்மாந்துறையில் சரித்திரம் படைக்கும் இந்நன்நாளில் இச்சிறப்புமலரின் பிரசவத்திற்கும் காரணகர்த்தாவான கௌரவ அமைச்சர் அவர்கள், அரசியல் பெரியார்களாலும், சமூகப் பெரியார்களாலும் புகழ்ந்து பாராட்டப்படும் ஒரு மக்கள் தலைவனாக, சம்மாந்துறை மண்ணுக்குப் புகழ் பெற்றுத்தந்த ஒரு சரித்திர புருஷனாகப் பிரகாசிக்கும் அப்துல் மஜீட் அவர்கள் இத்தகு விழாவெடுத்து, மலர்வெளியிட அனுமதித்தமைக்கும் எங்கள் உளமார்ந்த பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமை அடைகின்றேன்.

இறுதியாக அரசியல் உலகம் போற்றும் இப்பெருமகனை இம்மண்ணுக்களித்திட்ட அப்துல் மஜீட் அவர்களின் பெற்றோரையும் நினைவுகூர்ந்து, அன்னவர்க்குக் காணிக்கையாக - அன்னவர்கள் மைந்தன்பால் அன்புகொண்ட பொதுமக்கள் வழங்கிடும் இம் முப்பத்திரெண்டாண்டுப் பாராளுமன்றச் சேவைப் பாராட்டு விழாச் சிறப்பு மலரினை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூற்றிரண்டின் ஒகஸ்ட்

திங்கள் பத்தாம் நாளின் மாலைப் பொழுதில் சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் வித்தியாகூட மைதானத்தில் திரண்டிருக்கும் மக்கள் வெள்ளத்தில் சமர்ப்பணம் செய்து இதன் முதற்பிரதியை விழாக்கதாநாயகனும் மக்கள் தலைவருமான நெசவுக்கைத் தொழில் அமைச்சர் கௌரவ எம். ஏ. அப்துல் மஜீட் எம். பி. அவர்களுக்கு வழங்கிக் கௌரவித்திடுமாறு இவ்விழாவின் பிரதம அதிதியான எமது நாட்டின் பிரதம மந்திரி கௌரவ D.B. விஜேதுங்க அவர்களை அன்புடன் வேண்டி, இக்கைங்கரியத்துக்காக அன்னவர்க்கு மனமார்ந்த நன்றிகளையும் கூறி இம்மங்களகரமான மலரை உங்களிடம் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

''நன்றி''

சிறப்புமலர் வெளியீட்டுக்குழு,
சம்மாந்துறை. 10.08.1992.

என். மஹ்ரூப்
பிரதம ஆசிரியர்.

# முகம்மதலி அகமட் அப்துல் மஜீட்
# ஓர் அறிமுகம்.

எம்.ஏ. அப்துல் மஜீட் அவர்களை B. A. மஜீட் அல்லது M. P. மஜீட் என்றால் அம்பாறை மாவட்டம் மட்டுமன்றி - கிழக்கு மாகாணமும் ஏன் இலங்கையும் பொதுவாக அரசியல் உலகும் நன்கறியும். அப்பேற்பட்டவரை ''முகம்மதலி அகமட் அப்துல் மஜீட் ஓர் அறிமுகம்'' என்ற தலைப்பில் விளக்க முற்படுவதன் காரணம் ஏன் என்று வினவலாம். ஆம், பாராளுமன்ற அரசியல் வாழ்க்கையினூடாகவே பெரும்பாலான மக்கள் அமைச்சர் அப்துல் மஜீட் அவர்களைப்பற்றி நன்கு அறிந்திருப்பர். ஆனால் அவர் ஒரு நல்ல மனிதர், கல்விமான், சமூகசீர்திருத்தவாதி, சகல மக்களினதும் நல்லுறவை விரும்பும் மக்கள் தலைவன், பண்பான குடும்பஸ்த்தன் என்ற கோணங்களில் அவரைப்பற்றி அனைவரும் அறிந்திருக்க முடியாது. என்றாலும் இக்கோணங்களில் எதிர்காலச் சந்ததியர் அவரைப்பற்றி விளங்கிக்கொள்ள, அல்லது கற்றுக்கொள்ள, இன்றேல் ஆராட்சிக்குட்படுத்த முயல்வர். அவ்வாறு முயல்பவர்களுக்கு அன்னவரைப்பற்றிய தகவல்களைத் தருவது அவசியமாகும். இதற்கேற்ற வகையில் இச்சிறப்பு மலரில் பல தகவல்களுடன், அவரது பாராளுமன்ற அரசியல் வாழ்க்கையோடு தொடர்புடைய பல அம்சங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றுடன் சிறு உதவியாக, இன்றேல் சிறு குறிப்பாக அவரது பிறப்புமுதல் இன்றுவரையான வாழ்க்கைச் சுருக்கத்தையும் இத்தலைப்பில் தரவேண்டுமென்ற முனைப்புடன் இதனைக் குறிப்பிடுகின்றோம்.

தற்காலம் - சிறீலங்கா என்றழைக்கப்படும் இலங்கை மணித்திரு நாட்டில் நெல்லுடன் தேனையும், தயிரையும், பாடும் மீன் வளத்தையும் கொண்டமைந்துள்ள மட்டக்களப்பின் தென்கோடியாய் - கடற்கரை ஓரத்துடன் உள்நாட்டுச் சமநிலத்தையும் உள்ளடக்கி முஸ்லீம்கள், தமிழர், சிங்களவர் என்ற மூவின மக்களையும் கொண்டுள்ளதே அம்பாறை மாவட்டம். இம்மாவட்டத்தின் 'நெற்களஞ்சியம்' எனக் கருதப்படும் சம்மாந்துறைப் பட்டினம் என்பது கல்முனையிலிருந்து அம்பாறை நோக்கிச் செல்லும் பிரதான வீதியின் ஐந்தாம் மைல் தொலைவில் அமைந்துள்ளது. இது பசுமையான நெல்வயல்களால் சூழப்பட்டு, கிழக்கெல்லையில் சம்மாந்துறை மாவட்ட வைத்திய சாலையையும், மேற்கில் சம்மாந்துறை கனிஸ்ட தொழில் நுட்ப நிறுவனத்தையும், வடக்கில் சேவுகப்பற்று வயல் நிலங்களையும், தெற்கில் மல்க்கம் பிட்டிப் புராதனக் கிராமத்தையும் எல்லைகளாகக் கொண்டு சுமார் ஐந்து சதுரமைல் பரப்புடன் காணப்படுகின்றது. அன்றியும் கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை ஆகிய தேர்தல் தொகுதிகளினதும், திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தினதும் முக்கிய பட்டினமாக அமைந்து இத்தேர்தல் தொகுதிகளின் பிரதிநிதிகளைத் தீர்மானிப்பதிலும் இச் சம்மாந்துறை முக்கிய பங்கினை வகித்து வந்திருக்கின்றது.

சம்மாந்துறையின் சரித்திரம் கூறும் பூ மரத்தடி எனும் சந்தியை அருகாக்கி அமைந்துள்ளது வன்னியாவளவு. அன்னியராட்சி நிலை கொண்டிருந்த காலத்திலிருந்து இன்றுவரை அரசியல்-நிர்வாகத்துக்கு நல்ல மனிதர்களை நம் நாட்டுக்களிக்கும் வளவாக இவ்வன்னியா வளவு அமைந்திருந்ததென்பதை அதில் வாழ்ந்த பெரியார்களின் வரிசையிலிருந்து விளங்கிக் கொள்ள முடியும். இங்குதான் அகமதுலெவ்வை உடையார் பரம்பரையில் தோன்றிய - அகமதுலெவ்வை உடையார் முகம்மதலிக்கும், மஜீது வன்னிமையின் பரம்பரையில் உதித்த அப்துல் மஜீது வன்னிமை கதீஜா என்பவவுக்கும் 1925 ஆம் ஆண்டில் ஏற்பட்ட திருமண பந்தத்தால் நாம் இங்கு அறிமுகம்

செய்கின்ற இன்றையச் சரித்திரக் கதா நாயகன் நெசவுக் கைத்தொழில் அமைச்சர் கௌரவ எம்.ஏ. அப்துல் மஜீட் எம்.பி. அவர்கள் 1926 ஆம் ஆண்டின் ஒக்டோபர் பதினைந்தாம் நாள் சம்மாந்துறையில் பிறந்தார். முகம்மதலி அகமட் அப்துல் மஜீட் என்ற முழுப்பெயரை முகம்மதலி என்ற தனது தந்தையின் பெயருக்கு M. என்ற முதலெழுத்தையும், தனது பெயரில் வரும் அகமது என்பதற்கு A. என்ற முதலெழுத்தையும் கொண்டு இன்று M. A. அப்துல் மஜீட் என்று இவர் அழைக்கப்பட்டு வருகின்றார்.

இவரது தந்தை - அன்னவர் மேற்கொன்ட தொழிலை புனையாகக் கொண்டு 'முகம்மதலிப் போஸ்மாஸ்டர்' என மக்களால் அழைக்கப்படலாகினார். முகம்மதலிப் போஸ்மாஸ்டர் கதிஜா தம்பதியருக்கு அப்துல் மஜீட் அவர்களும், உம்மு சல்மா அப்துல் மஜீட் (C.I. மஜீட் அவர்கள் மனைவி); றசீனா மேர்ஸா (மேசா இஞ்சினியர் மனைவி), அமீரலி (அமீரலிச் சேமன்) என் போரும் பிறந்தனர். அமீரலி அவர்கள் பிறந்ததும் தாயார் கதிஜா அவர்கள் இறையடி எய்தி விட்டார் (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி றாஜிஊன்). இதன்பின்னர் முகம்மதலிப் போஸ் மாஸ்டர் அவர்கள் அப்துல் மஜீது வன்னியனாரின் மூன்றாவது மகள் ஆயிஷா அவர்களை 1938 ஆம் ஆண்டு மறுமணம் புரிந்தார். இவர்களுக்கு அப்துல் றஸாக் (A.R. முகம்மதலி CTB சேமன்), சித்தி பரீதா ஹக்கீம், சித்தி சுபைதா ஜலீல் முஸ்ராக்அலி ஆகியோர் பிறந்தனர். அப்துல் மஜீட் அவர்களுக்கு மூன்று ஆண்களும், நான்கு பெண்களுமாக ஏழுபேர் சகோதர பாக்கியங்களாக அமைந்தனர். இச்சகோதரர்கள் - அப்துல் மஜீட் அவர்களின் மக்கள் சேவைக்கு உறுதுணையாகவும், ஆதரவாகவும் அமைந்திருந்தனர் என்பதை பல உதாரணங்கள் மூலம் விளங்கிக் கொள்ள முடியும். அப்துல் மஜீட் அவர்களின் சகோதரர்களுள் மர்ஹூம் அமீரலி அவர்களையும், மர்ஹூம் முஸ்ராக் அலி அவர்களையும் எம்மவர் இச்சந்தர்ப்பத்தில் விஷேடமாக நினைவு கூருதல் நன்றிக் கடனுக்குப் பொருத்தமுடையதாகும்.

குடும்பக் குலக் கொழுந்தும் தலைமகனுமான அப்துல் மஜீட் அவர்களுக்கு சீர்கல்வியை அளிக்கும் பொருட்டு முகம்மதலிப் போஸ்மாஸ்டர் தம்பதியர், அக்காலகட்டத்தில் கிழக்கிலங்கையின் மதிப்புக்குரிய கல்விமானாகத் திகழ்ந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரிடம் வித்தியாரம்பம் செய்துவிட்டு - பின்னர் சம்மாந்துறை அரசினர் ஆண்கள் பாடசாலையில் 1933 ஆம் ஆண்டு முதல் 1934 ஆம் ஆண்டு வரை ஆரம்பக்கல்வியைப் பெறச் சேர்த்துவிட்டனர். ஆரம்பக்கல்வியில் அப்துல் மஜீட் அவர்கள் காட்டிய உயர்வான கரிசனையின் காரணமாக இடைநிலைக் கல்வியைப்பெற மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்திற்கு 1934 ஆம் ஆண்டில் அன்னவர் அனுப்பிவைக்கப்பட்டார். அங்கு J.S.C வகுப்புவரைக் கற்ற இவர் பின்னர் 1943 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு H.S.C வகுப்புத் தொடக்கம் கற்க அனுப்பிவைக்கப்பட்டார். அங்கெல்லாம் இவர் கல்வியில் காட்டிய முதன்மை ஊக்கத்தால் 1946 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறு பேற்றைப் பெற்றுக்கொண்டார். 1947 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு மேற்கொண்ட அப்துல் மஜீட் அவர்கள் 1950 ஆம் ஆண்டு கலைத் துறையில் பொருளாதாரப் பட்டதாரியாகப் பட்டம்பெற்று கிழக்கிலங்கையின் 'முதல் முஸ்லிம் பட்டதாரி' என்ற வரலாற்று முத்திரையும் பொறித்துள்ளார்.

பட்டப் படிப்பு முடிந்தபின் அவர் பெற்ற பட்டத்தோடு தொடர்புடைய உயர்கல்வி கற்பதற்கான அரசாங்க புலமைப்பரிசில் கிடைத்தபோதும் - உலக தாபனமொன்றில் உயர்பதவி பெற்று வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் தன்னை நாடிவந்தபோதும் - தான் பிறந்த பிரதேசம் அக்காலத்தில் கல்வி வாய்ப்பைப் பெறுவதில் பின்தள்ளப்பட்டிருந்த துரதிஸ்ட சம்பவத்தை கருத்தில் எடுத்து - உயர்கல்விக்கான

புலமைப் பரிசிலையும், வெளி நாடு செல்லும் சந்தர்ப்பத்தையும் கைநழுவ விட்டார். 1951 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து 1952 ஆண்டு இறுதிவரை தன்னைக் கற்பித்த மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்திலேயே ஆசிரியராகச் சேவை புரிந்தார். இவரின் கற்பித்தல் திறமையை அறிந்த முஸ்லிம் மாணவர்கள் அனேகர் சிவானந்தா வித்தியாலயத்துக்குச் சென்று கற்கலாயினர். இவ்வேளையில் 1953 ஆம் ஆண்டு மட்டக்களப்பின் தென்பிராந்திய சமூகசேவை உத்தியோகஸ்த்தர் நியமனம் கிடைத்தது. இதைப் பயன்படுத்தி கல்வியறிவில் குறைந்து, போதுமான வருமான மற்று வறிய வாழ்க்கை மேற்கொள்ளும் ஏழைகளின் நல்வாழ்வுக்காக 1954 ஆம் ஆண்டுவரை சமூகசேவை உத்தியோகஸ்த்தராகத் தொழில் புரிந்தார்.

ஜனாப் அப்துல் மஜீட் அவர்களுக்கு வயது இருபத்தைந்தானதும் இவர் பெற்றோர் அன்னவருக்குத் திருமணம் செய்விக்க ஆசைப்பட்டனர். கல்லோயா அபிவிருத்திச் சபையின் நீர்ப்பாசனப் பொறியிலாளராகக் கடமையாற்றி, சம்மாந்துறைப் பிரதேசத்தை நெல் விளையும் பொன்னிலமாக மாற்றியமைக்கக் கால்கோளாக இருந்த 'இஸ்மாயீல்துரை' என மக்களால் செல்லமாக அழைக்கப்பட்ட மீராலெவ்வை முகம் மதிஸ்மாயீல், அகமதுலெவ்வைப் போடி ஆயிஷா தம்பதியருக்கு மூத்தமகளாகப் பிறந்த சாந்தமே உருவான றசினத்துல் கதிஜாவை 1951 ஆம் ஆண்டின் மார்ச்மாத இருபத்தாறாம் நாள் திருமணம் செய்து வைத்தனர்.

சமூக சேவையுடன் இல்லற வாழ்க்கையைத் தொடர்ந்த அப்துல் மஜீட் தம்பதியருக்கு ஜலாலுடீன் பாறுக்கி, பஸால் மாலிக்கி, பஹுனா, நாசர், முகம்மட் லாபீர் என்ற நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும் புத்திரபாக்கியங்களாகக் கிடைத்தனர். அப்துல் மஜீட் அவர்கள் தன் பிரதேச மக்களின் கல்வியில் அக்கறை காட்டியதற் காகவோ என்னவோ - இறைவன் அவர் மக்களைப் பொறியியலாளர், கட்டிடக் கலைஞர், ஆசிரியை, கணக்காளர், வங்கியாளர்களாக ஆக்குவதற்கு உதவியுள்ளான் என்பதை இவர் புத்திரர்களைக் கொண்டு அறியமுடியும்.

பருவத்தே பயிர் செய்து குடும்பத்தைக் குதூகலமாக்க வேண்டுமென ஆசைப்பட்ட அப்துல் மஜீட் அவர்கள் தன் புத்திரர்களுக்கு - தான் வகித்த பதவி பட்டங்களைக் கொண்டு அவர்களைத் திருமண பந்தத்தில் ஈடுபடுத்தாமல் நாட்டுக் குரிய வழமையான முறையில் திருமணங்களை முடித்துவைத்துள்ளார். இதன் காரண மாக யஸ்மின் பாறுக்கி, ஜென்னத் பெறோஸா மாலிக்கி, முகம்மட் நௌஸாட் மஜீட், ஹம்ஸத் குறைஸா நாசர், வாஹிடா முகம்மட் லாபீர் என்பவர்களை மருமக்களாக்கி மகிழ்ச்சியும் கலகலப்பும் நிறைந்த குடும்பங்களின் வாழ்க்கைக்கு வழிவகுத்துள்ளார். இத்துடன் தனது மக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கையில் ஒன்பது பிள்ளைப் பாக்கியம் கிடைத்ததும் அமைச்சர் அப்துல் மஜீட் அவர்கள் பேரப்பிள்ளைகளைக் கண்ட குதூ கலத்தில் மனம் பூரித்து இளமை அடைந்துள்ளார் எனக் கூறலாம்.

சமூக சேவை உத்தியோகஸ்த்தராகக் கடமையாற்றிக் கொண்டு மக்களின் தேவைகள், தனது தேவைகள் எனச் சிறப்புறச் செயற்பட்டு வந்தமையை அறிந்த சம்மாந்துறை வீரமுனைத் தமிழ் மக்கள்-தங்களது வட்டாரத்துக்கு பட்டினசபை உறுப்பினராக வருமாறு அன்பு வேண்டுதல் விட்டனர். இதன் காரணமாக 1954 ஆம் ஆண்டு நடைபெற்ற சம்மாந்துறைப் பட்டினசபைத் தேர்தலில் - தமிழ் மக்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட முதலாம் வட்டாரத்தில் போட்டியின்றித் தேர்ந் தெடுக்கப்பட்டு பட்டினசபைத் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டதிலிருந்து உள்ளூர் அரசியலில் காலடி எடுத்து வைத்தார். பின்னர் 1958 ஆம் ஆண்டில் நடைபெற்ற சம்மாந்துறைப் பட்டினசபைத் தேர்தலில், முதலாம் வட்டாரத்துக்கு தமிழ் மகன் ஒருவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று அம்மக்களுக்கு அறிவுரை

கூறி இவர் பட்டினசபையின் நான்காம் வட்டாரத்தில் போட்டியின்றித் தேர்ந் தெடுக்கப்பட்டு பட்டின சபையின் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். இளமைத் துடிப்பும், சேவை மனப்பாங்கும் நிறையக் கொண்ட அப்துல் மஜீட் சம்மாந்துறை பட்டிணத்திண் வீதிகள், தெருக்கள், சுகாதார நலன்பேணல் நடவடிக்கைகளில் அயராத கரிசனை காட்டிவந்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் நலனுக்காக இவர் மேற்கொண்ட நடவடிக்கைளும், ஆற்றிய சேவைகளும் மக்கள் மனதைக் கவரலாகிற்று. சம்மாந்துறை மக்களும், அயல்கிராமத்தவர்களும் பாராளுமன்ற அரசியலின்பால் இவரை அழைத்தனர். 1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கல்முனைத் தேர்தல் தொகுதிக்கு - மட்டக் களப்பு தமிழ் பேசும் ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்டு 6095 வாக்குகளைப் பெற்றும் பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பை இழந்தார். இதன் அடித்தளமும் ஆசீர்வாதமும் இன்றுவரை இவரைப் பாராளுமன்றப் பிரதி நிதியாக வைத்திருக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளன என்றால் மிகையாகாது. பொத்துவில் தொகுதி உருவாக்கப் பட்டு-அதனுடன் சம்மாந்துறை இணைக்கப்பட்டு 1960 ஆம் ஆண்டு மார்ச்சில் நடை பெற்ற பொதுத் தேர்தலின்போது பொத்துவில் தொகுதிக்கு சுயேச்சை உறுப்பினராகப் போட்டியிட்டு 7736 மேலதிக வாக்குகளால் பொத்துவில் தொகுதிப் பிரதி நிதியாக தெரிவு செய்யப்பட்டார். பின் 1960 ஜுலையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அதே தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்டு 10,654 அதிகப்படியான வாக்கு களைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டதுடன், ஏனைய வேட்பாளர்களைக் கட்டுப்பணம் இழக்கச் செய்தார். பின்னர் 1965ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பொத்துவில் தொகுதிக்கு சுயேச்சை அபேட்சகரான அப்துல் மஜீட் அவர்களுடன் U.N.P., T.U.L.F., M.E.P ஆகிய கட்சிகளின் அபேட்சகர்களும், சுயேட்சை வேட்பாளர்களும் போட்டி யிட்டனர். இவ்வைந்து முனைப் போட்டியில் அப்துல் மஜீட் அவர்கள் 1472 மேல திக வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்டார். இதற்குப் பிறகு 1970 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது-அப்துல் மஜீட் அவர்கள் தன்பிரதேச மக்க ளின் நலனைக் கருத்திற்கொண்டு தனது அரசியல் கொள்கையின் போக்கை மாற்றி அமைத்துக் கொண்டார். முதல் முதலில் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து அதன் அபேட்சகராக T.U.L.F, S.L.F.P கட்சிகளின் அபேட்சகர்களுடன் போட்யிட்டு 1275 மேளதிக வாக்குகளால் பொத்துவில் தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளு மன்ற உறுப்பினராகத் தெரிவானார்.

புதிதாக சம்மாந்துறைத் தேர்தல் தொகுதி உருவாக்கப் பட்ட பின்னர் - 1977 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் T.U.L.F, S.L.F.P கட்சி களின் அபேட்சகர்களுடன் தானும் ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சராக போட்டியிட்டு 5027 மேலதிக வாக்குகளுடன் சம்மாந்துறைப் பாராளுமன்ற உறுப்பினரானார். 1977 ஆம் ஆண்டின் இவரது வெற்றியே நாடு பூராவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அமோக வெற்றியை ஈட்டிக் கொடுத்தது என்பதை அன்றைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தேர்தல் முடிவை அறிவிக்கும் ஒலிபரப்பு-உலகுக்கு எடுத்துக் கூறியது.

அப்துல் மஜீட் அவர்களின் நீண்டநாளைய பாராளுமன்ற வாழ்க்கையையும் அவர் மக்களுடன் அரசியல் பேணிய விதத்தையும் அடிப்படையாகக் கொண்டு 1989 ஆம் ஆண்டய மாவட்ட மட்டத்திலான பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பே ஐக்கிய தேசியக்கட்சி தனது தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக அன்னவரை நியமித்ததன் மூலம் 1989 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வருகின்றார். இது ஐக்கிய தேசியக்கட்சி ஜனாப் அப்துல் மஜீட் அவர்களுக்கு கட்சிரீதியாக வழங்கிய உயர்ந்த கௌரவத்தையே குறிக்கின்றது எனலாம்.

பாராளுமன்ற சட்டவாக்கத்துக்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அப்துல் மஜீட் அவர்களிடம் காணப்பட்ட நிர்வாகத் திறனையும், சேவை மனப்பாங்கையும் அவதானத்திற் கொண்ட 1977 ஆம் ஆண்டின் ஆட்சித்துறைத் தலைவர் மேன்மை தங்கிய **J. R.** ஜெயவர்த்தனா அவர்கள் இவருக்கு பிரதி அமைச்சுப் பதவியை வழங்கி தேசிய நிர்வாகத்துக்கும் இவரது ஆற்றலை ஈர்த்துக் கொண்டார். கொடுக்கப்படுகின்ற தேசிய பொறுப்புக்களை அப்துல் மஜீட் அவர்கள் திறம்படச் செயலாற்றத் தவறியதில்லை. இதற்கரக அமைச்சரவையில் மாற்றங்கள் வரும்போதெல்லாம் இவருக்கு நிர்வாகப் பொறுப்புக்களை வழங்குவதி ஜனாதிபதி J.R. ஜெயவர்த்தனா அவர்கள் பின் நிற்கவில்லை. இதுபோன்று தற்போதைய ஜனாதிபதி அதி உத்தம ரணசிங்க பிரேமதாஸ அவர்களும் அப்துல் மஜீட் அவர்களிடம் அவர் பிரதேச மக்களின் நலனோடு தொடர்புடைய நெசவுக்கைத்தொழில் அமைச்சுப் பொறுப்பை ஒப்படைத்துள்ளார். இவரது நிர்வாகத் திறனுக்காக குறுகிய கால இடைவெளிக்குள் வழங்கப்பட்ட அமைச்சுப் பொறுப்புக்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1977 தொடக்கம் 1978 வரை | காணி விவசாயப் பிரதி அமைச்சர். |
| 1978 தொடக்கம் 1980 வரை | மின்சக்தி எரிபொருள் நெடுஞ்சாலைப் பிரதி அமைச்சர். |
| 1980 தொடக்கம் 1981 வரை | எரிபொருள் மின்சக்தி பிரதி அமைச்சர். |
| 1981 தொடக்கம் 1983 வரை | மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர். |
| 1981 தொடக்கம் 1989 வரை | தபால், தந்தி, தொலைத் தொடர்பு பிரதி அமைச்சர். |

23.01.1992 தொடக்கம் இன்றுவரை நெசவுக் கைத்தொழில்துறை அமைச்சர்.

அப்துல் மஜீட் அவர்கள் மந்திரியாகவிருந்து தேசிய நிர்வாகத்துக்குப் பங்களித்தது போன்று-பாராளுமன்றக் குழுச் செயற்பாடுகளுக்கும் அவ்வப்போது தெரிவுசெய்யப்பட்டுக் கடமையாற்றி வந்துள்ளார். சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம், பொதுநலவாய அமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சங்கம் போன்றவற்றுடன் எரிபொருள், வீடமைப்பு, நெடுஞ்சாலை, தபால்தொடர்பு, சுற்றுலாக் கிராமியக் கைத்தொழில், புனர்வாழ்வு சமூக நலத்துறை, நிதி, பாதுகாப்பு போன்ற விடயங்களின் நலன்பேணும் பாராளுமன்றக் குழு உறுப்பினராகவும் கடமையாற்றி வந்திருக்கின்றார். இவற்றிற்கெல்லாம் சிகரம்வைத்தாற்போல் இவருடைய பாராளுமன்றக்குழு உறுப்புரிமையின் காலத்தை கூட்டுவான் வேண்டியோ நீண்டகாலங்களாக P.A.C. அரசாங்க, பொதுக்கணக்குப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினராக இருந்து வருகின்றார் அத்துடன், அரச திணைக்களங்களினதும், வங்கிகள், திறைசேரி போன்ற வற்றின் உயர் அதிகாரிகளினதும் அபிமானம் மிக்க நல்லபிப்பிராயத்தையும் பெற்று எம்மண்ணுக்குப் பெருமை தேடித்தந்துள்ளார்.

பாராளுமன்றம் வெளிநாடுகளுக்கு நல்லெண்ணத்தூதின் அடிப்படையில் பாராளுமன்றப் பிரதி நிதிகளை அனுப்பிவைப்பது வழக்கமாகும். இவ்வழமையரன வெளிநாட்டுப் பயணத்தொடரில்-எமது பாராளுமன்றப் பிரதி நிதி அப்துல் மஜீட் அவர்களுக்கும் பல வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் 1970 ஆம் ஆண்டு மலேஸியாவுக்கும், 1980 ஆம் ஆண்டு ஈராக் நாட்டுக்கும், 1990 ஆம் ஆண்டு குவாட்டமாலாவுச்கும் நல்லெண்ணத் தூதாகச் சென்று - அங்கெல்லாம் இலங்கைப்

பாராளுமன்ற உறுப்பினர்களின் திறமையையும் சேவை மனப்பாங்கையும் உலகறியச் செய்துள்ளார். இவற்றுடன் வடகொரியாவின் தலை நகரமான பியொங் யங்கில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற உறுப்பினர் மகாநாட்டில்-தென்கிழக்கு ஆசியப் பிரதேசத்தில் வாழ்கின்ற முஸ்லிம்களின் நிலமையினை சூசகமாக எடுத்துக் கூறிப் பாராட்டையும் பெற்றுள்ளார். மலேசியாவின் கோலாலம்பூரிலும், இந்தியாவின் காயல்ப் பட்டணத்திலும் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகா நாட்டில் கலந்து தமிழ் வளர்த்த பெரியார்கள் வரிசையில் ஏமது அப்துல் மஜீதும் கணிக்கப்பட்டு வருகின்றார்.

அப்துல் மஜீட் அவர்கள் தன்னை ஒரு துணிவும், வீரமும் மிக்க பாராளுமன்ற உறுப்பினர் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளார். இவர் தனக்கு வழங்கப்பட்ட பட்டம் பதவிகளை உயர்வாகக் கருதாது, அரசு அன்றேல் கட்சித் தலைவர்களின் அபிமானத்தைப் பொருட்படுத்தாது செயல்பட்டுள்ளார். கரும்புச் செய்கைக்காக பொது மக்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகள் கரும்பு உற்பத்திக்குப் பயன்படுத்தாதிருந்த வேளையில் அக்காணிகளை உரியவர்களுக்கு மீண்டும் வழங்க நடவடிக்கை மேற்கொண்டதும், மட்டக்களப்பு மாவட்ட வடமுனை தொர்பான அரசின் கொள்கை தனது பிரதேசமக்களின் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களின் நலனுக்கு எதிரானதாகவுள்ளதெனக் கருதி மட்டக்களப்பு மாவட்ட அமைச்சுப் பொறுப்பிலிருந்து நீங்கிக் கொண்டதும், தனது இனத்தின் மக்களை இழிவு படுத்திச் செய்தி பிரசுரித்த B.B.C நிருபரின் 'பல்லை உடைத்திடுவேன்' எனப் பாராளுமன்றத்தில் கர்ச்சித்ததும் இவரது வீரம் மிக்க துணிவுச் செயல்களுக்கு இன்றும் உதாரணமாகப் பதிந்துள்ளன.

அப்துல் மஜீட் அவர்கள் தன் குடும்பத்தின் சொத்துக்களையும், தான் பெற்றகல்வியுடன் தொடர்புள்ள பட்டம் பதவிகளையும் கொண்டு செல்வந்தனாக மாறமுற்படவில்லை. எதிராக தன் வாழ்நாளில் அரைவாசிக்கு மேற்பட்டகாலத்தை தியாக சிந்தனையுடன் மக்கள் பொதுப் பணிக்கென்றே அர்ப்பணித்து, கிழக்கிலங்கையில் கூடிய ஆயுளை மக்கள் சேவைக்குச் செலவிட்டவர் என்ற வரலாற்றுப் பதிவையும் ஏற்படுத்தியுள்ளார். இவ்வுண்மையை பின்வரும் கணக்கீட்டிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

பாராளுமன்ற உறுப்பினர்: 1960 தொடக்கம் 1992 வரை 32 வருடம்

பட்டின சபைத் தலைவர்: 1954 தொடக்கம் 1960 வரை 06 வருடம்

மொத்த அரசியல் பணி: 1954 தொடக்கம் 1992 வரை..38 வருங்கள்

1951 ஆம் ஆண்டு தொடக்கம் 1954 ஆம் ஆண்டு வரையான மூன்று வருடங்களின் ஆசிரியர்பணி, சமூகசேவைத் தொழிலையும் இவற்றுடன் சேர்த்துக் கணக்கிட்டோமாகில் இவரது மக்கள் பொதுப்பணிக்காலம் நாற்பத்தொரு வருடங்களாகின்றன. ஆனால் 15.10.1926ல் பிறந்த அப்துல் மஜீட் அவர்களுக்கு 10.08.1992 ஆகிய இன்று 65 வருடமும் 09 மாதங்களும் 25 நாட்களுமே வயதாகின்றது. எனவே 66 வயதை அடையாதவர் 41 வருடங்கள் மக்கள் பொதுப் பணி செய்துள்ளார் என்றால் அவரது மக்கள் சேவைச் சிந்தனையை சொல்லாமலே புரிந்து கொள்ளலாம்.

32 ஆண்டுகளைக் கடந்து பாராளுமன்றச் சேவை செய்யும் அப்துல் மஜீட் அவர்களின் பிறப்பும், குடும்பமும் அவர் கற்ற கல்வியும் புரிந்த சேவைகளும் அவரை பலரும் போற்றும் அரசியல் வாதியாக இன்றேல் சமூகத் தலைவனாக எவ்வாறு மாற்றியமைத்தது என்பவைகளை இதுவரை ஓரளவு புரிந்து கொண்டோம். இவரது நல்ல பண்புகளையும், அவர்காட்டிய சமூகப்பாதைகளையும், அவர் படைத்த அரசியல் நெறிமுறைகளையும் நாம் படிப்பினையாகக் கொண்டோமாகில்-எமது பிரதேசத்தில் பலரும் போற்றும் பண்புள்ள தலைவர்கள் உருவாவதற்கும், சமூகங்களிடையே நல்லுறவும் இன ஒற்றுமையும் உருவாகி வளர்வதற்கும், எமது பிரதேசம் இன்று போல் எதிர்காலங்களிலும் அக்காலங்களின் தேவைக்கேற்ற அபிவிருத்திகள் காண்பதற்கும், அபிவிருத்திகளுக்கு ஒத்துழைப்பு நல்கும் உயர்ந்த மக்கள் சமூகம் உருவாவதற்கும் வழிகோலாக அமையும் என்பதில் எந்த ஓர் ஐயமுமில்லை.

# ஏனிந்த விழாக் கொண்டாடுகின்றோம்

**A. A.** பாவா,
தலைவர்,
விழா ஏற்பாட்டுக் குழு.

மக்கள் சமூகம் விரைவாக வளர்ச்சியடைய வேண்டுமானால் அச்சமூகத்தின் பங்காளர்களின் அயரா முயற்சி அவசியமாகும். சமூகப் பங்காளர் வரிசையில் உற்பத்தியாளர்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அறிஞர்கள் போன்றோர்களுடன் அரசியல் வாதிகளும் பிரதானமானவர்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இப்பங்குதாரர்களில் மக்கள் மேம்பாட்டிற்கு உதவுகின்றவர்களை அவ்வப் போது பாராட்டி விழாக் கொண்டாடுவது எமது பிரதேசத்தின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். சென்ற காலங்களில் எம்மவர் இப்படியான பாராட்டு விழாக்களை ஏற்படுத்தி சமூகத்தின் மேன்பாட்டுக் குழைத்தவர்களையும், அச்சேவைக்குள் புதிதாக கால் பதித்தோரையும் பாராட்டிய பண்பாளர்கள் என்பதை பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன்.

சமூகப் பங்காளர் வரிசையிலுள்ள அரசியல் வாதிகள் அவர் சார்ந்த சமூகங்களின் அரசியல், சமூக, பொருளாதார மேம்பாட்டிற்குப் பல்வகையில் உதவி வருவதனால் மக்கள் அன்னவர்களைப் பாராட்டி வருகின்றனர். இவ்வகையில் எமது அமைச்சர் கௌரவ அப்துல் மஜீட் அவர்களை நன்றியுடன் கௌரவித்துப் பாராட்டு முகமாக இவ்விழாக் கொண்டாடப்படுகின்றது.

''கற்பவனாகவிரு,
அல்லது கற்றுக் கொடுப்பவனாகவிரு,
இன்றேல் கல்விக்கு உதவி புரிபவனாக மாறிவிடு''

என்ற திருமறையின் கருத்துக் கொப்ப பட்டப் படிப்புவரை கற்பவனாக விருந்து, சிலகாலம் கற்றுக்கொடுக்கும் நல்லாசிரியனாய் மாறி, கடந்த 32 வருடங்களாக கல்விக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் உதவி புரிய தன்னை அர்ப்பணித்து எம்பிரதேசத்தின் முதல் மனிதனாக மதிக்கப்படும் கௌரவ அமைச்சர் எம்.ஏ.அப்துல் மஜீட் அவர்களுக்குப் பாராட்டுவிழாக் கொண்டாடும் குழுவின் தலைவனாகக் கிடைத்த பாக்கியத்தைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

புகழையும், புகழ்ச்சிகளையும், பெருமைகளையும் எதிர்பாராது தான் பிறந்த பிரதேசத்தில் வாழும் மக்களின் உயர்வே தனது உயர்வு எனக்கருதி வாழ்ந்து வந்த பெருமகனை இன்றுள்ள இளந்தலை முறையினர் நன்கு அறிந்திருக்க முடியாது. ஏனென்றால் தற்போது எமது பிரதேசத்தில் காணப்படும் பொது வசதிகள் கடந்த 32 வருடங்களுக்கு முன் காணப்பட்டதா? என்பதை அவ்விளைய தலை முறையினர் அறியாமையே இதற்குக் காரணமாகும். ஆனால் இவ்வுண்மையை 1960 ஆம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து இன்றுவரை வாழ்ந்து வருகின்ற பெரியார்கள் எமது பிரதேசத்தின் அபிவிருத்தியையும், அதன் காரணகர்த்தா யார்? என்பதையும் நன்கு அறிவர். என்பதை மறுக்க முடியாது.

சென்ற பொதுத் தேர்தல் காலங்களில் இவ்வுண்மைகளை மூடிமறைத்து அரசியலில் சுயலாபம் அடைய எத்தனித்தவர்கள் - இப்பிரதேசத்தின் இளந்தலை முறையினரின் பிஞ்சு உள்ளங்கள் அப்துல் மஜீட் அவர்களின் அரிய சேவைகளைத் தெரிந்து கொள்ள வாய்ப்பை உண்டு பண்ண வில்லை. இந்த விதமாக அமைச்சர் அவர்களின் சேவைகளை இருட்டடிப்புச் செய்த - செய்து வருகின்ற நன்றி மறந்த கொடூரத்தை இங்கு நீங்கள் அறிவீர்கள்.

''கௌரவ அமைச்சர் அவர்களின் சேவைகளை மறப்பதற்கு நன்றி மறந்தவர்களல்ல நாங்கள்'' என்பதை எடுத்துக் காட்டவும், எமது எதிர்காலச் சந்ததியரின் பிஞ்சு உள்ளங்களில் விழாக் கதாநாயகன் எமது பிரதேசத்துக்குச் செய்த சேவையைப் பதிய வைக்கவும் வேண்டுமென்ற ஆசையில், பாரராட்டு விழாக் கொண்டாடி அதன் மூலம் எமது பிரதேசத்தில் மேலும் அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணங்களை மூலமாகக் கொண்டே இப்பெருவிழாக் கொண்டாடப் படுகின்றது.

நாங்கள் கொண்டாடுகின்ற இந்த விழாவில் அமைச்சர் அவர்களுக்கு அரசியல் இலாபம் தேடும் நோக்கம் எதையும் கொண்டிருக்கவில்லை என்பதை அழுத்தமாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். அமைச்சர் அவர்களைப் போன்று எமது பிரதேச அரசியல் வாதிகளும் மற்றைய சமூகப்பங்காளர்களும் மக்கள் மனங் கவர்ந்த சேவைகளைச் செய்கின்றபோது அவர்களையும் கௌரவித்துப் பாராட்டு விழாக் கொண்டாடும் உயர்வான நோக்கத்தை எமது இக்குழு' கொண்டுள்ளது என்பதையும் பகிரங்கமாகக் கூறிக் கொள்கின்றேன். ஆகையால் தனிமனித அரசியல் வேறுபாட்டினால் இவ்விழாவை விமர்சிக்காமல் மக்கள் மேம்பாட்டிற்குச் செய்யப்பட்ட நற்சேவைகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு பாராட்டும் மனிதப்பண்பைக் கடைப்பிடிப்போம்.

இப்பாராட்டு விழாவைப் பயனளிக்கக் கூடிய பல அம்சங்களாக வகுத்துக் கொண்டாடி வந்திருக்கின்றோம். பயனும், நிழலும் தரக்கூடிய 32,000 மரக்கன்றுகள் நடப்பட்டு சூழல் பாதுகாப்புக்கு உதவப்பட்டுள்ளது. பொதுமக்களின் நன்மைகருதி ஆஸ்பத்திரி, பொது வீதிகளில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. எமது மாவட்டத்தில் வாழ்கின்ற மூன்று சமூகங்களுக்கிடையே பாதிக்கப்பட்டிருக்கும் சமூக உறவை மீண்டும் ஏற்படுத்த மாவட்ட ரீதியாக உதைப்பந்தாட்டப் போட்டி நடத்தப் பட்டது. தளபாடங்களற்றுக் கல்வி நிருவாகத்தைச் செய்து வந்த கோட்டக் கல்வி அலுவலகத்துக்குப் பல்லாயிரம் ரூபா பெறுமதியான தளபாடம் பெற்றுக் கொடுக்கப் பட்டது.

சொளயன் சேனையிலுள்ள குடியிருப்புக் காணிகளை வளவற்ற ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்து அவற்றிக்கு உத்தரவுப் பத்திரமும் வழங்கப்பட்டது. படித்து வேலையற்றிருந்த 56 சகோதரிகளுக்குச் சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான சிக்சேச் தையல் மெசின்களை வழங்கி அவர்களைச் சுய தொழில் செய்யும் முயற்சியில் ஈடுபடுத்தியுள்ளோம். கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களைத் திறந்து வைத்ததனால் மேலும் கட்டிடம் அமைக்கும் வாய்ப்பையும், திருத்தம் செய்யும் சந்தர்ப்பத்தையும் அடைந்துள்ளோம்.

நாவன்மையுள்ளோரின் ஆற்றல்களை வளர்ப்பதற்குப் பேச்சுப் போட்டிகள் நடாத்தப்பட்டன. ஓட்டவீரர்களை ஊக்குவிக்க மரதன், சைக்கிளோட்டப் போட்டிகளும் இவ்விழாவின் அங்கமாக நடாத்தப்பட்டு, முழுமை பெறும் நோக்கில் விழாவின் கதாநாயகன் அமைச்சர் கௌரவ அப்துல் மஜீட் அவர்களின் 32 ஆண்டு

அரசியல் சேவையினைக் கௌரவித்துப் பாராட்ட உங்கள் முன் அவருடன் பாராளு மன்றச் சேவை செய்யும் கௌரவ பிரதம அமைச்சர், கௌரவ சபாநாயகர், கௌரவ அமைச்சர்கள், கௌரவ இராஜாங்க அமைச்சர்கள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களை அன்புடன் வரவேற்றிருக்கின்றோம். அன்னவர்கள் எமது அமைச்சர் அப்துல் மஜீட் அவர்களைப் பற்றி கூறும் பாராட்டுக் கருத்துக்கள் உங்கள் நெஞ் சங்களை மேலும் புளகாங்கிதமடையச் செய்யும் என எதிர்பார்க்கின்றேன்.

இந்தக் கௌரவத்துக்குரிய பெரியார்களுடன் இணைந்து நானும் உங்கள் சார்பாக எமது மதிப்பிற்குரிய அமைச்சரவர்களைப் பாராட்டுகின்றேன். 32 ஆண்டுகள் உங்கள் தன்னலம் கருதாச் சேவைக்கு மறுமையில் இறைவனிடத்தில் நற்பாக்கியங்கள் கிடைக்கவும், நீண்ட ஆயுளும் தேக ஆரோக்கியமும் பெற்று எம்பதிக்கு இன்னும் தொண்டாற்றும் வாய்ப்பை அன்னவக்கு இறைவனிடம் இறைஞ்சுகிறோம்.

இறுதியாக சம்மாந்துறைப் பிரதேசம் கண்ட இச்சரித்திரவிழா சிறப்பாக நடைபெற ஆசிகள், ஆலோசனைகள், ஒத்துழைப்புக்கள் வழங்கிய அனைவரையும் அன்புடன் பாராட்டி - எனது சார்பாகவும் விழாக்குழு சார்பாகவும் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக என்னுடன் இணைந்து திட்டங்கள் வகுத்து, செயல் வடிவமாக்கி மாசற்ற விழாக் கொண்டாட அல்லும் பகலும் அயராதுழைத்திட்ட விழாக்குழுவினரை உயர்வாக மதித்து, மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எம்பதியில் முத்துப்பதித்த இவ்விழாவின் பங்காளர்களான உங்களனைவரையும் எல்லாம் வல்ல இறைவன் ஆசீர்வதிக்கப் பிராத்திக்கின்றேன்.

''நன்றி''

அல்ஹம்துலில்லாஹ்

# தன்னலம் கருதாத மக்கள் சேவகன்

சுவாமி ஜீவனானந்தாஜீ
இராமகிஸ்ண மிஸன்,
கல்லடி,
மட்டக்களப்பு.

''மக்கள் சேவையே மகேசன் சேவை'' எனும் உயரிய தத்துவத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக நம்மிடையே வாழ்ந்து வருபவர்களுள் மஜீத் அவர்களும் ஒருவர் என்பதைக் கூறிக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அரசியலில் புகுந்து, சாதி, மத பேதம் கருதாமல் எல்லோரும் இறைவனின் திருவுருவங்கள் என்ற வகையில் கடந்த 32 ஆண்டுகளாக அவர் ஆற்றியுள்ள பணி அனைவரதும் பாராட்டுக்குரியதாகும். இத்தகைய நற்பணியை அவர் எவ்வித தங்குதடையுமின்றி தொடர்வதற்கு வேண்டிய சகல சக்தியையும் அவருக்கு அளிக்க வேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளை முதலிற் பிரார்த்திக்கின்றேன்.

இன்றைய கைத்தறி நெசவுத்துறை கௌரவ அமைச்சர் அப்துல் மஜீத் அவர்களுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு அரைநூற்றாண்டுக்கும் கூடியதாகும். நாங்களிருவரும் 1937 ஆம் ஆண்டுமுதல் மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலயத்தில் கல்வி பயில்கையில் ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கி வந்த மாணவர் விடுதியில் ஒன்றாக வசித்தோம். அப்போது வித்தியாலய மாணவர் தொகை சுமார் 160 தானிருக்கும் வித்தியாலயத்திலும் விடுதியிலும் எமக்கு அடிகளாரிடம் நெருங்கிப் பழகுவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. இவ்வாய்ப்பு எம்மை நற்பண்பாளர்களாக வாழ்வதற்கு உதவியது. இந்தச் சந்தர்ப்பம் வாழ்க்கையில் மறக்க முடியாத ஓர் வாய்ப்பு என்றால் மிகையாகாது. அப்போது விடுதியிலிருந்தோர் சுமார் 30 தானிருக்கும். அவர்களிற் பலர் இன்று சுறுசுறுப்பு மிக்க வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெற்றிருப்பர். ஆனால் எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய நண்பர் மஜீத் போன்றோர் இன்றும் ஆற்றல் நிரம்பப் பெற்றவராய் மக்கள் சேவையில் தன்னைப் பிணைத்துக் கொண்டு செயற்படுவதைக் காணும்போது எனது மனம் ஸ்ரீராமகிருஷ்ண தண்ணிழலில் சுவாமி விபுலாநந்தர் சுவாமி நிஷ்கமானந்தர் போன்ற பெரியோர்கள் அவருக்கு அளித்த உண்மைக் கல்வியின் உயர்வினையே எண்ண வைக்கிறது.

நமது நாட்டுத் தபோதனர்களுள் ஒருவர் வாழ்க்கையில் நடக்கும் செயல்களைச் சுருக்கி அவை ''எப்பவோ முடிந்த காரியம்'' எனப் பகர்ந்துள்ளார்கள். அவைகள் தற்செயலாக வந்து அமைந்தவைகளல்ல. இன்று கௌரவ அப்துல் மஜீத் அவர்கள் சாதி, மத வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று பணிபுரிகின்றார்கள் என்றால் அதற்குரிய வித்து அன்னாரின் பாட்டனார் காலத்திலேயே விதைக்கப் பட்டது எனக் கூறலாம். அப்பெரியார் இஸ்லாம் மதக் கொள்கைகளை சிறிதும் பிறழாது அனுட்டித்த அதேவேளையில், பிறமதங்கள் மீது மதிப்பும் கொண்ட வராகவும் வாழ்ந்தார். பிறமதத்தவர் மீது அன்பு காட்டுவற்கு எந்தக் காரணியும் குறுக்கீடாய் இருக்கவில்லை. நகமும் தசையும் போன்ற இறுக்கமான பிணைப்புகளை தமிழ், முஸ்லீம் சமூகத்தவர் மத்தியில் ஏற்படுத்துவதில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷனும் அதன் நிர்வாகத்திலிருந்த யாழ்/வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம், திருக்கோணமலை

இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலயம் போன்ற கல்விக் கூடங்கள் புரிந்த பங்களிப்பு மகத்தானது. ஆத்மீகம் கலந்த கல்வி ஒளியிலே இரு சமூகங்களும் ஒருதாய்ப் பிள்ளைகளாக வளர்ந்தன. அவற்றிடையே சகோதரத்துவம், பரஸ்பர அன்பு என்பவையே செழித்து வளர்ந்து பலனளித்தன. இந்தச் சூழலில் தன்னலமற்ற மிஷன் துறவியர்களின் அரவணைப்பில் வளர்ந்தவர் எமது அமைச்சர் கௌரவ எம்.ஏ.மஜீத் அவர்கள்.

மட்டக்களப்பில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் சிவானந்த வித்தியாலயம் அமைந்துள்ள கல்லடி உப்போடைக் கிராமம் நெய்தல் மருவிய நிலப்பாங்கு கொண்டது. அங்கு கல்விப்பயிர் பரம்பொருளின் பேரருளால் செழித்து வளர்ந்தது. ''எல்லா மதத்தினரும் கூடுவோமே ஏகம் கடவுளென்று பாடுவோமே'' எனும் சமரச சன்மார்க்க நெறியில் நின்று மதத்தால் வேறுபடினும் மொழியால் ஒன்றிணைந்த இரு சமூகத்தவரும் கற்று, வளர்ந்து, உயர்ந்து மக்கள் நலனுக்கு உழைக்க முன்னின்றனர். தாம் பெற்ற பரந்த கல்விக் கோட்பாடுகளுக்கு ஏற்பவும், துறவிகளின் சீரிய வாழ்க்கையிலிருந்து பெற்ற அனுபவங்களுக்கு இயையவும் தம் வாழ்க்கைப் பாதையைச் செவ்வனே வகுத்துக் கொண்டவர்களுள் கௌரவ அமைச்சர் அப்துல் மஜீத் அவர்கள் எப்போதும் முன்னணியில் நிற்பவராவர்.

இளமையில் கல்வி, ஒழுக்கம் முதலிய உயரிய விழுமியங்களை பெற்றுக் கொண்ட அவர் பொது மேடைகளிலும் மக்களுடன் தொடர்பு கொள்ளும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் தனக்கு வழிகாட்டிய ஸ்ரீராமகிருஷ்ண மிஷனையும் தன்னை சீரியோனாக்கிய சிவானந்த வித்தியாலயத்தையும் பெருமையுடன் குறிப்பிட அவர் தவறியதில்லை.

அரசியல் வாழ்வில், தமது ஆசிரியராயிருந்த அமரர் திரு. வ. நல்லையா அவர்களைப் பின்பற்றினார் என்றால் மிகையாகாது. கஷ்டங்கள் ஏற்பட்ட வேளைகளிலும் அவர்தாம் வரித்துக் கொண்ட கொள்கையிலிருந்து விலகிச் செல்லவில்லை. வெற்றியிலும் தோல்வியிலும் தான் ஒழுகிய குறிக்கோளை தொடர்ந்து ஏற்று அவற்றினாலேற்பட்ட பலாபலன்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டவர் மஜீத் அவர்கள். குறுகிய பாதைகளிற் சென்று பெறக் கூடிய அரசியல் அநுகூலங்களில் அவர் என்றும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. தமிழ், முஸ்லீம் ஒற்றுமையே கிழக்கு மாகாண மக்களின் சுபீட்சத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் என்பதில் அவருக்கு அசையாத நம்பிக்கை இருந்தது. அதை நடைமுறைப் படுத்துவதில் அவர் செலுத்திய பங்களிப்பை சரித்திரம் என்றும் எடுத்துக் கூறும்.

கௌரவ மஜீத் அவர்கள் மேற்கொண்ட பரந்த கொள்கைகள் சில சமயங்களில் அன்னாரின் அரசியல் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு தடையாக விருந்தது. அவர் தனது வாக்காள மக்களின் எண்ணங்களை எப்பொழுதும் மதித்தவர். அதனால் அவரை பிரதிநிதித்துவம் செய்த இரு சமுதாயத்தினரும் பெரிதும் மதித்தனர்.

அவருடைய வாழ்வு என்றும் பசுமையானதாகவும், மக்கள் நலனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒன்றாகவும் விளங்க இறைவன் அவருக்கு வழிகாட்டுவானாக அதற்கு வேண்டிய தேகசுகம், ஆற்றல், சந்தர்ப்பம் என்பவற்றை அவருக்கு நிறைய அருள வேண்டுமென பரம்பொருளை வேண்டி நிற்கின்றேன்.

# கௌரவ எம். ஏ. அப்துல் மஜீட் எம். பி. அவர்கள்
## சம்மாந்துறை வடக்கு பிரதேசத்துக்கு ஆற்றிய அருஞ்சேவை ஓர் அறிமுகம்

திரு. எஸ். தினகரப்பிள்ளை,
கொத்தணி அதிபர்,
றாணமடு — மத்திய முகாம்.

உண்டிகொடுத்தோன் உயிர்கொடுத்தோன் ஆவான் என்ற வாக்குக்கொப்ப ''உணவு வழங்கும் உழவர்களின் பிரதி நிதியாயுமிருப்பதரல் நான் உயர்வைக் காண்கின்றேன்.'' என்ற தாரக மந்திரத்தை தன்வீட்டிலே தொங்கவிட்டுக் கொண்டு, முப்பத்திரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அரசியல் வானிலே, கிழக்கிலிருந்து உதயமான தாரகைதான் கௌரவ எம். ஏ. அப்துல் மஜீட் பி.ஏ. அவர்கள்!

மட்டக்களப்பு அம்பாறை வீதியிலே உள்ள சம்மாந்துறையிலே தோன்றிய கௌரவ மஜீட் அவர்கள், பொத்துவில் தொகுதிப் பாராளுமன்றப் பிரதி நிதியாக, 1960 ம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டார். பின்னர் அத்தொகுதி பிரிக்கப்பட்டு, சம்மாந்துறைத் தொகுதி தோற்றுவிக்கப்பட்டது.

சம்மாந்துறைத் தொகுதியின் தலை மகனாக, ஈடும் எடுப்பும் அற்றவராக ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவரராக கௌரவ நெசவுக்கைத்தொழில் அமைச்சர் M. A. அப்துல் மஜீட் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். இத் தொகுயின் வடக்குப் பிரதேசம், சம்மாந்துறைக்கு வடக்கே, மட்டக்களப்பு மாவட்டம் வரை நீண்டு கிடக்கிறது, இங்கு பழம் பெரும் கிராமங்களாக அன்னமலை, நாவிதன்வெளி, சவளக்கடை, சொறிக்கல்முனை ஆகிய கிராமங்கள் மீன்பாடும் மட்டக்களப்பு வாவியின் மேற்குக்கரை ஓரத்திலே அழகுற அமைந்துள்ளன.

கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை ஏற்படுத்திய குடியேற்றத்திட்டத்தில், 11ம் கிராமம் (றாணமடு) 12ம் கிராமம் (சாளம்பைக் கேணி) 6ம் கிராமம், 7ம் கிராமம், 15ம் கிராமம், 4ம் கிராமம், (வேப்படித் தோட்டம்) 5ம் கிராமம் (வீரத்திடல்) ஆகிய கிராமங்கள் தோன்றின. மேலும் வீரச்சோலை, ஏத்தாளக்குளம், சென்றல் கேம்ப், என்னும் கிராமங்களும் ஏற்படுத்தப்பட்டன.

சென்றல் கேம்ப், மற்றும் கிராமங்களுக்கு ஒரு பட்டினமாக அமைந்துவிட்டது. சென்றல் கேம்பிலிருந்து அம்பாறைக்கு நல்ல போக்குவரத்து வசதி உண்டு, சென்றல் கேம்பை, மத்திய முகாம் மத்திய பாசறை என்றெல்லாம் அழைப்பர். வக்கி எல்ல, மண்டூர், களுவாஞ்சிக்குடி, கல்முனை, சம்மாந்துறை, அம்பாறை, உகனை ஆகிய இடங்களுக்கு சென்றல் கேம்ப் மத்தியிலே அமைந்துள்ளது.

இந்தப் பிரதேசம் குடியேற்றக் கிராமங்களை அனேகமரகக் கொண்டுள்ள படியாலும், மட்டக்களப்பு வாவிக்கு மேற்கே அமைந்திருந்த படியாலும் அன்று போக்கு வரத்துக் கடினமாயிற்று. இதனால் கல்வி வாய்ப்புக்களில் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வந்திருக்கிது. தற்போதுதான் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. 1960 ம் ஆண்டுக்குப் பிறகு வீரச் சோலை அரசினர் தமிழ் வித்தியாலயம், மத்திய முகாம் அரசினர் முஸ்லிம் வித்தியாலயம், ஏத்தாளக் குளம் அரசினர் முஸ்லிம்

வித்தியாலயம் என்பன புதிதாகத் தோற்றுவிக்கப்பட எல்லாக் கிராமங்களிலும் பாடசாலைகள் உண்டு எனும் நிலை ஏற்படுத்தப்பட்டது. இருந்தும் அன்னமலைக் கிராமத்துக்கென ஒரு பாடசாலை அமைக்கும் வாய்ப்பு இருந்து வருகின்றது.

கௌரவ அமைச்சர் அப்துல் மஜீட் அவர்கள் சிறந்த செயல் வீரர். பழைய கட்டிடத்தைக் கொண்டிருந்த நாவிதன் வெளி அன்னமலை மற்றும் சொறிக் கல்முனைப் பாடசாலைகளுக்கு 100' × 20' அளவிலான கட்டிடங்களை ஆக்கிக் கொடுத்தார். மேலும் சொறிக் கல்முனையில் 40' × 20' அளவிலான விஞ்ஞான ஆய்வு கூடத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

1978ம் ஆண்டில் வீசிய சூறாவெளியால் அரசாங்க, தனியார், பாடசாலைக் கட்டிடங்கள் அனேகமாக அடியோடு சேதமாக்கப்பட்டன. இவற்றையெல்லாம் அக் கறையுடன் மீண்டும் கட்டிக்கொடுத்தும், திருத்தியமைத்தும் அரும்பெரும் சேவை செய்த செம்மல் மஜீத் ஐயா அவர்களை மறப்பதற்கில்லை.

றாணமடு, சாளம்பக்கேணி, 7ம் கிராமம் வீரத்திடல், 15ம் கிராமம், 6ம் கிராமம், சவளக்கடை ஆகிய கிராமங்களில் பாடசாலைக் கட்டிடங்களை மீண்டும் புதிதாகவே கட்டிக்கொடுத்துதவினார். றாணமடுவில் கிராம அபிவிருத்தி மன்றம் கூட தரைமட்டமாகியதால் மீண்டும் புதிய மெருகோடு அமைத்துக் கொடுத்துச் சேவை புரிந்தார். இதுபோலவே நாவிதன்வெளி ஊராட்சி மன்றக் கட்டிடத்தையும் உரிய முறையில் கட்டுவிக்க ஆக்கம் கொடுத்தார்.

சம்மாந்துறை வடக்குப் பிரதேசத்துக்கென சென்றல் கேம்ப் பட்டினத்தில் வார்ட் வசதியுடன் கூடிய வைத்தியசாலை ஒன்றை அமைத்துக் கொடுத்த பெருமையும் அவரையேசாரும்.மேலும் 15ம் கிராமத்தில் ஒரு வைத்தியசாலையை அமைத்தார். வார்ட் வசதியோடு அதனையும் அபிவிருத்தி செய்யும் எண்ணங் கொண்டிருந்தார்.

சுயமுயற்சி வீடுகள் பலவற்றை ஆக்கிக் கொடுத்து உதவினார். அன்னமலையில் 60 வீடுகளும், 15ம் கிராமத்தில் 30 வீடுகளும், 11ம் கிராமத்தில் 50 வீடுகளும், 4ம் கிராமம், 15ம் கிராமம், 12ம் கிராமம் ஆகியவைகளிலும் கனிசமான அளவு வீடுகளைப் பெற்றுக் கொடுத்து வீடற்றோருக்குப் பேருதவி புரிந்துள்ளார்.

இப்பிரதேசத்துக்கு சேனநாயக்க சமுத்திரத்திலிருந்துதான் வாய்க்கால் வழியாக நீர் கிடைக்க வேண்டும். தங்குதடையின்றி நீர் கிடைக்க தன்னாலான சகல முயற்சிகளையும் செய்து சீரான நீர்ப்பாசனத்துக்கு ஏற்ற வழிவகைகளைச் செம்மையாக ஆக்கித்தந்தார். 12ம் கிராமத்திலும், 5ம் கிராமத்திலும் குளங்களை அமைத்தார். அன்னமலை மற்றும் நாவிதன்வெளிப் பழைய குளங்களைப் புனருத்தாரணம் செய்து நெற்காணிகள் நீரைப்பெற ஆவன செய்திட்டார். அரச காணிகளில் அத்துமீறிப் பிடித்துக் குடியேறிய, அல்லது விவசாயம் செய்தவர்களுக்கு உத்தரவுப்பத்திரம் பெற்றுக் கொடுத்து உரிமையாக்குவதில் பெரும் வெற்றிகண்டு தீரர் ஆனார்.

ஒரு காலகட்டத்தில் அரசாங்கம் பல ஏக்கர் காணிகளைச் சுவீகரித்துக் கொண்டது. அது தவறு என்று இடித்துரைத்து வாதாடி அக்கிலா வெளியில் சுமார் 200 ஏக்கர், மிலாத்து வட்டையில் சுமார் 150 ஏக்கர், தொட்டாவெளி வட்டையில் ஏறக்குறைய 200 ஏக்கர், பறயன்டகளிமடுவில் ஏறத்தாள 100 ஏக்கர் என்று, மொத்தமாக 650 ஏக்கர் காணிகளை மீளப் பெற்றுக் கொடுத்துப் பெரும் சேவை செய்திட்டார்.

இப்பிரதேச மக்களின் தொழில் வாய்ப்பிலும் கௌரவ அமைச்சர் அப்துல் மஜீட் அவர்கள் கவனம் செலுத்தாமலில்லை 5ம் கிராமத்தில் நெசவு நிலைய மொன்றையும், 15ம் கிராமத்தில் வைக்கோல் சேகரிக்கும் நடமாடும் நிலையத்தையும் உருவாக்கி அதிகமானோர் தொழில் செய்யும் வாய்ப்பையும் ஏற்படுத்தி ஏற்றம் பல கண்டிட்டார். அத்துடன் அவ்வப்போது படித்த வாலிபர்கட்கு வேலை வாய்ப்புக் களைப் பெற்றுக் கொடுத்தார். கிராமசேவையாளர், ஆசிரியர், இலிகிதர், நடாத்துநர் சாரதி, தொலைத் தொடர்பு நிலைய உத்தியோகஸ்த்தர், கலால் பகுதி உத்தியோ கஸ்த்தர், குடும்ப நல உத்தியோகஸ்த்தர்கள் எனப் பலவகையான உத்தியோகங்களை யும் இப்பகுதிக்கெனப் பெற்றுத் தந்திருக்கின்றார்கள்.

அன்னமலை, நாவிதன்வெளி, சொறிக்கல்முனை, சென்றல் கேம்ப், வேப் படித் தோட்டம், வீரத்திடல், சாளம்பக்கேணி ஆகிய கிராமங்களுக்கு மின்சார வசதியைப் பெற்றுக் கொடுத்து இருண்ட கிராமங்களுக்கு ஒளி ஏற்றினார். அத்துடன் நாவிதன்வெளி அன்னமலையில் குழாய் நீர் விநியோகத்திட்டத்தை ஏற்படுத்தி கிராமப் புறமக்களும் சுத்தமான நீரைப் பெற்றுக் கொள்ளும் பரந்த நோக்கத்தை நிறைவு செய்து பாராட்டையும் பெற்றிட்டார்.

பாதைகளையும், வீதிகளையும் அமைப்பதிலும் திருத்துவதிலும் அக்கறை செலுத்தியுள்ளார். சம்மாந்துறையிலிருந்து சவளக்கடைவரை கிறவல் வீதி, தார் வீதி ஆக்கப்பட்டது. இதுபோலவே சென்றல் கேம்பிலிருந்து சாளம்பக்கேணி வரையும், சென்றல் கேம்பிலிருந்து வேப்படித் தோட்டம் ஊடாக கிட்டங்கி வரையும் இவர் முயற்சியால் தார் வீதிகளாக்கப்பட்டன.

இந்த வீதிகளிலெல்லாம் பேரூந்துச் சேவைகளும் ஏற்படுத்தப்பட்டன. கல்முனையிலிருந்து றாணமடுவரையும், சாளம்பக்கேணியிலிருந்து கிட்டங்கி வழியாக கல்முனை வரையும், சாளம்பக்கேணியிலிருந்து சம்மாந்துறை வழியாக கல்முனை வரையும் கல்முனையிலிருந்து அன்னமலை நாவிதன்வெளி ஊடாக மண்டூர் வரையும் ஏன்? மண்டூர் வழியாக 16ம் கிராமம் வரையும் பேரூந்துகள் பேரிரைச்சலுடன் ஓடத்தொடங்கின. இதற்கெல்லாம் கௌரவ அமைச்சர் எம்.ஏ. அப்துல் மஜீட் எம்.பி அவர்கள் ஆற்றியசேவை அளப்பெரியது.

சொறிக் கல்முனை நாவிதன்வெளி சென்றல்கேம்ப் ஆகிய இடங்களிலுள்ள தபால் நிலையங்களைத் தரமுயர்த்த வேண்டுமென எண்ணங் கொண்டு, அதற்கேற்ற பணியையும் புரிந்துள்ளார். சென்றல்கேம்ப் தபாற்கந்தோரை 1ம் தரத்துக்கு உயர்த்தி உதவினார். நாவிதன்வெளி தபாற்கந்தோருக்கு தந்தி வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

கல்விவாய்ப்பை அளிப்பதற்காக, வளர்ந்து வந்த றாணமடு தமிழ் வித்தி யாலயத்தை தரமுயர்த்த வேண்டுமென்றும், அங்கே உயர்தர வகுப்புக்களை வைக்க வேண்டுமெனவும் முதன் முதலில் குரல் கொடுத்தார். அதன்படி இன்று அப்பாடசாலை உயர்ந்து கமு/றாணமடு இந்து மகாவித்தியாலயமாக தலை நிமிர்ந்து, சம்மாந்துறை வடக்குக் கொத்தணியின் (றாணமடு) மூலாதாரப் பாடசாலையாகத் திகழ்கிறது.

"உயர்ந்து வளர்ந்து விட்ட பாடசாலைகளைவிட, கிராமப் பாடசாலையையே முன்னெடுத்துச் செல்ல நான் விரும்புகிறேன்." என்று ஒரு கூட்டத்திலே கௌரவ அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதிலிருந்து அவரது கல்விச் சிந்தனை நன்றாகப் புலப்படுகிறது. "கல்வி வாய்ப்புக்களைப் பெற்று விவசாயத்திலும், வர்த்தகத்திலும்

நவீனயுக்திகளைப் புகுத்தி குடியேற்ற வாசிகள் மற்றோரைப் போன்று கல்வியிலும், தொழிலிலும் முன்னேற வேண்டும்.'' என மேலுமொரு கூட்டத்தில் உருக்கமாக குடியேற்ற மக்களை வேண்டிக் கொண்ட உயர்ந்த பண்பு அவர் கல்விச் சிந்தனையை ஏமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

''என்னால் முடிந்த உதவிகளை கிராமங்களுக்கும் மக்களுக்கும் படிப் படியாகச் செய்து தருவேன். அடிக்கடி என்னைச் சந்தித்து ஞாபகப்படுத்துங்கள்.'' என்று பொதுமேடை ஒன்றிலே அவர் முளங்கியதை ஞாபகத்துக்குக் கொண்டு வருகின்றேன், எல்லாவற்றிக்கும் மேலாக பாராளுமன்றத்தில் ஒரு வெளிநாட்டுப் பத்திரிகை நிருபருக்கு ''பல்லை உடைத்துக் கையிலே கொடுப்பேன்'' எனக் கர்ச்சித்ததை நாம் வெகுவாக மெச்சுகிறோம்.

நெசவுக் கைத்தொழில்துறை அமைச்சர் கௌரவ எம்.ஏ. அப்துல் மஜீட் ஏம்.பி. அவர்கள் மேலும் பலகாலம் வாழ்ந்து பல வெற்றி வாய்ப்புக்களைச் சூடி தன்னால் இன்னும் நிறைவேற்ற எண்ணியுள்ள பணிகளைப் பின்தங்கிய கிராமங்களுக்கும் செய்ய இறைவன் அருள் பாலிக்க வேண்டுமென ஆசிக்கின்றோம். 32 ஆண்டு பாராளுமன்றச் சேவை நிறைவையொட்டி அன்னாரை அன்புடன் பாராட்டி வாழ்த்துக் கூறுகின்றோம்.

''மக்களுக்கரன, மக்கள்சேவையாளரைப் பாராட்டும் உயர்பண்பு இப்பதியில் உயர்ந்தோங்கிடட்டும்.''

# எனது அரசியலுக்கு வழிகாட்டி அப்துல் மஜீட்

எம்.ஐ.உதுமாலெவ்வை.
முன்னாள் பொத்துவில் முதல்வர்,
அக்கரைப்பற்று.

அரசியலுக்குப் புதிய என்னை அரவணைத்து நல்வழிகாட்டி உதவிய எனது அன்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் எம்.ஏ.அப்துல் மஜீட் அவர்கள் அரசியலில் மேலும் நிலைத்து நின்று மக்களுக்குதவ இறைவன் அருள்புரிய வேண்டுமென்பதே எனது ஆசையாகும்.

மனிதனுடைய குணவியல்புகள் அவனுடன் நெருங்கிப் பழகும் போதுதான் நன்கு புலப்படும். குறிப்பாக மிக மகிழ்ச்சியான சூழ்நிலை, சோதனையான சூழ்நிலை என்பவற்றில் அவரது இயக்கம் அவரை நன்கு இனம் காட்டும். அமைச்சர் அப்துல் மஜீட் அவர்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் மிகுந்த நிதானத்துடன் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு மக்களின் நலனை முதன்மைப் படுத்தியதை நான் பல சந்தர்ப்பங்களில் கண்டிருக்கின்றேன். குறிப்பாக 1983ம் ஆண்டிற்குப்பின் இலங்கையின் அரசியல், சமூக வரலாற்றில் பாரிய தாக்கங்கள் ஏற்பட்டன. 1983 மே மாதத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர காலச்சட்டம் கடந்த ஒன்பது வருடங்களில் - ஒரு சொற்பகாலம் தவிர தொடர்ந்து மாதாந்தம் நீட்டப்படுகின்றது. 1983ன் இனப்பிரச்சனை, 1987ன் இலங்கை இந்திய ஒப்பந்தம் இதனைத் தொடர்ந்து பொதுத்தேர்தல்கள் என்பவற்றின் நிகழ்வுகள் சாதாரண அரசியல்வாதியைத் தளர்ச்சியடையச் செய்யக் கூடியன. இத்தகைய நேரங்களில் இவர் தைரியம், நிதானம், தன்னம்பிக்கை போன்ற முழுமையான ஆளுமையைப் பிரகடனப்படுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது.

இக்காலகட்டத்தில் நான் பாராளுமன்ற உறுப்பினராகிய பின் கிழக்கிலங்கையின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவரும் சேர்ந்து கூட்டாக மாண்புமிகு அமைச்சர் அப்துல் மஜீட் அவர்களின் தலைமையில் இயங்கினோம். அவ்வேளைதான் நான் அவரது ஆளுமையின் வெளிப்பாட்டைக் கண்டேன். கிழக்கின் முஸ்லிம் சமுகம் தன்மானத்துடன் வாழவேண்டுமானால் கல்வித்துறையில் பாரிய பாய்ச்சல் நடைபோட வேண்டும் என்வும், கட்டுப்பாடான வாழ்வுக்கு வழிவகுக்க வேண்டுமெனவும் கருதினோம். அதற்காக உழைக்க முயன்றோம். முஸ்லிம் சமுகத்தின் பாதுகாப்பு என்பது வெறும் வாய்ப்பந்தலில் இல்லை, திட்டமிட்ட செயற்பாட்டில்தான் உண்டுஎன்ற கருத்தை வலியுறுத்தி எம்மை எப்போதும் வழி நடாத்திவந்தார் ஜனாப். அப்துல் மஜீட் கிழக்கிலங்கையின் பல்கலைக் கழகம் பீடரீதியில் பொருத்தமான பகுதிகளுக்குப் பன்முகப்படுத்த வேண்டுமென்ற கொள்கையை வலியுறுத்தியவரும் அமைச்சர் அப்துல் மஜீட் அவர்களே.

இச்சந்தர்ப்பத்தில் அமைச்சர் அப்துல் மஜீட் கல்விக்காற்றிய தொண்டுகளில் அப்போது க.பொ.த (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கு விஷேட வகுப்புகளை நடாத்த எடுத்த நடவடிக்கைகள் மிகவும் பாராட்டுக்குரியது. 1982ம் ஆண்டைய காலப்பகுதி க.பொ.த (உயர்தர) விஞ்ஞான வகுப்பு மாணவர்களுக்குப் போதிக்க ஆசிரியர்களே இருக்கவில்லை. அவ்வேளை நானும் அங்கம் வகித்த கல்முனை மாவட்ட அதிபர் சங்கம் மாணவர்களின் நலன்கருதி ஒழுங்குசெய்த விஷேட வகுப்புகள் கல்வி நிருவாக சட்டத்திற்கு முரணானது என கல்வி அமைச்சு எமது அதிபர் சங்கத்தைக் குற்றம் காட்டி விளக்கம் கோரியபோது எமக்காகப் போராடி, வெற்றியும் கண்டவர் ஜனாப். அப்துல் மஜீட். எமது நோக்கம் உண்மையானது, கல்வியின் மேம்பாட்டிற்கானது என்பதை உணர்ந்த அமைச்சர் எம்மைப் பாராட்டினார். பின்னர் இதனை அமைச்சர் கல்வி அமைச்சுக்கு விளக்கிய போது அமைச்சு இத் திட்டத்தினை வரவேற்று இலங்கையின் ஏனைய ஆசிரிய தட்டுப்பாடு நிலவும் இடங்களுக்கும் நடைமுறைப்படுத்தியது.

இப்பேர்ப்பட்ட பெரியாரை சம்மாந்துறை மக்கள் மட்டுமல்ல கிழக்குப் பிரதேசத்தின் அனைவரும் மதிக்கும் ஒரு மகனாக கௌரவிக்க வேண்டும். இப்பெரியார் அகில இலங்கை வாழ் முஸ்லிம் மக்களை வழி நடாத்தும் பொறுப்பை ஏற்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை. என நான் திட்டவட்டமாக நம்புகின்றேன்.

வாழ்க அமைச்சர். வளர்க அவர் புகழ். ஓங்குக அவரது உயர்வு எல்லாம் வல்ல 'அல்லாஹ்' அன்னாரை ஆசித்து அருள்புரிவானாக.

கௌரவ நெசவுக் கைத்தொழில் அமைச்சர்

# எம். ஏ. அப்துல் மஜீட் M.P.

அவர்களின் 32 ஆண்டுப் பாராளுமன்ற அரசியல் சேவையினைப் பாராட்டு முகமாக வெவ்வேறு அங்கங்களாகப் பிரிக்கப்பட்டு பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## அவைகளில் சிலகாட்சிகள்



கௌரவ அமைச்சர் எம். ஏ. அப்துல் மஜீட் எம். பி. அவர்களின் 32 ஆண்டுப் பாராளுமன்றச் சேவைப் பாராட்டு விழா நிகழ்ச்சியின் இரண்டாம் அங்கமான சிரமதான வைபவத்தின் போது மாணவர்கள் சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலையில் சிரமதானம் செய்து கொண்டிருக்கும் காட்சி.



கௌரவ அமைச்சர் எம். ஏ. அப்துல் மஜீட் எம். பி. அவர்களின் 32 ஆண்டுப் பாராளுமன்றச் சேவைப் பாராட்டு விழாவின் மூன்றாம் அங்கமான தளபாடம் வினியோகிக்கும் வைபவத்தில் சம்மாந்துறைக் கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு பல்லாயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களை அமைச்சர் பிரதிக்கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கும் காட்சி.



கௌரவ அமைச்சர் எம். ஏ. அப்துல் மஜீட் எம். பி. அவர்களின் 32 ஆண்டுப் பாராளுமன்றச் சேவைப் பாராட்டுவிழா நிகழ்ச்சியின் ஆறாம் அங்கமாக, சுய தொழில் முயற்சிக்கு யுவதிகளுக்கு தையல் மெசின் வழங்க வருகைதந்த அமைச்சரையும், அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர், மகளிர் பணியகப் பிரதிப் பணிப்பாளரையும் விழாக்குழுவினர் வரவேற்று அழைத்துச் செல்லும் காட்சி.



வேலையற்ற யுவதிகளுக்கு சுயதொழில் முயற்சிக்கு முதல் கட்டமாக வழங்கிய இருபத்தைந்து ''சிக்சேட்'' தையல் மெசின்களை அமைச்சர் கௌரவ அப்துல் மஜீட் அவர்களும், அம்பாறை மாவட்ட அரச அதிபர் திரு. ஏ. ஐ விக்ரம, இலங்கை மகளிர் பணியகப் பிரதிப் பணிப்பாளர் ஜனாப். P. நூர்டீன் ஆகியோர் பார்வையிடும் காட்சி.



கௌரவ அமைச்சர் எம். ஏ. அப்துல் மஜீட் எம். பி. அவர்களின் 32 ஆண்டுப் பாராளுமன்றச் சேவைப் பாராட்டு விழாவின் ஏழாம் அங்கமான கட்டிடத் திறப்பு விழாவில், சம்மாந்துறை மத்திய கல்லூரியில் 8 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறை மாடிக்கட்டிடத்தை திறந்துவைக்க வந்த புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ P. தயாரட்ண M. P. அவர்களை அமைச்சர் அப்துல் மஜீதும் மற்றும் பிரமுகர்களும் வரவேற்கும் காட்சி.



சம்மாந்துறை மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட மாடிக்கட்டிடத்தை கௌரவ புனர் வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ P. தயாரட்ண M. P. அவர்கள் திறந்துவைக்க நெசவுக் கைத்தொழில் அமைச்சர் கௌரவ M. A. அப்துல் மஜீட் அவர்கள் மரக் கன்று ஒன்றை நட்டுவைக்கும் காட்சி.



(1) கௌரவ அமைச்சர் அவர்கள் மர நடுகை விழாவின் போது மாதர்கள் மத்தியில்



(2) கௌரவ அமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை வழங்கும்போது.



(3) கௌரவ அமைச்சர் அவர்கள் பாடசாலை மாணவர் கட்கு மரக்கன்றுகளை வினியோகிக்கும்போது



(4) கௌரவ அமைச்சர் அவர்கள் உதைப்பந்தாட்டப் போட்டியை ரசித்துக் கொண்டிருக்கும்போது



(7) வட கொரியா தலைநகரான "பியொங்யங்"கில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற மகாநாட்டின் போது உரையாற்றுகையில் . . .

# எங்கள் தங்கத்துரை

பிறந்திட்ட போதினிலே! எம்.ஏ.யாம் - அவர்
படித்திட்ட வேளையிலே! பி.ஏ.யாம் - மக்களுக்கு
தொண்டு செய்கையிலே! எம்.பி.யாம் - மானம்
காத்திடவே கைத்தறி நெசவு மந்திரியாம் ......

சுட்டாலும் வெண்மை தரும் சங்கு - அவர்
சுடுசொல் கேட்டாலே வெற்றி நமக்கே! -
காட்டாற்று வெள்ளமாம் அவர் நெஞ்சம் - தினம்
கலங்கும் ஏழைகட்கு அப்துல் மஜீட் தஞ்சம்;

இலுக்காலே முகடமைத்த ஏழைகட்கும் - தினம்
இலங்குகின்ற மின்சார வெளிச்சமிட்டே;
கல்வீட்டுத் தின்னையிலே அமரவைத்து; எங்கள்
கண்ணீர் துடைக்கும் தங்கத்துரையாம்;

பிச்சை சம்பளம் எடுப்பவர்க்கும்
பிணக்குகள் கோடி தீர்ப்பதற்கு; நீங்கள்
நிச்சயம் மீண்டும் வேண்டுமையா - நீங்கள்
நெடுநாள் வாழ்தல் வேண்டுமையா;

குழாய் பொருத்திட வேண்டுமையா, - விரைவில்
குடி நீர் ஈந்திட வேண்டுமையா;
பளசாய் போன மண்குடங்கள் பலதை
பலமாய் நாங்கள் உடைத்திட வேண்டுமையா;

சாந்தி பிறந்திட வேண்டுமையா - எம்நாட்டில்
சமாதானம் ஓங்கிட வேண்டுமையா;
நீதி நிலைத்திட வேண்டுமையா! - இங்கு
நியாயம் மலிதல் வேண்டுமையா,

''சம்மாந்துறை ஆ.அஸீஸ்''

## முப்பத்ரெதிண்டு வருடங்கள் எப்படியப்பா எம்.பி யாய் தப்பாமல் நீ வந்தாய் ?

எம் தலைவனுக்கு
எனது இந்த சிறு கவிதை மழை
முப்பத்திரெண்டு வருடங்கள்
எப்படியப்பா எம்.பி யாய்
தப்பாமல் நீ வந்தாய்
இங்கு சிலருக்கு எப்படியாவது
எம்.பி யாய் வர வேண்டும் என்ற
நப்பாசை அதனால்
கட்சிகளும் மாறியும் அரசியலில்
பல குத்திக் கரணங்கள் போட்டும்
கண்ட பலன் ஒன்றுமில்லை என்றிருக்க
எப்படி யப்பா
தப்பாமல்
நீயோ எம்.பி யாய் வந்தாய்?

பொன் வயலிலே பொன்னைத்தான்
அறுக்க முடியும்
மண் வயலிலே மண்ணைத்தான்
அறுக்க முடியும் நீவிர்
பொன் வயலிலே விளைந்த
பொற்கதிர்
பொன்னை புடம் போடப் போட
பிரகாசிப்பது போல் உன்னைப்
புடம் போட்டதனால் இன்று
எம் மந்திரியாய் மிளிர்கின்றாய்

என்னத்தைச் செய்தார் எம்.பி என்பார்
இன்று உளர்.
அரசியலில் அது வழக்கம்.
சம்மாந்துறைத் தொகுதி தந்தாய்
தனியொரு தொழிநுட்பக் கல்லூரி தந்தாய்
கல்லூரி மாணவர்கட்கு
கலங்கரை விளக்கமென
கல்லூரிகள் பல அமைத்துத் தந்தாய்
மின்னொளிதந்து எம் பதியை
மெருகூட்டி வைத்தாய்
இருப்பிட மற்றவர்கட்கு
ஈரிரண்டாயிரம் வீடுகள்
கட்டித் தந்தாய்
அல்லலுறும் ஏழையர்க்கு
ஆதரவுப் பணம் தந்து
அரவணைத்தாய் இன்னும் எத்தனையோ

சம்மாந்துறைக்குத் தண்ணீர்தர
கண்டிப்பாய் பிரேமதாசாவிடம்
நடக்கப் போய்
கவலையை விட்டொழி
இதோ பதினேழு கோடி
கச்சிதமாய் முடித்துவிடு என்றார்
உன் ஒப்பத்தின் பெறுமதி
பதினேழு கோடி என்றால்
இதனை உணராதோர்
யார் இங்கு

சகலதையும் செய்து விட்டாய்
சரித்திரமும் படைத்து விட்டாய்-ஆம் நீயொரு
சரித்திரக் கதா நாயகன்
அரசியல் அரியணையில்
ஆண்டுகள் முப்பத்திரண்டினை
எம்.பி யாய்
எமது ஊரவரின் தம்பியாய்
அணிசெய்து அலங்கரித்தாய்
முப்பத்திரெண்டாண்டு நிறைவு விழாவினை
ஆண்டுகள்
தொண்ணூற்றிரெண்டில் கொண்டாடும் வேளையிலே
நீவிர் நீடுழி வாழ்க.
நின் இலட்சியம் தழைத்தோங்க
என வாழ்த்துவதுடன்
சம்மாந்துறைத் தாயே
உந்தன்
தலை மகன்
அப்துல் மஜீத் என்றும்
தரணியில் உயர்ந்து நிற்ப
ஏந்திடுவாய் உன் இரு கையினை
இறைவனிடம்.

—எம்.ஏ.சறூக்—
சம்மாந்துறை-01.

# எம்.ஏ.அப்துல் மஜீது அவர்களின்
## சமூக நலன் சேவைகள் - ஒரு கண்ணோட்டம்.

யூ.எல், அலியார்,
மத்திய வீதி,
சம்மாந்துறை.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பத்தாண்டுகளில் ஒரு சமூக சேவையாளன் சமூகத்தினால் கௌரவிக்கப்படுகின்றான். ஆம் சம்மாந்துறைத் தாய் ஈன்றெடுத்த தவப்புதல்வன் எம்.ஏ. அப்துல் மஜீது பீ.ஏ. தன் வாழ்நாளின் பெரும்பகுதியை சமூக உயர்வுக்காக அர்ப்பணித்தமைக்கு நன்றியாக அம்மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெறுகிறார் என்றால் அது அண்மைக்கால இலங்கையின் வரலாற்றில் இடம்பெறத்தக்க ஒரு சில நிகழ்வுகளில் இதுவுமொன்றாகும்.

நல்ல சிந்தனைகள் செயல் உருப்பெறும்போது அவை அளவிடற்கரிய நலன்களை விளைவிப்பது இயல்பு. சிந்தனை செயலுருப் பெறும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. செயற்படுத்தும் வல்லமையும் வாய்ப்பும் உள்ளவர்கள் எல்லோரும் நல்ல சிந்தனையுடையவர்களாக இருப்பதும் மிக அரிது. ஆனால் சம்மாந்துறையின் தலைமகன் ''பீ.ஏ'' என மக்களால் அன்புகூர அழைக்கப்பெறும் அப்துல் மஜீது அவர்களுக்கு இறைவன் மக்கள் சேவைக்கான வாய்ப்புக்களை வழங்கினான்.

1940 களில் தம்மை உயர் கல்வியில் ஈடுபடுத்தத் தொடங்கிய காலம் முதல் இதுவரை சுமார் அரை நூற்றாண்டு காலம் மக்கள் சேவகனாக அப்துல் மஜீது தம்மை அர்ப்பணித்தார். 1950 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து, கிழக்கிலங்கையின் முதலாவது முஸ்லிம் கலைப்பட்டதாரியாக வெளிவந்ததும் சில காலம் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியராகச் சேவையாற்றிய போதுதான் சம்மாந்துறையின் உள்ளூராட்சி அவரை வரவேற்றது. 1954 - 1960 வரை சம்மாந்துறைப் பட்டின சபையின் தலைவராக அவர் பணியாற்றினார். 1960 முதல் இன்றுவரை பாராளுமன்ற உறுப்பினராகச் சேவையாற்றி வருகின்றார்.

அவரது சேவை தனியொரு பிரதேசத்துக்கென்றில்லாது பொதுவாக இலங்கையையும் விசேடமாக கிழக்கிலங்கையையும் வியாபித்து நின்றது. 1960 லிருந்து 1977 வரை பொத்துவில் தொகுதியையும், 1977 இல் சம்மாந்துறைத் தொகுதியையும் பிரதிநிதித்துவப்படுத்திய மஜீது பின்னர் தேசிய மட்டப் பிரதிநிதியாக நியமனம் பெற்றார். இக்காலப்பகுதிக்குள் விவசாய, காணி பிரதியமைச்சராகவும், மின்சார பெருந்தெருக்கள் பிரதியமைச்சராகவும், தபால் தந்தித் தொடர்புகள் பிரதியமைச்சராகவும், மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராகவும் பணியாற்றினார். தற்போது நெசவுக் கைத்தொழில் அமைச்சராகப் பதவி வகிக்கிறார். இதனால் இவரது நற்றொண்டுகள் குறிப்பிட்ட பிரதேசத்துக்கென்று மட்டுப்படாது தேசிய ரீதியில் அமைந்து சகல இனங்களுக்கும் சேவையாற்றும் உன்னத வாய்ப்பினைப் பெற்றார்.

தமது மக்களின் தேவையை தூரதிருஷ்டியுடன் நோக்கி திட்டமிட்டுச் செயற்படும் திறனால் இவர் சகல மக்களினதும் அமோக ஆதரவைப் பெற்றவராக மதிக்கப்படுகிறார். சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில், இறக்காமம், மத்திய முகாம், நாவிதன்வெளி, அன்னமலை, மல்வத்தை, லகுகலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களால் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு நன்றியாக இக்கிராமங்களின் முன்னேற்றத்தில் எதுவித பாரபட்சமுமில்லாது அப்துல் மஜீது தமது சேவையை ஆற்றியுள்ளார். முற்றிலும் விவசாயத்தையே சீவனோபாய மாகக் கொண்டிருந்த இம்மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதையே தன் வாழ்நாழின் இலட்சியமாகக் கொண்டு அவர் ஆற்றிய சேவைகள் பலதரப்பட்டவையாகும். 1960 - 77 வரை தனியொரு கட்சியைச் சாராது சுயேச்சையாக நின்று ஆட்சியாளர்களிடமிருந்து தமது தொகுதி மக்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொடுப்பதில் தனக்கேயுரிய உத்திகளைக் கையாண்டார். இதனால் எக்கட்சி ஆட்சிக்கு வருகின்றபோதிலும் அப்துல் மஜீதின் கோரிக்கைகளைப் புறக்கணிக்காத அளவு அவர் தொடர்புகளை கௌரவமான முறையில் வைத்துக் கொண்டார். 17 வருடகாலம் குறிப்பிட்ட ஒரு கட்சியைச் சாராது அவர் ஆற்றிய நற்பணிகள் அவரது தன்னலமற்ற சமூகப்பற்றை எடுத்துக்காட்டுவனவாகும்.

1977 இன்பின்னர் ஐ.தே. கட்சியைச் சார்ந்தபின் பெற்றுக் கொண்ட பதவிகளின் மூலம், மேலும் தமது மக்களுக்கு அதிக அளவு சேவையாற்றுவதற்கான சந்தர்ப்பங்களை அவருக்கு நல்கியது. இவ்வாறு அவர் ஆற்றியுள்ள சேவைகளைப் பட்டியல்படுத்தும்போது அவர் தொட்டு வையாத துறைகள் எதுவுமே இல்லை எனத்தக்க அளவு அது விரிவடைந்து காணப்படுகின்றது. கல்வி, சுகாதாரம், மின் விநியோகம், வீடமைப்பு, காணி, குடியேற்றம், தொழில்வாய்ப்பு, நெசவாலைகள், நீர்ப்பாசனம், பாதையமைப்பு, அலுவலகக் கட்டிடங்கள், சமூகசேவை, நிவாரணம், பொதுப் பாதுகாப்பு என்றின்னோரன்ன துறைகளில் எல்லாம் அவரது சேவை வியாபித்து நிற்கின்றது.

மேலும் அவரது சேவை இனம், மதம், மொழி என்ற எல்லைகளுக் கப்பாலும் வியாபித்து நிற்கின்றது. தமிழ்-முஸ்லிம்-சிங்கள ஒற்றுமையை ஆரம்பத் திலிருந்தே கட்டிவளர்த்த பெருமைக்குரியவரும் மஜீது அவர்களே. வீரமுனைப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தமையால் தமிழ் மக்களால் மிகவும் நேசிக்கப்பட்டவர் மஜீது. அதேவேளை லகுகலை சிங்கள மக்களின் மனத்திலும் உறைந்தவர் மஜீது. இனவேறுபாடு அற்ற ஒரு சமுதாயத்தை அவர் உருவாக்கி வைத்திருந்தார். இவரது கொள்கைகளையும் வழிமுறைகளையும் அவரது பாராளுமன்ற உரைகள் மிகவும் தெளிவுபடுத்துவனவாக அமைகின்றன.

இந்தப் பின்னணியில் அவர் தமது நாட்டுக்கும் சமூகத்துக்கும் பிரதேச மக்களுக்கும் ஆற்றிய சமூகநலன் சார்ந்த சேவைகளை இங்கு கோடிட்டுக்காட்டுவது இன்றைய தலைமுறையினருக்கு நல்ல வழிகாட்டல்களாக அமையும் எனக் கருதுகின்றோம்,

1. கல்விசார் சேவைகள்
2. சுகாதார சேவைகள்
3. மின் விநியோகம்
4. வீடமைப்பு
5. பாதையும் போக்குவரத்தும்
6. தபால் தந்திச் சேவைகள்
7. வாழ்க்கை வசதிகளும் பொதுவசதிகளும்

**கல்விசார் சேவைகள்:-**

பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் நாட்டின் கல்விநிலை மரபு நிலையிலிருந்து மேற்கத்தைய முறைக்கு மாறியிருந்த போதிலும் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்துதான் இது மக்கள் மயப்படலாயிற்று. இலவசக் கல்வித்திட்டத்தின் பேறாக ஒன்றில் கல்வி கிராமங்களுக்கும் சென்று கொண்டிருந்தது. அல்லது கிராமப்புற மக்கள் கல்வியின் வாசனையை வேண்டிநின்றனர். 1956 இன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார சிந்தனை மாற்றங்கள் காரணமாக அரசியல் தலைவர்கள், மக்கள் பக்கம் தம் பார்வையை வைத்திருக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். இந்தப் பின்னணியிலிருந்துதான் கௌரவ எம்.ஏ. அப்துல் மஜீது அவர்களின் கல்விச் சிந்தனைகளையும், செயல் களையும் நோக்கவேண்டியுள்ளது.

1960 களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிரு பாடசாலைகளைக் கொண்டிருந்த இப்பிரதேசங்களில் புதிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த வகையில் இப்பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்கு மஜீது அவர்கள் கணிசமான பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். இக்காலப் பகுதியில் பாடசாலைகளை நிறுவ வேண்டிய ஒரு தேவையும் உணரப்பட்டிருந்தது. குறிப்பாக கல்லோயா அபிவிருத்தித் திட்டத்துடன் (G.O.D.B) இணைந்ததாக குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் இப்பிரதேச மக்களின் நலன் கருதி கல்வி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. சம்மாந்துறை புளக் 'ஜே' குடியேற்றங்கள், வளத்தாப்பிட்டி, மஜீட்புரம், மல்வத்தை புதுநகர், ஏத்தாளக்குளம், மத்தியமுகாம், 4ம் 5ம் 6ம் கிராமங்கள் வீரச்சோலை, இறக்காமம், வரிப்பத்தாஞ் சேனை, அமீர் அலி புரம், பொத்துவில், தம்பிலுவில், அக்கரைப்பற்று ஆகிய ஊர்களில் எல்லாம் மஜீத் அவர்களால் பாடசாலைகள் அமைத்துத் தரப்பட்டன.

கல்விச் சேவையை இறைசேவையாக கருதும் மனப்பக்குவமும் மாண்பும் அவர் பயின்ற சிவானந்தா வித்தியாலய ஆசிரமத்தில் அவர் கற்றுக் கொண்ட பாடமாகும். அந்த அடித்தளம் அவரது கல்விச் சேவைகளுக்குப் பெரும் உந்து சக்தியாக அமைந்தது. அவ்வப்போதிருந்த ஆட்சியாளர்களையும் அமைச்சர்களையும் நற்பண்புகளுடன் அணுகி முன்வைத்த கோரிக்கைகள் எல்லாம் அவர்களுக்கு வெற்றிமேல் வெற்றியாக அமைந்து சமூக சேவையின்பால் அவரை வழி நடாத்திச் சென்றன.

1961ம் ஆண்டில் சம்மாந்துறை கனிட்ட வித்தியாலயத்தை சம்மாந்துறை முஸ்லிம் ஆண்கள் பாடசாலையுடன் இணைத்து மகாவித்தியாலயமாக உருவாக்கியமை இப்பிரதேச கல்வி வரலாற்றில் முக்கிய சம்பவமாகும். கட்டிடம், தளபாடம், ஆய்வுகூட வசதிகள், நீர் வினியோகம் என்றெல்லாம் தேவையான வசதிகளை அவ்வப்போது இப்பாடசாலைக்கு வழங்கி வந்ததன்பேறாக இன்று இப்பகுதியில் நூற்றுக்கணக்கான பட்டதாரிகளும், பொறியியலாளர்களும், வைத்தியர்களும், ஆசிரியர் களும், கணக்காளர்களும், நிர்வாக உத்தியோகத்தர்களும், தொழில் நுட்பவியலா ளர்களும் உற்பத்தியாவதற்கு முடிந்தது. இது அமைச்சர் அப்துல் மஜீது அவர்களின் தன்னலமற்ற சேவையின் பேறுகள்.

**புதிய பாடசாலைகள்:-**

புதிய பாடசாலைகள் ஆரம்பிக்கும் பணியில் அவர் மேற்கொண்ட முதல் முயற்சி சம்மாந்துறை ஸ்ரீ கோரக்கர் வித்தியாலயமாகும். 1960 இல் இது ஆரம்பிக் கப்பட்டது. 1966 இல் தாறுஸ்ஸலாம் வித்தியாலயம், அல்முனீர் வித்தியாலயம், மஜீட்புரம் முஸ்லிம் வித்தியாலயம், ஹயாத்து நபி குடி முஸ்லிம் வித்தியாலயம் என்பன ஆரம்பிக்கப்பட்டன. இத்தொடரில் 1970 களில் இரண்டாவது கட்டப் பணிகள் ஆரம்பமாகின. சம்மாந்துறை அல் அர்ஷத் வித்தியாலயம், கல்லரிச்சல் வித்தியாலயம் என்பனவும் 1980 களில் அல் அமீர் வித்தியாலயம், ஏத்தாளக்குளம் முஸ்லிம் வித்தியாலயம், மத்தியமுகாம் முஸ்லிம் வித்தியாலயம், சென்னெல்புரம் முஸ்லிம் வித்தியாலயம், புளக் 'ஜே' கிழக்கு முஸ்லிம் வித்தியாலயம், ஹிஜ்றாபுர முஸ்லிம் வித்தியாலயம், கைகாட்டியடி முஸ்லிம் வித்தியாலயம், கருவாட்டுக்கல் முஸ்லிம் வித்தியாலயம், கைர்ப்பள்ளியடி முஸ்லிம் வித்தியாலயம், உடையார் குளம் முஸ்லிம் வித்தியாலயம், என்பன திறந்து வைக்கப்பட்டன.

இதேபோன்று சம்மாந்துறைப் பகுதியில் மட்டுமன்றி ஏனைய பகுதி களிலும் பல பாடசாலைகளை ஆரம்பிக்கவும், பாடசாலைகளுக்கு கட்டிடங்கள் கிடைக்கவும், தளபாடங்கள், உபகரணங்கள் கிடைக்கவும் முனைப்புடன் செயற் பட்டமை அவரது பரந்த மனப்பாங்கை காட்டும் சான்றுகளாகும். இவை தவிர பாடசாலைகைளைத்தரம் உயர்த்துதல், பாடசாலைகளுக்கு அத்தியாவசிய வசதிகளை ஆக்கிக் கொடுத்தல் என்பவற்றிலும் தீர்க்கதரிசனமாகவும் பரந்த உள்ளத்துடனும் சிந்தித்துச் செயல்பட்டமை அவருக்கேயமைந்த தனித்துவப் பண்புகளாகும். தனது தொகுதியின் கல்வித்தேவையின் கணிசமான பகுதியை தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து நிறைவு செய்தமை கல்வியில் அவர்கொண்ட அக்கறையைக் காட்டும்.

| ஆண்டு | | ஒதுக்கீடு | ஆண்டு | | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|
| 1977 | ரூபா | 3,80,620 | 1982 | ரூபா | 5,51,000 |
| 1978 | ரூபா | 4,20,000 | 1983 | ரூபா | 12,96,000 |
| 1979 | ரூபா | 2,86,000 | 1984 | ரூபா | 2,40,000 |
| 1980 | ரூபா | 2,00,654 | 1985 | ரூபா | 14,09,800 |
| 1981 | ரூபா | 6,35,186 | 1986 | ரூபா | 4,25,000 |

**மகளிர் மகாவித்தியாலயம்:-**

முஸ்லிம் பெண் பிள்ளைகள் சமய, கலாசார ஒழுங்கமைப்புக்களுக்கு அமைவான ஒரு சூழலில் கல்வியைப் பெற வேண்டும் என்ற சிந்தனை இந்த நாட்டைப் பொறுத்தவரை இன்று நேற்றுத் தோன்றியதல்ல. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிஞர் சித்திலெவ்வை போன்ற பெருமக்கள் இதுபற்றிச் சிந்தித்துச் செயலாற்றியிருக்கிறார்கள். தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் தலைவர்கள் இச் சிந்தனைக்கு மறுமலர்ச்சி கொடுத்திருக்கிறார்கள். இந்த வரிசையில் கௌரவ அப்துல் மஜீது எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை முன்னணி வகித்திருக்கிறார்கள். பெண் பிள்ளைகளுக்கென பெண் பாடசாலைகள் முஸ்லிம் கிராமங்களில் இயங்கி வந்த போதிலும் அவை ஆரம்பப் பாடசாலைகளாகவே இருந்தன. அதேவேளை இடை நிலைக் கல்வியையும் உயர்நிலைக் கல்வியையும் வழங்கிய மகாவித்தியாலயங்கள்

கலவன் பாடசாலைகளாக இருந்தன இது இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு முரண் பட்டவை என உணர்ந்த அப்துல் மஜீது அவர்கள், இந்த நிலையில் மாற்றம் காண விழைந்தார் 1965 இல் தன் சிந்தனைகளுக்கு உருக் கொடுத்தார். 1938ம் ஆண்டிலிருந்து இயங்கி வந்த சம்மாந்துறை மேற்கு அரசினர் முஸ்லிம் பெண் பாடசாலை 17.5.1965 முதல் சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலயமாக மாறியது. (ஏகேஏ/199/139-12-5-65) ஒரு பட்டதாரி ஆசிரியை இங்கு அதிபராக நியமிக்கப்பட்டார் உயர் வகுப்புக்களுக்குத் தகுதியான ஆசிரியர்கள் இங்கு நியமிக்கப்பட்டனர். முஸ்லிம் மகாவித்தியாலயத்திலிருந்து உயர் வகுப்புப் பெண் பிள்ளைகள் இங்கு இடமாற்றப்பட்டனர். மகளிர் மகாவித்தியாலயமாக இது சில வருடகாலம் இயங்கியது. இந்த தூய சிந்தனை அப்போதிருந்த சமுதாயத்துக்கு செயற்கையாக அமைந்ததில் வியப்பில்லை. பெண் கல்வியின் மகத்துவம் புரியாத ஒரு சமுதாயம் இவ்வாக்கத்திற்கு ஊக்கம் தராமை துர்ப்பாக்கியமே. இச்சிந்தனை யைக் கிரகிக்க முடியாத சமுதாயத்தின் அசமந்தப் போக்கின் காரணமாக இன்று அச்சம்பவம் மறக்கடிக்கப்பட்டுள்ளது. ஆயின் முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலய சிந்தனையை சமுதாயத்தில் விதைப்பதற்கு முன்னோடியாக இருந்தவர் கௌரவ அப்துல் மஜீது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

### தொழில் நுட்பக்கல்வி:-

கிழக்கிலங்கையில் குறிப்பாக முஸ்லிம் பிரதேசங்களில் தொழில்நுட்பக் கல்வியின் மகத்துவத்தை உணரவைத்த சம்பவம் 25.4.74 இல் சம்மாந்துறை கனிட்ட தொழில் நுட்ப நிறுவனம் நிறுவப்பட்டமையாகும். தான் ஆளுங்கட்சியைச் சாராத பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோதிலும் அப்போது கௌரவ அமைச்சராக இருந்த கலாநிதி பதியுதீன் மஹ்மூது அவர்களுடன் கொண்டிருந்த சமூகநல உறவுகள் காரணமாக மஜீது அவர்கள், கிழக்கிலங்கையில் முதலாவது தமிழ் மொழிமூல - தொழில் நுட்பக் கல்லூரியை சம்மாந்துறைக்குப் பெற்றுத்தந்தார். மேலும் இக்கல்லூரியை முதலாம் தர தொழில்நுட்பக் கல்லூரியாகவும் தரமுயர்த்தித் தந்துள்ளார். இதுவரை இக்கல்லூரி வழங்கிய பயிற்சி நெறிகள் மூலம் இப்பிரதேச முஸ்லிம்களும் மற்றும் சமூகங்களும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள இந் நிறுவனம் உதவி வந்துள்ளது.

### கல்விக் கோட்டம்:

சம்மாந்துறைப் பிரதேசப் பாடசாலைகள் கல்முனைக் கோட்டக் கல்வி அலுவலகத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்தபோது ஏற்பட்ட பலவித அசௌகரியங்களையும் சம்மாந்துறைப் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியையும் கருத்திற்கொண்டு இப்பிரதேச கல்விமான்களுடன் பல்வேறு சமூகநல தாபனங்களும் சம்மாந்துறைக்குத் தனியான தொரு கோட்டம் அமைதல் வேண்டும் எனக் கோரி வந்தன. இக்கோரிக்கைகளைச் செவிமடுத்த கௌரவ அப்துல் மஜீது அவர்கள் இதுபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் களுடனும் அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு மக்கள் பிரேரணையை முன்னெடுத்துச் சென்றார். அவரது நியாயமானதும், அமைதியானதுமான அணுகுமுறை சம்மாந்துறைக்கு ஒரு கோட்டத்தைப் பெற்றுத் தந்ததில் வியப்பிருக்கவில்லை. ஆரவாரமில்லாமல் இத்தகைய பெருங்கைங்கரியத்தை அவர்செய்து முடித்தமை சம்மாந்துறைக் கல்வி வரலாற்றிலும் கல்முனைக் கல்வி மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் குறிப்பிடத்தக்க முக்கியசம்பவமாகும். 20-08-90 இல் இயங்கத்

தொடங்கிய இக்கோட்ட அலுவலகம் 23-09-90 இல் சம்பிரதாய பூர்வமாக அன்றைய கல்வியமைச்சர் திரு. லலித் அதுலத் முதலியால் திறந்து வைக்கப்பட்டது. தற்போது ஹிஜ்றா வீதியில் பிரமாண்டமானதொரு புதுக்கட்டிடத்தைக் கொண்டு இது இயங்கு கின்றது. இக்கட்டிடத்தை அமைக்க நிலம் பெற்றுத்தந்ததில் கௌரவ அமைச்சர் மஜீது அவர்களுக்கே முழுப் பெருமையும் எனலாம்.

**சுகாதார நலன் பணிகள்:-**

சம்மாந்துறை ஆரம்ப காலத்திலிருந்தே சனத்தொகை மிக்க பரந்து விரிந்ததொரு பிரதேசமாகும். எனினும் அக்காலை சம்மாந்துறைக்கென ஒரு சிறு கிராம வைத்தியசாலை மட்டுமே இயங்கியது. ஒரு புறம் வளத்தாப்பிட்டி முதல் மறுபுறம் நெயினாகாடு வரை வியாபித்திருந்த ஊரின் தேவைக்குப் போதாமலிருந்த இச் சிறு வைத்தியசாலையை சகல வசதிகளும் பொருந்திய ஆஸ்பத்திரியாக மாற்று வதற்கு அப்துல் மஜீது அவர்கள் இலட்சியத்துடன் செயலாற்றினார்கள். கல்விச் சிந்தனையும், சுகநலன் பேணலும் அவரைப் பொறுத்தவரையில் இரு கண்களைப் போன்று கருதப்பட்டது. சுற்றாடலைப் பேணாமை, தெருக்களில் குப்பை கூளங்களைப் போடுதல் போன்ற அநாகரிகச் செயல்களையிட்டு அவர் கண்டித்துக் கூறாத சந்தர்ப்பமே இல்லை எனலாம். எனவே மக்களின் சுகநலன் பேணும் விடயத்தில் அதிக அக்கறையுடன் செயல்பட்டார்கள். சட்டிட வசதிகள் இல்லாது சிறிய வாட்டுடன் இருந்த கிராம வைத்தியசாலையை 1985 இல் மாவட்ட வைத்தியசாலையாக 'தரமுயர்த்தியதோடு தேவையான பல வசதிகளையும் ஏற்படுத்தித் தந்தார். பிரசவ விடுதி, ஆண் பெண் களுக்கென தனித்தனி வாட் வசதிகள், வெளிநோயாளர் கட்டிடம், பல் வைத்தியப் பிரிவு, சிறுவர்க்கான சிகிச்சை விடுதி, வைத்தியர் தாதிமார் விடுதிகள், நீர் வினியோகத் திட்டம், அம்புலன்ஸ் வசதி பிரேதஅறை சுற்றுமதில் என்பனவற்றை ஊரின் எதிர்காலத் தேவைக்கேற்ப அமைத்துத் தந்தவர் அப்துல் மஜீது ஆவார். ஒரேயொரு வைத்தியரைக் கொண்டு இயங்கிய வைத்தியசாலை இன்று, மாவட்ட வைத்திய அதிகாரி, உதவி வைத்திய அதிகாரிகள், ஆண் பெண் தாதிமார்கள், உதவியாளர்கள், சிற்றூழியர்கள் எனப் பெருந்தொகையான ஊழியர்களைக் கொண்டு விளங்குகின்றது. மேலும் சம்மாந்துறை அயல் கிராமங்களிலும் குறிப்பாக மல்வத்தை, சென்னெல் கிராமம் ஆகிய பகுதிகளிலும் நடமாடும் வைத்திய சேவையையும் ஏற்படுத்தித் தந்தார். தனது தொகுதிக்குட்பட்ட சொறிக்கல்முனை, மத்திய முகாம், அன்னமலை, பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, இறக்காமம் ஆகிய கிராமங்களில் உள்ள வைத்தியசாலைகளையும் அபிவிருத்தி செய்வதில் அக்கறையுடன் செயல்பட்டார்.

**வீடமைப்பு:-**

மேன்மை தாங்கிய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா முன்வைத்த ''அனைவருக்கும் உறைவிடம்'' என்ற தாட்டாந்தம் இன்று உலகம் முழுவதும் ஏற்று நடைமுறைப்படுத்தப்படுகிறது. இலங்கை அரசு வீடமைப்புத் திட்டங்களுக்கு வழங்கிய ஆக்கமும் ஊக்கமும் இப்பிரதேசத்தில் வெற்றிகரமாகச் செயற்பட முன்னின்றுழைத்தவர் அமைச்சர் அப்துல் மஜீது ஆவார். 1979 இல் ஒரு லட்சம் வீடமைப்புத் திட்டங்களை சம்மாந்துறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டபோது முதலில் சுயஉதவி வீடமைப்புத் திட்டங்களே இவற்றில் அடங்கின. தொகுதிவாரியான வீடமைப்புத் திட்டங்களின் கீழ் 65 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. சுயஉதவி வீடமைப்புத் திட்டங்களின் கீழ் 42 திட்டங்கள் தொடங்கப்பட்டன. இவற்றில் மொத்தமாக 1387 வீடுகள் கட்டப்பட்டன. இவை சம்மாந்துறையில் மட்டுமன்றி

நாவிதன்வெளி, அன்னமலை, இறக்காமம், சொறிக்கல்முனை, வேப்படித்தோட்டம், மல்வத்தை, 4ம் கிராமம், நெய்னாகாடு, உடங்கா, ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டன.

மாதிரிக் கிராமத்திட்டத்தின் கீழ் 8 கிராமங்கள் அமைக்கப்பட்டு மொத்தமாக 644 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. பத்துலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 1984-1989 வரை மொத்தமாக 767 வீடுகள் கட்டப்பட்டன. இது கடன்திட்டத்தின் கீழ் அமைந்த வீடமைப்புத்திட்டமாகும். 1990 லிருந்து நடைமுறைப்படுத்தப்படும். பதினைந்து லட்சம் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் 154 வீடுகள் இதுவரை கட்டப்பட்டுள்ளன.

வீடமைப்புத்திட்டங்களைப் பொறுத்தவரை, வேறெந்த தனியொரு மாவட்டத்திலும் இல்லாத அளவு சம்மாந்துறையில் வீடமைப்புத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. இதற்குக் காரணம், இப்பிரதேசத்தில் கிடந்த தரிசு நிலங்களாகும். மொத்தமாக 3106 வீடுகள் இத்திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்டன.

**மின் வினியோகம்:-**

அம்பாரை மாவட்டத்தில் மின்சார விநியோகத்தைப் பெற்ற ஆரம்ப ஊர்களில் சம்மாந்துறையும் ஒன்றாகும். 1956 இல் சம்மாந்துறை மின்னொளியைப் பெற்றது. குறுகிய எல்லைக்குள் இருந்த மின்சார வசதிகள் பின்னர் விஸ்தரிக்கப் பட்டது. மஜீது அவர்கள் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியின் பெரும்பகுதியை மக்களுக்கு ஒளியூட்டும் கைங்கரியத்துக்குச் செலவிட்டார். கிராம மின்வினியோகத்திட்டத்தின் கீழ் 5ம் கிராமம், 12ம் கிராமம், சம்புமடு, கருவாட்டுக்கல், மஜீதுபுரம், மல்வத்தை, 4ம் 6ம் கிராமங்கள், புளக்ஜே, கிழக்கு, மேற்குப்பகுதிகள், விளினையடி, சென்னெல் கிராமம், சவளக்கடை, அன்னமலை, வரிப்பத்தாஞ் சேனை, இறக்காமம், ஆகிய ஊர்கள் மின்சார வசதிகளைப் பெற்றன. இதைவிட ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் 11ம் கிராமம் 13ம் கிராமம் 15ம் கிராமம் வீரச்சோலை, சொறிக் கல்முனை, உடங்கா, ஆகிய பகுதிகளுக்கும் மின் வினியோகம் விஸ்தரிக்கப்பட்டது.

மக்களுக்கு அறியாமை என்னும் இருளை அகற்ற எவ்விதம் கல்விக் கூடங்கள் நிறுவுவதில் ஆர்வங்காட்டினாரோ அதைவிட சற்று அதிகமாக பாதைகளுக்கு ஒளியூட்டுவதில் மஜீது அவர்கள் கரிசனை காட்டினார்கள். மக்கள் உள்ளத்திலிருந்து அச்சம் என்னும் இருளை அகற்ற மூலைமுடுக்குகளிலும், சந்து பொந்துகளிலும் மின்சார ஒளியை ஏற்றி பயங்கரவாதத்தால் நலிவுற்ற மக்கள் வாழ்வுக்கு புதுத் தெம்பூட்டினார்கள். தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியில் எஞ்சுகின்ற பணத்தைக்கூட தெருவுக்கு வெளிச்சம் வழங்கும் கைங்கரியத்துக்கே செலவிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் மக்கள் தடையற்ற மின்சாரத்தைப் பெற வேண்டும் என்பதற்காக பல மின்மாற்றி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

**பாதையமைப்பு:-**

பாதையில் கிடக்கும் கல், முட்களை அகற்றுவதும் பெரும் தர்மம் என்பதை உணர்ந்த அப்துல் மஜீது அவர்கள் மக்களின் போக்குவரத்து வசதிக்காக பாதை

யமைப்புக்குப் பெரும் பணத்தைச் செலவிட்டார். 1978 பெரும் புயலினாலும் அடுத் தடுத்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும் இப் பகுதிப் பாதைகள் பெரும் சீர் கேடுகளை அடைந்தன, இப் பாதைகளைத் திருத்தியமைப்பதில் பெரு முயற்சியை எடுத்ததன் பேறாக சம்மாந்துறைப் பிரதேசத்தில் 1986 இல் மட்டும் நெடுஞ்சாலை அமைச்சினாலும், மஜீது அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியினாலும் பெருந்தொகைப் பணம் அதாவது 21,89,600 ரூபா செலவிடப் பட்டுள்ளது. தனியே அப்துல் மஜீது அவர்களின் ப.மு.வ.செ. நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட செலவு பின்வருமாறு;

| ஆண்டு | | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1978 | ரூபா | 31,750 |
| 1979 | ரூபா | 2,15,000 |
| 1980 | ரூபா | 5,09,500 |
| 1981 | ரூபா | 85,400 |
| 1982 | ரூபா | 2,45,500 |
| 1983 | ரூபா | 7,62,000 |
| 1985 | ரூபா | 3,44,000 |

பாதையமைப்பு, திருத்தம் என்பனவற்றுடன் இணைந்து பல பாலங்களும் அமைக்கப் பட்டன. அருகம்பே பாலம் மேற்கு ஜேர்மனியின் உதவியுடன் நிர்மாணிக்கப் பட்டது. பாணம, ஊரணி பாலங்களும் மஜீட் அவர்களின் முயற்சியால் நிர்மாணிக்கப்பட்டவையாகும். பாதையமைப்புடன் பஸ் போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. சம்மாந்துறையுடன் மத்திய முகாம் மண்டூர், அன்ன மலை ஆகிய கிராமங்களும் பஸ் போக்குவரத்தினால் நெருங்கிய தொடர்புகளைப் பெற்றன. சம்மாந்துறையில் பஸ் தரிப்பிடம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

**தபாற் தந்திச் சேவை:-**

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் தபால் தந்திச் சேவையில் கணிசமான பங்களிப்பைச் செய்யமுடியாதிருந்த போதிலும் தபாற்தந்தித் தொடர்புகள் பிரதியமைச்சராக இருந்த காலத்தில் பிரதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் பல சேவைகளை அமைச்சர் மஜீது அவர்களால் ஆற்ற முடிந்தது. தேவையான இடங்களில் உபதபாற் கந்தோர்களை அமைத்துதவினார்கள் நாவிதன் வெளி, சவளக்கடை, சென்னெல்புரம், உடங்கா, மல்வத்தை, வரிப்பத்தாஞ்சேனை பள்ளிக்குடியிருப்பு, அக்கரைப்பற்று அரசடி, 10ம் கிராமம், ஆலம் குளம், சம்மாந்துறை பஸார் ஆகிய உபதபாற் கந்தோர்களும், சம்மாந்துறை, இறக்காமம், மத்தியமுகாம் தபாற்கந்தோர்களும் அமைச்சர் அப்துல் மஜீது அவர்களின் முயற்சியால் அமைத்துத் தரப்பட்டவையாகும்.

**நீர் விநியோகத்திட்டம்:-**

சம்மாந்துறையில் நீர் விநியோகத்திட்டம் என்பது பல கால கட்டங்களைக் கடந்துள்ள பாரியதிட்டமாகும். சம்மாந்துறைப் பிரதேசம் என்றால் நீர் பற்றாக்குறை யான ஒரு வரண்ட பிரதேசம் என்பதே பொதுவாக அயற்கிராமங்களிலுள்ள மக்கள் உள்ளத்தில் பதிந்துவிட்ட செய்தியாகும். கோடை பிறந்துவிட்டால் தாய்மார்

தலையில் ஒன்றும், பக்கவாட்டில் மற்றொன்றுமாக பெரும் மட்குடங்களைச் சுமந்து சாரிசாரியாகச் செல்லும் காட்சி உள்ளூரவர்களை மட்டுமன்றி, வெளிநாட்டிலிருந்து சுற்றுலா வரும் மக்கள் மனதையும் கொள்ளை கொள்ளும் காட்சியா இருப்பது சம்மாந்துறையின் தனித்துவத்தை எடுத்துக்காட்டும்.

இந்த நிலையிருந்து மீட்சிபெற நீர்ப்பிரச்சினையை தீர்த்துவைக்க அமைச்சர் மஜீது அவர்கள் பிரயத்தனம் மேற்கொண்டார்கள். குழாய் நீர் மூலம் மக்களுக்கு நீர் வழங்க எடுத்த முயற்சி 1968 இல் கால்கோளாக உருவானது. அன்று உள்ளூர் ஆட்சி அமைச்சராக இருந்த திரு.ஆர். பிரேமதாசவின் உள்ளத்தை ஈர்த்த இந்த கைங்கரியத்துக்காக ஓர் அடிக்கல் சம்மாந்துறை ஹிஜ்றா சந்தியில் நடப்பட்டது. இதுதான் தற்போது சம்மாந்துறைக்கே தனிச் சிறப்பாக அமைந்துள்ள நீர்த்தொட்டிக் கோபுரமாக தலை நிமிர்ந்து காட்சிதந்து கொண்டிருக்கிறது. 1,50,000 கலன்நீரைத் தாங்கி நிற்கக்கூடிய இக்கோபுர வேலைகள் 1982 இல் பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து ஊர்முழுவதும் நீர்விநியோகக் குழாய்கள் பொருத்தப்பட்டன. ஆனால் ஆட்சி மாற்றங்களால் ஏற்பட்ட தாமதங்களும் நீர்ச்சுத்திகரிப்பு நிலையத்தையும் நீரையும் தேர்ந்தெடுப்பதில்-ஆய்வு செய்வதில் ஏற்பட்ட தாமதங்களும் இத்திட்டத்தின் பலனை சம்மாந்துறை மக்கள் அனுபவிக்கத் தடைகளாக அமைந்தன. இன்று கனவு நனவாகும் காலம் அண்மியிருப்பதை மக்கள் அறிந்து பெருமிதங் கொள்கின்றனர். தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைவிட மக்கள் நலனே பிரதானம் என்பதை தியாக உணர்வுடன் வெளிப்படுத்திய அவரது திண்மைக்கு அரசு செவிமடுத்துள்ளது. இதன்பேறு வேலைத்திட்டத்தைப் பூர்த்தியாக்குவதற்காக 13 கோடி ரூபா நிதி உலக வங்கியின் உதவியுடன் ஒதுக்கித்தரப்பட்டுள்ளது.

இக்குழாய் நீர் விநியோகத் திட்டத்தைக் காட்டி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையையிட்டு அமைச்சர் மஜீது அவர்கள் வாளாவிருக்கவில்லை. ஏற்கனவே தூர்ந்துபோன பொதுக்கிணறுகளைத் திருத்தியும், புதிதாக தேவையான இடங்களில் ஆழக்கிணறுகளை அமைத்தும் மேலும் சம்மாந்துறைக்கென்றே பவுசர் வாகனங்களை ஏற்பாடும் செய்தும் மக்கள் குடிநீர்ப் பிரச்சினையை அணுகினார்.

**வாழ்க்கை வசதிகளும் உதவிகளும்:-**

சம்மாந்துறைப் பிரதேச மக்களுள் 3/4 பங்கினர் கூலிவிவசாயிகளாவர். தத்தம் சீவனோபாயத்துக்காக வயலில் கூலிவேலை செய்த போதிலும் இவை பருவகால தொழில்களாகவே அமைந்தன. எனவே தம் வாழ்க்கையை போக்குவதற்காக ஓரளவு நிரந்தர உதவியை அரசிடமிருந்து எதிர்பார்ப்பவர்களாகவே இருக்கின்றனர். எனவே அரசிடமிருந்து பொதுசன உதவிப் பணத்தையும், உணவு முத்திரையையும் போதிய அளவில் பெற்றுக் கொடுப்பதற்கும் காலத்துக்குக் காலம் கஷ்ட நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் மஜீது அவர்கள் பின்னிற்கவில்லை. உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மக்களின் கஷ்டத்தைப் போக்க அயராது உழைத்தார்கள். இன்று சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 3456 ரூபா மாதாந்தம் மொத்தமாக 4,55,900 பேர் பொதுசன உதவிப் பணத்தைப் பெற்றுவருகிறார்கள். மேலும் 19,14,139 ரூபா பெறுமதியான 52,682 உணவு முத்திரைகளையும் பெற்று வருகிறார்கள். இவற்றைத் தவிர காணியற்ற மக்களுக்கு சம்மாந்துறையைச் சூழவுள்ள தரிசு நிலங்களிலிருந்து சிறு துண்டுக் காணிகளையும் பங்கிட்டு வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

முடிவுரை:-

கௌரவ எம்.ஏ. அப்துல் மஜீது அவர்கள் 32 ஆண்டுகளுக்கும் மேலாக பாராளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் இருந்து கொண்டு ஆற்றிய சேவைகள் இலங்கைச் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கவை. அவரது நீண்ட அரசியல் - சமூக நலன் சார்ந்த சேவைகளும் பொது வாழ்க்கையும் தேசிய ரீதியில் நோக்கப்படத்தக்க முக்கியத்துவமுடையது. இவர் நடுநிலை நின்று அரசியல் போக்கை நோக்கியவர். நிதானமாகப் பார்த்துப் பணியாற்றியவர். சமூகத்துக்காக நல்லன செய்ய ஆட்சியி லுள்ளோரை அணுகியவர். இதனால் கட்சிக்கோட்டுக்குள் தம்மைக் கட்டுப்படுத்த முடியாதிருந்தவர். தேசிப அரசியல் நீரோட்டத்தை நிதர்சனமாக அனுபவித்து தூர திருஷ்டியான முடிவுக்குள் தம்மை ஸ்திரப்படுத்தியவர். பழுத்த அரசியல் அனுபவம் தேசிய ரீதியில் மக்களுக்குச் சேவையாற்றும் வாய்ப்பினை வழங்கியது. தனி நபராக நின்று அரசியல் போக்கை நோக்கிய அவரது நிலை பின்னர் தேசிய அரசியல் அவரை நோக்கும் நிலைக்கு அவரை மாற்றியது. அமைச்சுப் பொறுப்புக்கள் மூலம் தன் தேசத்தின் அபிவிருத்திக்காகத் தம்மை அர்ப்பணித்தார். தம் மக்களின் எதிர்கால சுபீட்சத்துக்காக பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தினார். வாழ்விலும், தாழ்விலும், தம்மை மறக்காது நிதானத்துடன் செயல்பட்டதன் காரணமாக அரசியல் நெறிமுறை தவறா உத்தமப்பண்புடையவராகப் போற்றப் படுகிறார். உள்ளூர் அரசியலில் நுழைந்து சமூகப்பணிக்காகத் தம்மை அர்ப்பணித்த கௌரவ அப்துல் மஜீது ஈற்றில் தேசிய அந்தஸ்துடைய அமைச்சராக சேவையாற்றி இன்று மக்களால் பாராட்டப்படுகிறார்.

# சம்மாந்துறையின் பொருளாதார அபிவிருத்திக்கு கௌரவ எம்.ஏ. அப்துல் மஜீது (M.P.) அவர்கள் ஆற்றிய பணி.

எஸ்.எல்.ஏ. சலாம். B A., DIP. IN. ED., TT[1]
Cluster Principal,
Sammanthurai.

கிழக்கிலங்கையில் சீருஞ் சிறப்பும், வரலாற்றுப் பெருமையும் கொண்ட பழம் பெரும் பதிகளில் சம்மாந்துறை சிறப்பிடம் வகிக்கின்றது. இப்பதியில் இஸ்லாமியரும் தமிழரும் இரண்டறக் கலந்து இன ஐக்கியத்திற்கெடுத்துக் காட்டாக நீண்ட காலமாக நெருங்கி வாழ்கின்றனர். கிழக்கின் தானியக்களஞ்சியமாக, ஊருக்கும் உலகுக்கும் உண்டி கொடுத்து மகிழும் உழவர் பெருமக்களைப் பெரும்பாலும் கொண்டிருக்கும் சம்மாந்துறை பண்டைக் காலம் முதல் வரலாற்று ரீதியாகப் பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டு பெருமையுடன் திகழ்ந்து வந்துள்ளது. இவ்வூரின் பொருளாதார அபிவிருத்தி முழுவதும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சி பெற்று வந்துள்ளதை அதன் வரலாற்றை நோக்கும் போது அறியக்கூடியதாக உள்ளது.

சம்மாந்துறையின் அமைவிடமும், அதன் புவியியல் நிலைமைகளும் இதன் பொருளாதார வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்து வந்துள்ளன. மீன்பாடும் தேனாட்டின் புகழ்பெற்ற மட்டக்களப்பு வாவியின் தென்கோடியில் நெல்வயல்களால் சூழப்பட்டு அமைந்துள்ள இவ்வூர் கண்டி இராச்சியத்துக்குரிய, கிழக்கின் பிரதான துறைமுகமாகவும், பொருட்களின் ஏற்றுமதி - இறக்குமதியின் முக்கிய துறையாகவும் விளங்கியமைக்கு நம்பகமான சரித்திரச் சான்றுகள் எமக்குக் கிடைத்துள்ளன. "Ceylon in Ptolemy's Geography" by G.Sinnathamby என்பவரின் கருத்துப்படி சம்மாந்துறை பற்றி இவ்வாறு கூறப்படுகின்றது.

இலங்கையின் மிகப் பழமையான நெல்வயல்கள் இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில்தான் அமைந்திருக்கின்றன. மகாவம்சத்தில் பராக்கிரமபாகு வெளிநாட்டிற்கு நெல் ஏற்றுமதி செய்ததாக கூறப்படுகின்றது. அக்காலத்தில் அதிக நெல் உற்பத்தி கிழக்கிலேயே இடம் பெற்றிருக்கின்றது. அத்தோடு சம்மாந்துறையிலிருந்துதான் ஏற்றுமதியாயிருக்க வேண்டும். இவையாவும் சரியென்றால் டொலமி என்ற எகிப்திய புவியியல் ஆய்வாளர் இலங்கைப் படத்தில் குறிப்பிடும் "மெக்னஸ் லிடூஸிஸ் (Magnus Lidusis) எனும் இடம் சம்மாந்துறையாகத்தான் இருக்க வேண்டும்."

இக்கூற்றிலிருந்து சம்மாந்துறை பண்டைக்காலம் முதல் ஒரு துறைமுகமாக இருந்துள்ளது என்றும் இங்கிருந்து வெளியே நெல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என்றும் புலனாகின்றது. அன்று முதல் இன்றுவரை நெல் உற்பத்தியிலும் நெல், அரிசி என்பனவற்றின் ஏற்றுமதியிலும் சம்மாந்துறை தொடர்ந்தும் முன்னணி வகித்து வருவதை கண்கூடாகக் காண்கின்றோம்.

பொதுவாக நோக்குமிடத்து சம்மாந்துறையின் பொருளாதாரம் பெரும்பாலும் விவசாய நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது. இங்கு பல்வேறு சிறு கைத்தொழில் நடவடிக்கைகளும் அரசாங்க வேலை வாய்ப்புகளும் வர்த்தக முயற்சி

களும் பொருளாதார முயற்சிகளின் அம்சங்களாகக் காணப்பட்டபோதும் மக்களின் அன்றாட வாழ்க்கை விவசாயத்தோடு பின்னிப் பிணைந்தே காணப்படுகிறது.

சம்மாந்துறையின் பொருளாதார அபிவிருத்திக்குப் புவியியல், வரலாற்றுக் காரணிகள், கலாச்சார அம்சங்கள் என்பன துணைபுரிந்தாலும் இன்றைய துரித அபிவிருத்தியின் வளர்ச்சிக்கு அடித்தளமாக நின்று நேரடியாகவும், மறைமுகமாகவும் கடந்த பல தசாப்தங்களாக உதவியும் ஒத்தாசையும் புரிந்து சேவையாற்றி வரும் 32 ஆண்டு பாராளுமன்ற சேவை நிறைவு விழாக் காணும் எமது மண்ணின் மைந்தன் கௌரவ எம்.ஏ. அப்துல் மஜீது (M.P) நெசவுக்கைத் தொழிலமைச்சர் அவர்களை சம்மாந்துறைத் தாயகம் என்றென்றும் நினைவில் வைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

தற்கால சம்மாந்துறையின் பொருளாதார அபிவிருத்தியைப் பின்வரும் மூன்று காலப்பகுதிக்குள் நின்று நோக்குதல் சாலவும் பொருத்தமானது.

(1) 1950 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதி

(2) 1950 ஆம் ஆண்டிற்கும் 1960 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதி

(3) 1960 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலப்பகுதி

1950 ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் சம்மாந்துறையின் பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. விவசாய நடவடிக்கைகள் பாரம்பரிய முறைகளைப் பின்பற்றியதாகவும் பிற்போக்குடையதாகவும் காணப்பட்டது.

இப்பிரதேசத்தில் பெரியவெளி, மலுக்கன்பிட்டி, நெல்லுச்சேனை, சேனைவட்டை, கொக்குநாரை போன்ற வட்டைகளைச் சேர்ந்த ஏறக்குறைய 2500 ஏக்கர் நிலம் பட்டிப்பளையாற்றுப் பாய்ச்சலுக்குட்பட்டுச் செய்கை பண்ணப் பட்டு வந்தது. ஏனைய சில இடங்களில் ஆங்காங்கே சேனைச்செய்கைக்கு உட்பட்டும், மானாவாரிச் செய்கைக்கு உட்பட்டும் வந்துள்ளன. நவீன இயந்திர வசதிகளோ, நவீன நெற்செய்கை முறைகளோ கையாளப்படவில்லை.

சம்மாந்துறை மக்கள் நெற்செய்கைக்குரிய நீர்ப்பாசன வசதிகளை மிகவும் கஷ்டப்பட்டே நிறைவு செய்தனர் மரம், கம்பு, தடி என்பன கொண்டு மண்ணினா லான அணைக்கட்டுகளை ஆற்றை மறித்துக்கட்டியே நீர் பாய்ச்சினர். இதற்காக விவசாயிகள் ஊரைக் கூட்டி நாட்கணக்கில் வயல் பிரதேசங்களில் தங்கி கஷ்டங் களின் மத்தியிலேயே நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதுவும் காலபோகத்திற்கு மட்டுமே விவசாயம் செய்யக் கூடியதாக இருந்தது. இதற்கடுத்த படியாக காத்தான்ட வட்டை, புதுக்காடு, நெடியாள்ள கண்டம் ஆகிய வட்டைகளைச் சேர்ந்த ஏறக்குறைய 2500 ஏக்கர் நிலம் பட்டிப்பளையாற்றுப் பாய்ச்சலுக்குட் படுத்தப்பட்டது.

எம் நாட்டின் தேசபிதாவும் முன்னாள் பிரதமருமான திரு.D.S. சேன நாயக்கா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சேனநாயக்கா சமுத்திரம் கட்டிமுடிக்கப்பட்டு கல்லோயா அபிவிருதித்திச் சபை (GODB) இயங்க ஆரம்பித்த காலம்வரை சம்மாந்துறையின் பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது.

இக்காலகட்டத்தில் அரசியலும் எங்களுக்குச் சாதகமாக இருக்கவில்லை. இலங்கை சுதந்திரமடையும்போது சம்மாந்துறை கல்முனைத் தேர்தல் தொகுதிக்கு உட்பட்டிருந்தது. அப்பொழுது மர்ஹூம் கேட்முதலியார் எம்.எஸ்.காரியப்பர் அவர்கள் பாராளுமன்றப் பிரதிநிதி ஆக இருந்தார்கள்.

இக்காலக்கட்டத்தில் சம்மாந்துறை விவசாயப் பெருங்குடி மக்களை வாட்டி வதக்கிய முக்கியபிரச்சினை முதலின்மையாகும். தமது உற்பத்தியைப் பெருக்க வசதியில்லாததாலும், உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த வசதியில்லாததாலும், விவசாயிகள் ஆரையம்பதி, காத்தான்குடி ஆகிய பகுதிகளுக்குச் சென்று காணிகளை அடகு வைத்துப் பணம் பெற்று வந்தனர். காலகெதியில் அடகுப் பணத்தையும், வட்டியையும் அடைக்க முடியாத காரணத்தால் விவசாயிகளின் காணிகள் அப்பகுதி மக்களுக்குக் கைமாறிக் கொண்டும் வந்தது. இதனால் மக்களின்மத்தியில் வறுமையும் கடன்பளுவும் பெருஞ்சுமைகளாகின.

சம்மாந்துறை மக்களின் மத்தியில் வறுமை, கடன்பளு, துன்பம், துயரம் சூழ்ந்திருந்த வேளையில் எமது மதிப்புக்குரிய கௌரவ அமைச்சர் ஜனாப்.எம்.ஏ. அப்துல் மஜீது அவர்களின் தந்தை மர்ஹூம். ஏ.யூ. முஹம்மதலி (போஸ்மாஸ்டர்) அவர்கள் எமதூர் மக்களின் நலன் கருதிச் செய்த சேவையை எவரும் எளிதில் மறந்துவிட முடியாது. இவர் ''சம்மாந்துறை வேவகம் பற்று ஐக்கிய விளைபொருள் உற்பத்தி, விற்பனவுச் சங்கம்'' என்ற பெயரில் ஒரு தாபனத்தை ஆரம்பித்தார்கள். இச்சங்க மூலம் விவசாயிகளுக்கு வேளாண்மைச் செய்கைக்குக் கடன் கொடுக்கப்பட்டதாலும், உற்பத்தியான நெல்லை நியாய விலைக்கு விற்கக் கூடியதாக இருந்த படியாலும், மக்களின் வாழ்க்கையில் மகத்தான மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின காணிகள் அந்நியருக்குக் கைமாறும் நிலையும் தவிர்க்கப்பட்டது. மேற்படி சங்கம் அமைக்கப் பட்டது இவ்வூர் விவசாயிகளுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

அடுத்த கட்டமாகிய 1950 ஆம் ஆண்டுக்கும் 1960 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதி எமது பகுதியின் அபிவிருத்திக்குத் தளிர்விட்ட பகுதியாகக் கொள்ளலாம். 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் கல்முனைத் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதியாக மர்ஹூம் ஜனாப் ஏ.எம்.மேர்ஸா அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். எமது கௌரவ அமைச்சர் ஜனாப் எம்.ஏ.அப்துல் மஜீது (M.P.) அவர்களின் தாய்மாமனாகிய சம்மாந்துறையைத் தாயகமாகக் கொண்ட ஜனாப் ஏ.எம்.மேர்ஸா அவர்கள் பாராளுமன்ற பிரதிநிதியாகத் தெரிவு செய்யப் பட்டமை எமது பாக்கியமாகும். இவர் பாராளுமன்றப் பிரதிநிதியாகச் சேவை யாற்றிய 1956 ஆம் ஆண்டு வரை சம்மாந்துறை அளப்பரிய நன்மைகளைப் பெற்றது. இவருடைய காலத்தில்தான் நாம் 'பெரிய சங்கம்' என அழைக்கப்படும் தற்போதைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அப்போதிருந்த பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்களால் 1953 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவ்வைபவத்திற்கு இலங்கைப் பாராளுமன்றத்தின் எல்லா உறுப்பினர்களும் சமூகமளித்த வரலாற்றுப் புகழ் படைத்த சம்பவம் என்றும் மறக்க முடியாதது. சம்மாந்துறை விவசாயப் பண்ணையை உருவாக்கியமையும் சம்மாந்துறை வைக்கோல் கொள்வனவு நிலையம் ஆரம்பிக்கப்பட்டமையும் மர்ஹூம் ஏ.எம். மேர்ஸா அவர்களின் காலத்திலேயாகும்.

சம்மாந்துறையின் வரலாற்றில் 1955 ஆம் ஆண்டு மறக்கமுடியாதது. சம்மாந்துறைப் பட்டின சபையின் தலைவராக 1955 ஆம் ஆண்டு முதல் 1960 ஆம் ஆண்டுவரை வீற்றிருந்து அரும்பணியாற்றிய ஜனாப் எம்.ஏ. அப்துல் மஜீது அவர்கள் அரசியலில் அனாதையாக இருந்த எம்மை அரவணைத்துச் சென்றார். இக்கால கட்டத்தில் ஊரின் உயர்வுக்கான பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தினார்.

இதே காலப்பகுதியில் பதவிக்கு வந்த காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் திரு. S.W.R.D. பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் காணிச்சீர்திருத்தச் சட்டத்தினால் சம்மாந்துறை விவசாயிகள் அதிக நன்மை பெற்றனர். முன்னாள் காணி விவசாய அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனா அவர்களின் குத்தகைச் சட்டத்தினால் ஆரையம்பதி, காத்தான்குடி போன்ற இடங்களில் ஏற்கனவே அடகுவைக்கப்பட்ட காணிகளில் பெரும்பகுதி மீண்டும் எமது மக்களுக்கு வரக்கூடிய வாய்ப்பும் கிடைக்கப் பெற்றது. இதனால் சம்மாந்துறை மக்களின் பொருளாதாரம் உயர்ந்த நிலைக்குச் செல்லக் கூடிய வாய்ப்பேற்பட்டது. இதற்கு உறுதுணையாக பட்டின சபையின் தலைவராக வீற்றிருந்து அரும்பணியாற்றிய ஜனாப் எப்.ஏ. அப்துல் மஜீது அவர்களின் சேவை மனப்பாங்கை மக்கள் நன்கு அறிந்து கொண்டனர்.

மூன்றாவது கட்டமாகிய 1960 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட பகுதி சம்மாந்துறையில் மட்டுமன்றி இப்பிரதேசம் முழுவதிலும் மகத்தான மாறுதல்கள் ஏற்பட்ட காலமாகக் கொள்ளலாம்.

1960 ஆம் ஆண்டு மார்ச் பொதுத் தேர்தலில் பொத்துவில் தொகுதியின் பாராளுமன்றப் பிரதிநிதியாக சம்மாந்துறை மண்ணில் பிறந்த மகன் ஜனாப் அப்துல் மஜீது அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். 1960 ம், 1965 ம், 1970 ம் ஆண்டுகளில் மீண்டும் மீண்டும் அதே பொத்துவில் தொகுதி வாக்காளர்கள் அதே பிரதிநிதியைத் தொடர்ந்தும் தெரிவு செய்தார்கள். 1960 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரை பொத்துவில் தொகுதி மக்களின் நம்பிக்கையைப் பெற்ற தலைவனாக இனவாதம், பிரதேசவாதம் என்பவற்றுக்கு அப்பால் நின்று சேவையாற்றிய பெருந்தகை எமது அமைச்சர் ஜனாப் எம்.ஏ. அப்துல் மஜீது (M.P.) அவர்களாகும். இக்காலகட்டத்தில் பொத்துவில் தொகுதி வாழ் இஸ்லாமிய, தமிழ், சிங்கள மக்களின் உயர்ச்சிக்காக, அவர்களது பொருளாதார சமூக மேம்பாட்டுக்காக ஆற்றிய அரும்பணிகளை இங்கு கூறப்போனால் விரிந்து கொண்டேபோகும். ஆயினும் பொருளாதார வளர்ச்சி கருதிச் செய்யப்பட்ட முக்கிய விடயங்களைச் சுருக்கமாக இங்கு கூறுதல் பொருத்தமுடையதாகும்.

**விவசாயமும் குடியேற்றத் திட்டமும்:-**

1. இறக்காமம் விக்குளா மடுக்கண்டத்து வாய்க்கால் அழிபட்ட காரணத்தால் விவசாயச் செய்கை தடுபட்டது. அதற்காக ஒரு ஏக்கருக்கு ரூபா 120 வீதம் ரூபா 67,000 இனாமாக அரசாங்கத்திடம் வாதாடி மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

2. இறக்காமம், வரிப்பத்தான் சேனை மக்களுக்கு வலதுகை வாய்க்காலில் 10ம் இலக்கக் குடியேற்றத் திட்டம் அமைத்து குடும்பத்துக்கு மூன்று ஏக்கர் விதை பூமியும், அரை ஏக்கர் மேட்டுநிலமும் கொடுக்கப்பட்டது.

3. கோமாரிமக்கள் அனைவருக்கும் குடும்பத்திற்கு மூன்று ஏக்கர் விதைபூமியும் இரண்டு ஏக்கர் மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கான பூமியும் அவ்வூர் மக்களின் எதிர்கால அபிவிருத்திக்காக 500 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டது.

4. பொத்துவில், பாணமை, லகுகல மக்களின் அரசாங்கப் பூமியில் உத்தரவில்லாமல் பயிர்செய்தவர்களுக்கெல்லாம் LDO பேமிற்றும், வீடுகட்ட இடமும் கொடுக்கப்பட்டது.

5. சம்மாந்துறை மக்களின் 1498 குடும்பங்களுக்கு LDO திட்டத்தில் பூமி வழங்கப்பட்டது.

6. திருக்கோயில் றசூல் முதலாளியின் தோட்டத்தில் 336 ஏக்கர் நிலம் அரசாங் கத்தால் ஒரு ஏக்கருக்கு ரூபா 1000 வீதம் 3 இலட்சத்து 36 ஆயிரம் ரூபா கொடுத்து வாங்கி குடும்பத்துக்கு அரை ஏக்கர் வீதம் தம்பிலுவில், திருக் கோயில் ஆகிய இடங்களில் நெருங்கி, சுகாதார வசதியற்று வாழ்ந்த 600 குடும்பங் களுக்குப் பிரித்து குடியேற்றப்பட்டது. மேலும் இக்குடும்பங்கள் வீடுகட்டவும், கிணறு கட்டவும் பரதைகள் போடவும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது.

7. சம்மாந்துறை 'ஜே' புளக் குடியேற்றத் திட்டத்துக்காக அரசாங்கப் பணத்தில் ரூபா 16 இலட்சத்து 74 ஆயிரம் செலவிட்டுக் குடியேற்றத் திட்டம் அமைக்கப்பட்டது.

8. பொத்துவில்லில் சின்னஉல்ல, பசறிச்சேனை ஆகிய குடியேற்றங்களுக்கு உதவியும், ஹிதாயாபுரம் குடியேற்றத் திட்டமும் அமைக்கப்பட்டதும்.

9. கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தால் வெள்ளம்போல் குடியேறி வந்த சிங்களக் குடியேற்றத்தை 26ம் குடியேற்றத்துக்குக் கிழக்குப் பக்கமாகத் தடுத்து நிறுத்தி தற்போது மஜீத் புரம் என்றழைக்கப்படும் பகுதியில் முஸ்லிம் குடியேற்றத்தை நிறுவி முஸ்லிம்களின் பாரம்பரியமான காணிகள் பறிபோகாமல் பாதுகாக்கப்பட்டது. மஜீத் புரத்திலிருந்து சம்மாந்துறை வரையுள்ள ஏறக்குறைய 7500 ஏக்கர் நிலம் சம்மாந்துறை மக்கள் மத்தியில் பங்கிடப்படுவதற்கும் அதற்குரிய நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதற்கும் அமைச்சர் அவர்கள் ஆற்றிய தொண்டு மகத்தானது.

10. சம்மாந்துறைப் பகுதியில் காணப்பட்ட பெரும்பாலான காணிகள் திட்ட மிடப்படாது விவசாயிகளால் அடாத்தாகப் பிடிக்கப்பட்டு ஓர் ஒழுங்கிற்கு அமைவில்லாமல் காணப்பட்டது. இக்காணிகள் சேனைச் செய்கை நிலமாகவும் மானாவரிப் பூமியாகவும் காணப்பட்டது. இக்காணிகள் BOP திட்டத்தின் கீழ் 3 ஏக்கராகப் பிரிக்கப்பட்டு வழங்கப்பட கல்லோயா அபிவிருத்திச் சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையால் எமது மக்கள் கஷ்டப்பட்டு வெட்டித் திருத்திய காணிகள் பறிபோகக்கூடிய நிலையும் உருவானது. இப்பிரச்சினையை உணர்ந்த அமைச்சர் அவர்கள் BOP க்கு அமைவாகவும், ஒவ்வொரு குடும் பத்துக்கும் காணிகள் கிடைக்கக் கூடியதாகவும் ஏற்பாடு செய்து விவசாயிகள் எவ்வகையிலும் பாதிக்கப்படாத வகையில் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. மேலும் இக்காணிகளுக்கு LDO பேமிற் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனால் இப்பிரதேசத்தில் ஏழைவிவசாயிகள் நிலச்சொந்தக் காரர்களாகக் கூடிய அரிய வாய்ப்பும் கிடைக்கலாயிற்று. இவ்வபிவிருத்தி நடவடிக்கையால் 'போடி' வர்க்கத்திற்கு தலை வணங்கி வாழும் நிலையும் மாறி மக்கள் வாழ்வில் மாபெரும் பொருளாதார அபிவிருத்தி காணவும் வழியேற்பட்டது.

நீர்ப்பாசன வசதி:-

1. அரசாங்க உதவியோடு பக்மிட்டியா கிராமக்குளம் கட்டப்பட்டது.

2. இத்திட்டத்தில் குடும்பத்துக்கு 3 ஏக்கர் நிலமும் காடு வெட்டுவதற்குப் பணமும் கொடுக்கப்பட்டது.

3. பொத்துவிலில் குஞ்சான் ஓடை நீர்ப்பாய்ச்சல் திட்டம் சீர்திருத்தித் திருத்தப்பட்டது.

4. பொத்துவிலில் முளிலையடி நீர்ப்பாய்ச்சல் கட்டு கட்டப்பட்டது.

5. பொத்துவிலில் நாவலாற்று அணைக்கட்டு, பள்ளியான்றோட்டு அணைக்கட்டு கட்டப்பட்டது.

6. பாணமைக்குளம், றொட்டைக்குளம், லகுகல குளம் என்பன உயர்த்திக் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

7. மல்கம்பிட்டி, தொய்யம்வட்டை, பெரியவெளிக்கண்டங்களுக்கு நீர்ப்பாய்ச்சல் வசதிக்காக நீர்ப்பாய்ச்சல்கட்டு பட்டம்பிட்டியாற்றை மறித்துக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

8. திருக்கோயில் தாண்டியடிக்குளமும், மன்னங்குளமும் கட்டப்பட்டது.

9. தின்னியாண்டி மடு வாய்க்கால் பூர்த்தி செய்யப்பட்டது.

மேலும் போக்குவரத்துப் பாதைகள், பாலங்கள் மதகுகள் என்பன அமைத்து இப்பிரதேச நலனுக்காக ஜனாப் எம்.ஏ. அப்துல் மஜீது அவர்கள் சேவை செய்துள்ளார்கள்.

போக்குவரத்து வசதி:-

1. சம்மாந்துறையிலிருந்து நெய்னாகாடு - கருப்போடை முந்தல் ஊடாக மல்வத்தை வரையுமுள்ள வண்டிப்பாதை தார் ஊற்றப்பட்டு வாகனங்களும் செல்லக் கூடிய பாதையாக மாற்றப்பட்டது.

2. மலுக்கன் பிட்டியிலிருந்து பெரியவெளி ஊடாகச் செல்லும் பாதை அமைக்கப் பட்டது.

3. வங்களாவடியிலிருந்து சேனைவட்டையை ஊடறுத்து கொக்கு நாரை ஊடாக வளத்தாப்பிட்டியைச் சென்றடையும் வீதி அமைக்கப்பட்டது.

4. பொத்துவிலில் மாபெரும் அறுகம்பைப் பாலம் அமைக்கப்பட்டமையும், அங்குள்ள பாதைகள் செப்பனிடப்பட்டமையும், இவற்றுடன் மேலும் பல போக்குவரத்துப் பாதைகள், பாலங்கள் என்பனவும் இக்காலத்தில் அமைக்கப்பட்டன. இவை யாவும் விவசாயிகளின் நன்மை கருதி அமைக்கப்பட்டவையாகும். இதனால் தமது உற்பத்திப் பொருட்களை மாட்டுவண்டி மூலம் ஏற்றி இறக்கிய விவசாயிகள் வாகனங்கள் மூலம் இலகுவாகவும், விரைவாகவும் மேற்கொள்ள வசதிகள் ஏற்பட்டன.

1977ம் ஆண்டில் சம்மாந்துறை என்ற தனித்தொகுதி உருவாக்கப்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க சம்பவமாகும். 1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சம்மாந்துறை பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட அமைச்சர் அப்துல் மஜீது அவர்கள் 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் வரை காணி விவசாய பிரதியமைச்சராக எரிபொருள், மின்சக்தி, பெருந்தெருக்கள் பிரதியமைச்சராக தபால் தந்திப் பிரதியமைச்சராக, மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராக வீற்றிருந்து இப்பிரதேச மக்களின் நலனுக்காக ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்காது. அதி உத்தம ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அவர்கள் எமது தலைவர் அப்துல் மஜீது அவர்களின் பெறுமதியை உணர்ந்து 1989ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் தேசியப் பட்டியலில் இருந்து பாராளு மன்ற உறுப்பினராகத் தெரிவு செய்தமை மாபெரும் கௌரவமான நிகழ்ச்சியாகும்.

கௌரவ அமைச்சர் அவர்கள் இக்காலப்பகுதியில் சம்மாந்துறைப் பிரதேசத்திற்கு ஆற்றிய சேவைகள் இப்பிரதேசத்தில் சேவை புரிந்த எந்தவொரு அரசியல் வாதியும் செய்ய வில்லை என்பது வெள்ளிடைமலை.

இக்காலப் பகுதியில் பொருளாதார அபிவிருத்திக்காகச் செய்த சேவை களைச் சுருக்கமாகப் பின்வருமாறு நோக்கலாம்.

**விவசாயமும் குடியேற்றமும்:-**

1. காணி பிரதி அமைச்சராக கடமையாற்றிய போது இறக்காமத்தில் விக்கிளா மடு, பெருவெளிக்கண்டம் ஆகிய காணிகளைச் சீனிக் கூட்டுத்தாபனம் சுவீ கரிக்கத் திட்டமிட்ட போது அதனைச் சுவீகரிக்காமல் தடுத்து நிறுத்தியது.

2. சுவீகரிக்கப்பட்ட கத்தமனாரப்பத்த, கல்லடிவட்ட, பள்ளிச்சேனைக் காணிகளை மீளப் பெற்றுக் கொடுத்தமை.

3. 1987 ஆம் ஆண்டு வாணாகமவில் 10ஏ, 11ஏ குடியேற்றக் காணிகளுக்குப் பேமிற் பெற்றுக் கொடுத்தமை.

4. இறக்காமம் குடியிருப்பு நிலங்களுக்குப் பேமிற் பெற்றுக் கொடுத்தமை.

5. கல்லோயா அபிவிருத்திச் சபையில் வேலை செய்த 80 பேருக்கு கரும்புச் செய்கைக்காகக் காணி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

6. பல வருடங்களாக அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட அக்கரைப்பற்று விவசாயிகளின் காணிகளுக்குப் பதிலாக கரும்புக் காணி பெற்றுக் கொடுத்தமை.

7. அக்கரைப்பற்றில் காணிகளுக்கு உத்தரவுப் பத்திரம் பெற உதவியமை.

8. அன்னமலை, நாவிதன் வெளிப் பகுதியில் அரச காணிகளில் அத்துமீறிக் குடியேறி விவசாயம் செய்தவர்களுக்கு உத்தரவுப் பத்திரம் பெற்றுக் கொடுத்து உரிமையாக்குவதில் பாடுபட்டமை.

9. ஒரு காலகட்டத்தில் அரசாங்கம் பல ஏக்கர் காணிகளைச் சுவீகரித்துக் கொண்டது. அது தவறு என்று இடித்துரைத்து வாதாடி அக்கிலாவெளியில் சுமார் 200 ஏக்கர், மிலாத்து வட்டையில் ஏறக்குறைய 150 ஏக்கர், தொட்டாவரிவட்டையில்

சுமார் 200 ஏக்கர், பறயன்ட களிமடுவில் ஏறத்தாழ 100 ஏக்கர் என்று மொத்தமாக 650 ஏக்கர் காணிகளை மீளப் பெற்றுக் கொடுத்தமை.

10. சம்மாந்துறையிலுள்ள சகல காணிகளுக்கும் உத்தரவுப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

11. சம்மாந்துறையிலுள்ள சகல மக்களுக்கும் காணி பெற்றுக் கொடுத்தமை.

12. சம்மாந்துறை சுளையன் சேனையில் 450 குடும்பங்களுக்கு குடியிருப்பு நிலம் வழங்கி அதற்குரிய பேமிற்றும் வழங்கியமை.

**நீர்ப்பாசனம்:-**

1. 1950 ஆம் ஆண்டளவில் பாவனைக்கு இருந்த சேனநாயக்கா சமுத்திர நீர்ப்பாசனக் கால்வாய்கள் அனைத்தும் 1975-1980 ஆம் ஆண்டளவில் முற்றாக செப்பனிடப் பட வேண்டிய நிலைக்குச் சேதமடைந்திருந்தது. சம்மாந்துறைப் பிரதேசத் திலிருந்த சகல நீர்ப்பாசன கால்வாய்களும் பல இலட்சம் ரூபா செலவில் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது.

2. இப்பிரதேசத்தின் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக அமைக்கப்பட்ட சகல கொங்கிறீற்றிலான அணைக்கட்டுகளும் அமைச்சர் அப்துல் மஜீத் அவர்களின் முயற்சியினால் மாத்திரமே கட்டப்பட்டவையாகும்.

3. இப்பிரதேசத்திலுள்ள சகல விவசாயக் காணிகளுக்கும் நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இதனால் ஒரு போகச் செய்கைக்குரிய பூமி என்று சொல்லக்கூடிய விவசாய நிலம் இப்பகுதியில் இல்லாமல் போனதுடன் எல்லாப் பூமிகளும் இருபோகச் செய்கைக்குரிய நிலங்களாக மாறின.

இச்சந்தர்ப்பத்தில் இப்பிரதேச நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக எமது அமைச்சர் அவர்களின் மாமனார் பொறியியலாளர் மர்ஹூம் எம்.எம். இஸ்மாயில் அவர்கள் செய்த அளப்பரிய பணிகளையும் மறக்கமுடியாது.

இதுவரையும் எமது மதிப்புக்குரிய அமைச்சர் அப்துல் மஜீது அவர்கள் விவசாய நடவடிக்கைகளுக்காற்றிய பணிகளையும் அதன் காரணமாக சமூகத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியையும் கண்டோம். மேலும் அமைச்சர் அவர்களின் உயரிய சிந்தனைக்கும், செயற்பாட்டிற்கும் உறுதுணையாகவும், பக்கபலமாகவும் சேவையாற்றிவரும் எமதூரின் இளவல் விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர் ஜனாப். ஐ.ஏ.ஜப்பார் அவர்களையும் இங்கு நினைவு கூருதல் சிறப்புடையது.

இப்பிரதேசத்தில் கைத்தொழில் முயற்சிகளும் அமைச்சரால் ஊக்குவிக் கப்பட்டன. கால் நடை அபிவிருத்தி, மீன்பிடி அபிவிருத்தி, நெசவுத்துறை அபிவிருத்தி, செங்கல் உற்பத்தி முயற்சிகள், கருங்கல் உற்பத்தி போன்ற பல்வேறு தொழில் முயற்சிகளுக்கு ஊக்கமும் உதவியும் அளித்து வந்துள்ளார்கள். படித்த வேலையற்ற இளம்யுவதிகள் 54 பேருக்கு 7 இலட்சம் ரூபா செலவில் 'ஸிக்சேக்' தையல்மிசின் வழங்கப்பட்டது.

இப்பிரதேச விவசாயிகளின் நன்மைகருதி கமநல சேவை நிலையங்கள், நெல் கொள்வனவு நிலையங்கள், பயளைக் களஞ்சியங்கள் போன்ற பல்வேறு வசதிகளும் வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

இலங்கை வங்கிக் கிளை, மக்கள் வங்கிக் கிளை, கிராமிய வங்கி வசதிகள் என்பனவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு வசதிகளும் வாய்ப்புகளும் நிறையப்பெற்ற சமுதாயமாக இப் பிரதேசம் வளர்ச்சிபடைந்து கொண்டிருக்கும் வேளையில்தான் அதி உத்தம ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அவர்களின் ''ஒரு இலட்சம், பத்து இலட்சம் வீடமைப்புத்திட்டங்கள்'' அமைச்சர் அப்துல் மஜீது அவர்களின் கவனத்தை ஈர்ந்தது. கல்வீட்டைக் கனவிலும் நினைத்திராத விவசாயிகள் பலருக்கு இத்திட்டம் வரப்பிரசாதமாக அமைந்தது.

சம்மாந்றையில் 'சமிட்' (Summit) என்றழைக்கப்படும் மத்தியதர வகுப்பாருக்குரிய சுயஉதவி வீடமைப்புத் திட்டமே முதன் முதலில் அமைச்சர் அவர்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும்.

இதனைப் பின்பற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட சுயஉதவி வீடமைப்புச் சங்கங்கள் உருவாகவும் ஏறக்குறைய 2096 வீடுகள் கட்டப்படவும் அமைச்சர் அப்துல் மஜீது அவர்கள் அயராது பாடுபட்டுழைத்ததை இச்சமுதாயம் என்றென்றும் மறக்கவே முடியாது. இந்த நடவடிக்கை அமைச்சர் அவர்களின் அபார சாதனையாகும். இலங்கையில் இதுவரையிலும் எந்தவொரு பாராளுமன்றப் பிரதிநிதியும் இத்தனை பெருந்தொகை வீடுகளைத் தனியொரு தொகுதிக்குக் கட்டிக் கொடுக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் 767 குடும்பங்களும், பதினைந்து இலட்சம் வீடமைப்புத்திட்டத்தின்கீழ் 154 குடும்பங்களும் கடன்பெற்று வீடுகளைக் கட்டியுள்ளன. ஒரு இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வறியோருக்கான செவன வீடமைப்பில் 10 வீடுகள் நன்கொடையாகவும், பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 'செவன சறன' வீடமைப்புத்திட்டமாக 79 வீடுகளும் சம்மாந்துறையில் கட்டப்பட்டுள்ளன. 644 வீடுகளைக் கொண்ட எட்டு மாதிரிக் கிராமங்களைச் சம்மாந்துறைத் தொகுதியில் அமைப்பதற்குப் பாடுபட்ட அமைச்சரின் சேவைத்திறன் எல்லோராலும் எப்பொழுதும் பாராட்டி மதிக்கப்படக் கூடியதாகும்.

பொருளாதார அபிவிருத்திக்கான எதிர்கால நடவடிக்கைகளுக்கும் அமைச்சர் அவர்கள் திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றார்கள். அரசாங்கத்தின் 200 ஆடைதயாரிக்கும், 500 பேருக்குத் தொழில்வாய்ப்பு வழங்கக் கூடிய பாரிய தொழிற்சாலையொன்று சம்மாந்துறையில் அமைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவ்வாண்டின் பிரதேச "கம்உதாவ'' சம்மாந்துறை சுளையன் சேனையில் நடைபெறுவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இன்று சம்மாந்துறைத் தாயகம் பல்வேறு துறைகளிலும் முன்னேறியுள்ளது. சம்மாந்துறையின் பொருளாதார அபிவிருத்திக்குக் கல்வி அபிவிருத்தியும் பேருதவி

புரிந்து வந்துள்ளது. இவ்வூரின் கல்வி அபிவிருத்திக்காக அமைச்சர் அப்துல் மஜீது அவர்கள் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. பட்டி, தொட்டி, காடு மேடெல்லாம் பாடசாலைகள் உருவாக்கப்பட்டது. சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி, அல்மர்ஜான் மகா வித்தியாலயம், சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி என்பன இவ்வூரின் பொருளாதார அபிவிருத்திக்குப் பெரும்பணியாற்றியுள்ளன, மேலும் ஆற்றிவருகின்றன.

சம்மாந்துறையில் நூற்றுக்கணக்கான பல்கலைக்கழகப் பட்டதாரிகள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள், கணக்காளர்கள், பொறியியலாளர்கள், வைத்தியநிபுணர்கள், சட்டத்தரணிகள், கல்விமான்கள் போன்ற பல்வேறு நிபுணத்துவம் நிறைந்த ''புத்திஜீவிகள்'' வகுப்பொன்று உருவாகுவதற்கு அடித்தளமாக அமைந்தவர் அமைச்சர் அப்துல் மஜீது அவர்கள் என்பதை எவரும் மறுக்கவே மாட்டார்கள்.

சம்மாந்துறைப் பிரதேசத்தின் இன்றைய இப்பாரிய பொருளாதார சமூக அபிவிருத்திப் பணிக்குத்தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றி வருபவரும், 1960 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தொடர்ந்து பாராளுமன்றப் பிரதி நிதியாக 32 வருடமாக இருந்து இலங்கையில் சரித்திரம் படைத்தவருமான எங்கள் தலைவர் கௌரவ எம்.ஏ. அப்துல் மஜீது (M.P.) நெசவுக் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்து சமூகப் பணிபுரிய வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திப்போமாக.

# இனிய நெஞ்சமே
# என்றும் நீ வாழ்க!

சங்கை பொருந்திய
சம்மாந்துறை தாயின்
சற் புதல்வரில்
சாந்த மிகு தலை மகனே!
அன்பு நிறை அமைச்சர்
அப்துல் மஜீதே!
எங்கள் தலைவனே!
இதயத் துடிப்பே!
எமதுள்ளம்
பொங்கும் கடலாய்
புகழில் முழுக
முழுமதியே வருக! வருக!!
வாழ்க நீடூழி!

முப்பத்தி ரெண்டாண்டு மேலாய்
மக்கள் மனங்கவரும்
மக்கள் சேவகனாய்
மனதார முழுச் சேவையினை
பிறந்த மண்ணுக்காய் அர்ப்பணித்தாய்!
அன்னை தந்தையாய்
அதிகாரியாய், நாடாளுமன்ற நாயகனாய்
அமைச்சராய் நற்பணிபுரியும்
காருண்ணியம் நிறைந்த
கருணைக் கடலே!
வேகப் பேச்சுக்களால்
வேதனையடைந்தாலும்!
எரிமலையாய் வெடித்தாலும்!
இரங்கி எம்மை அரவணைப்பீர்!
ஏற்றமுங் காணவைத்தீர் ஐயா!
எவருக்குமில்லையே இந்நெஞ்சம்!
என்றும் உன் நெஞ்சம் வாழ்கவே;

ஆளப் பிறந்த எம் செல்வமே!
ஆளுமையின் ஆற்றல்
உங்களுக்குள் ஒளிர்வது
உண்மையிலும் உண்மை ஐயா!
உளமார வாழ்த்துகிறோம்!

சொல் செயல்
தூய்மையாக்கி
வாய்மை தவறாது
வாழ்பவர் ஐயா நீங்கள்!
பல் புகழ் பெற்று
புவி போற்ற, நீடு வாழ
நெஞ்சங்கனிந்து வாழ்த்துகின்றோம்!

திரை மறைவிலும்,
எதிர் நின்ற எதிரியும்
ஏங்கியே!
இடிந்து சரிய,
நீசர்கள் நடுங்கி ஒடுங்க,
எமைக்காக்க,
வீறிற்று எழுந்து,
எம்மீது,
நேசம் பொழிந்த தலைவனே!
எமதூர் புரிந்த பெருந்
தவத்தின் பயனாய்
பிறந்த மண் புரக்க
எழுந்த தலை மகனே!
எம் இதய நடுவில் ஏற்றிய
என்றும் மணம் வீசும்
இன்ப ரோஜாவே!
நாடும் சிறக்க
நலமே நீ வாழ்க!

நெருங்கிப் பழகியோர்
நேசம் பொழிந்தோர்
நிழலாக இருந்தோர் - மனம்
நெருஞ்சிமுள் நெஞ்சானதே!
பேதம்பாராது
பெருமை கொள்ளாது
நல்லவையே நீ செய்த
பெரு நாயகனே!
நலமே நீ வாழ்க!

மெழுகு வர்த்தியாய்
மணம் வீசும் ஊதுபத்தியாய்
வாழை மரமாய், மக்களுக்காய்
வாழுகின்ற உன்னை - இதயங் கனிந்து
வாழ்த்துகிறோம்.

ஏழை எளியோரின்
இடுக்கண் களைந்தாய்!
ஏய்த்துப் பிழைத்தோரை
எகிறி களை எடுக்க
உதய சூரியனாய்
ஊருக்குள் எழுந்தாய்!
உத்தமனே நீ வாழ்க!

பலரும் போற்றும் - உன்
பெரு மனதை கண்ணுற்ற
பஞ்சும் வெட்கித்ததே!
பாதகரும் பணிந்தனரே!

பெருமையும்
பணிவும் - உன்னிடம்
பாடங்கற்றதனைக் கண்டு
பொறாமையுற்றோர் பலரும்
போற்றி புகழ்ந்தனரே!

ஞானத்திலும்
நம் பரப்பிலும்
இன குல பேதம்
கால் பதித்தன,
உன்னிடம் அவை தோற்றன!
தூபமிட்டோர்
துயருற்றனரே!

கடல் அலையும்
கதிரவனும்
விண்ணும் மதியும்
கண்ணெதிரே
காட்சி தருவது போல்
கட்டிடங்கள்,
களனி கால்வாய்கள்,
கல்விச் சாலைகள்,
கற்பாதைகள்,
களஞ்சியங்கள்
கைத்தறி நிலையங்கள்
கற்பிணிமார்
குழந்தைகள்
கடும் நோயுற்றோரினை
கவனிக்க தரமுயர்ந்த வைத்தியசாலை,
இன்னும் எத்தனையோ!
காணும் இடங்களிலெல்லாம்
உங்கள் சேவையின் சின்னங்களே!
மறுப்போர் உளரோ!
மறுப் போர் மனிதப் பண்பினையிழந்தோரே!
முடி சூடா மன்னரே!
மணி விழாக் காண
மோகித்து நிற்கின்றோம்!

ஏழைத் தொண்டனே!
எதிரியும் உன்னை
இதய சுத்தியுடன் வாழ்த்தட்டும்!
எம்மூர் அபிவிருத்தியினை
இரு விழி திறந்து
எண்ணிப் பார்க்கட்டும்!
உன்னால் உயர்ந்தோர்
உயர் பதவி பெற்றோர்
உணவு முத்திரை உரிமையானோர்
ஊர்கலவரத்தில்

உயிர் உடமை இழந்தோர்
உதவி ஒத்தாசை புரிந்த
உன்னை மறப்பரோ!
உன்மையினை உணரட்டுமே!

அன்பின் உயிரே!
ஆழிப் பொன் முத்தே
பொன் மனச் செம்மலே!
இனிய நெஞ்சமே!
நாளை உனது ராஜாங்கமே!
வீர மிகு தோழுடையோனாய்
வெற்றி வாகை சூடி
பிறந்த பொன்னாடும்
புவியும் போற்ற வாழ்க நீடூழி வாழ்க!

உன் மாசற்ற,
நனி சிறந்த சேவையின்
உயர் தீபம்
உலகில் எங்கும் ஒளிரட்டும்!
ஊன்று கோலாய் அமையட்டும்!

—சுலைமா எல் இப்றாஹீம்—
சம்மாந்துறை.

# பொய்முகம் இல்லாத அரசியல் படைத்தவர் அப்துல் மஜீட்

எம். எல். ஏ. காதர் B.A. (Hons), M.A. (ANU),
முதுநிலை அரசறிவியல் விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.

மூன்று தசாப்தகாலம் பாராளுமன்ற உறுப்பினராக ஒருவர் இலங்கை அரசியலில் நிலைத்து நிற்பது என்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. இன்று வரை, எண்ணிப்பார்த்தால், கைவிரல்களால் எண்ணிக் குறிப்பிடத்தக்க அளவினர் மாத்திரமே எமது பாராளுமன்ற வரலாற்றில் காணப்படுவர். சராசரியாக ஐந்து வருடம், அல்லது ஆறு வருடத்தோடு பெரும்பாலான உறுப்பினர்கள் ஆட்டங்கண்டு விடுவார்கள். அடுத்த ஐந்தாண்டு காலத்தில் அவர்கள் செல்வாக்கிழந்து அரசியலை விட்டு நீங்கி விடுவார்கள் அல்லது நீக்கப்பட்டு விடுவார்கள். இதுதான் உண்மைநிலை.

ஆயினும் அப்துல் மஜீட் அவர்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் முப்பத்திரெண்டு வருடங்களுக்குமேல் தொடர்ந்து உறுப்பினராக இருந்திருக்கிறார். இன்றும் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். இவரால் இது எவ்வாறு சாத்தியமாகிற்று என்பதனை நாம் ஒவ்வொருவரும் எண்ணிப்பார்ப்பது நமது கடமைப் பாடாகும். ஏனெனில் இச்சாதனைபற்றி அவரது எதிர்த்தரப்பு விமர்சகர்கள் கூறுமாப்போல் நாம் கூற முற்படக் கூடாது. அவரது அதிஸ்டம் அப்படி என்று மாத்திரம் அவர்கள் கூறுவார்கள். அவ்வாறு கூறும்போது மற்ற எல்லா வழிகளிலும் தோற்க வேண்டிய அப்துல் மஜீட் எப்படியோ வென்று வருகின்றார் என்பதையே அவர்கள் கருதுகின்றனர். மக்களுக்குச் செய்யவேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருந்தும் அவற்றைச் செய்யாமல், பொருட்படுத்தாமல் இருந்தவர் வென்று வருகின்றார் என்றால் அரசியல் விழிப்புணர்வு இல்லாத தொகுதியை அவர் பெற்றிருந்ததே காரணமாகும் என்பர்.

மக்கள் கண்திறந்து பார்த்திருந்தால், அவரது சேவைகளை உற்று நோக்கியிருந்தால் அவரை மீண்டும் ஒருமுறை பாராளுமன்றம் அனுப்பியிருக்க மாட்டார்கள் எனக் கூறுவர். இவருக்கிருந்த அதிஸ்டத்தை வேறுசிலர் இன்னொரு வகையில் வெளிப்படுத்துவர். அதாவது இவரது தேர்தல் தொகுதி பிரிக்கப்பட்ட முறை; சம்மாந்துறை ஒரு துண்டாகவும், பொத்துவில், அக்கரைப்பற்று, மறு துண்டாகவும், மிகவும் பின்தங்கிய தமிழ், சிங்களக் கிராமங்கள் மூன்றாம் பிரிவாகவும் காணப்பட்டது இவரது வெற்றிக்கு மற்றுமோர் காரணமென்பர். இந்த அதிஸ்டம் இவரோடு போட்டியிட்ட எல்லா எதிர் தரப்பினருக்கும் அபேட்சகர்களுக்கும் இருந்தது தானே என்றால் இந்த அதிஸ்டத்தைப் பயன்படுத்த முடியாதிருந்த எதிர்க்கட்சிக் காறர்களை தனது எதிர்க் கட்சிக்காறர்களாக அவர் பெற்றது அவருக்கிருந்த மற்றுமோர் அதிஸ்டம் என்பர்.

மேற்கூறப்பட்ட கருத்துக்களை நாம் ஏற்றாலும், ஏற்காவிட்டாலும் அவரது வெற்றிக்கு இவை பூரணமான விளக்கங்களாக அமையவியலா, அவர் வெற்றி பெற்றார் என்றால், அதற்குப் பின்னால் விளக்கத்தக்க வேறு ஏதும்

பண்புகள் உண்டா என ஆராய வேண்டும். அவர் தொகுதியைப் பராமரித்த முறை; பிரச்சினைகளை இனங்கண்டமுறை; அவற்றிற்குப் பரிகாரம் தேடியமுறை என்பவற்றில் ஒரு ஒழுங்கு ஒற்றுமை இருந்திருக்க வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் தனது பாராளுமன்றத் தொகுதியை ஒரு வகையில் அறிந்துணர்ந்து வைத்திருப்பான். அங்குள்ள மக்களையும், அவர்களது தேவைகளையும் எண்ணி, ஆராய்ந்து தன் மனதில் ஒரு இலக்கணம் வகுத்திருப்பான். சிலவற்றைச் செய்வதற்கும், சிலவற்றை மறுப்பதற்கும், சிலரோடு நெருங்கிப் பழகுவதற்கும், மற்றவர்களைப் புறக்கணிப்பதற்கும் இது வழிஅமைத்திருக்கும். அவர் மனதில் பதிந்த இந்த இலக்கணத்தை, அரசியல் பார்வையை நாம் கண்டுகொள்வோமாயின் அவர் வெற்றிக்குத் துணைநின்றவற்றுள் பிரதான அம்சத்தை விழுங்கிக் கொண்டவர்களாவோம்.

ஒருவர் உள்மனதில் ஓங்கி நின்று சக்திப்படுத்திய ஒருவரது சிந்தனையை, அரசியல் பார்வையை, ஒருவரது சொல்லுக்கும், செயலுக்கும் பின்னின்ற இந்தச் சூத்திரத்தை நாம் விழுங்கிக் கொள்வதற்கு இரு வழிகள் தாம் உண்டு. ஒன்று- ஒருவர் பேசியவை, எழுதியவை பதிப்பப்பட்டதாக இருக்கும்போது அவற்றின் வழியாகச் சென்று ஒருவரது தர்மத்தை, சிந்தனையை விளங்கிக் கொள்வது. இரண்டாவது - ஒருவரது செய்கைகளை, நடவடிக்கைகளைத் தொடர்பு படுத்திப் பார்த்து அதன் வழியாக அதன் பின்னமைந்த ஒருவரது சிந்தனையை விளங்கிக் கொள்வது.

இந்த இரு முறைகளில் நாம் இரண்டாவது முறையினூடாகவே அப்துல் மஜீட் அவர்களின் அரசியல் வாழ்க்கையின் அடிப்படைகளை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் எழுத்துக்களையும், பேச்சுக்களையும் மையமாக வைத்து விளங்கிக் கொள்வதற்கு ஏற்றதொரு அரசியலை அப்துல் மஜீட் அவர்கள் என்றும் நடாத்தியதில்லை. மேடைப் பிரசங்கங்களைக் காரசாரமாகச் செய்தவருமில்லை. வானொலியில், பத்திரிகைகளில் தன் நிலை இதுதான் எனப் பறை சாற்றியவருமில்லை. தான் சரியென நினைப்பதை மக்களுக்குப் புரிந்தால், செய்தால் அவர்கள் பிரச்சினைக்குரிய ஏற்ற பரிகாரத்தை செய்தால் அதுவே அரசியல் நாணயம் என்ற கருத்தை தன் தர்மமாகக் கடைப்பிடித்து வந்தவர் இவர். சுவரொட்டிகள், புகைப்பட வெளியீடுகள், குழுக்கூட்டங்கள், அரசியல் கருத்துத் திணிப்பு வேலைகள் எதுவும் இல்லாமலேயே அரசியலை நடாத்தி வெற்றி கண்டவர் இவர். எனவே அப்துல் மஜீட் அவர்களை அறிந்து கொள்வதற்கு, அவரது அரசியல் வாழ்க்கையை விளங்கிக் கொள்வதற்கு அவரது முப்பத்திரெண்டு வருட அரசியல் வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

சம்மாந்துறை, பொத்துவில், அக்கரைப்பற்று, வீரமுனை, திருக்கோயில், தம்பிலுவில், இறக்காமம். வருகல, பாணமை, ஹுலாநுங்கை ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்கள் - இவரது தொகுதிமக்கள், பல்வேறு மாற்றங்களை இவரது காலப் பகுதியில் அனுபவித்து வந்தனர் என்பது கண்கூடு. சில பிரதேசம் படிப்படியாகவும், சில பிரதேசம் மிகத் தீவிரமாகவும் முன்னேற்றமடையலாகின. பாடசாலைகள் எங்கும் கட்டப்பட்டன. பழயவை தரம் உயர்த்தப்பட்டன. மருத்துவ மனைகள் அமைக்கப் பட்டன. நீர்ப்பாசன வசதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. புதிய குளங்கள் பல கட்டப்பட்டன. வீட்டுத்திட்டம், குடிநீர்த் திட்டம் என மக்கள் சுகம், நலன் பேணவென பல்வேறு முயற்சிகள் ஒழுங்கமைய வந்தன. இவ்வாறு அபிவிருத்தி வேலைகளுக்கு அவர் ஒதுக்கிய பணத்தையும், ஒருமுகப் படுத்திய முயற்சிகளையும், ஒன்றுபடுத்திய மக்கள் அமைப்பு, சங்கங்களையும் நாம் பட்டியல் போட்டுக் காட்டி விடலாம். அவர் இவ்வேலைகளுக்குச் செலவிட்ட நேரத்தையும், எடுத்துக் கொண்ட சிரமங்களையும் கச்சேரிகளில், நிர்வாகக் காரியாலயங்களில் உள்ள மிகச் சாதாரண உத்தியோகஸ்த்தர்களிடமிருந்தே நாம் கேட்டறிந்து கொள்ளலாம்.

அப்துல் மஜீட் அவர்களது சமூக சேவை, பொதுப்பணி மகத்தானது அளப்பரியது என்பதைத் திறந்த மனம் வைத்துப் பார்க்கின்ற எவரும் ஒப்புக் கொள்வர். ஆனால் இவரது முப்பத்திரெண்டு வருட அரசியல் வாழ்க்கையில் ஆழமானவை, மறக்கமுடியாதவை. ஏனெனில். எந்தப் பாராளுமன்ற உறுப்பினரும் எப்பொழுதும் இவற்றைச் செய்து முடிக்கலாம்; ஒதுக்கப்பட்ட பணத்திற்கு ஏற்ற வசதிகளை எவரும் நிர்மானித்து வெற்றி காணலாம். ஆனால் அப்துல் மஜீட் அவர்கள் இப்பணியைச், சேவைகளைச் செய்யவந்த போதும், இவற்றைச் செய்து முடித்த போதும் அங்கு ஒரு கண்ணியம், கடமைப்பாடு, தர்மம், தார்மீகம் என்று சொல்லத்தக்க ஒரு அரச நோக்கு அவரை வழி நடாத்தியிருக்கிறது. அவரது ஒவ்வொரு செய்கைக்கும், நிகழ்விற்கும் இதுவே ஆதாரமாக இருந்திருக்கின்றது. இதனால் அப்துல் மஜீட் என்றவுடன் மக்கள் அவர் ஆற்றிய சேவைகளைத், தொண்டுகளேயன்றி, அவற்றை அவர் ஆற்ற வந்தபோது அங்கு வெளிப்படவந்த தர்மத்தை, தார்மீகத் தத்துவத்தை, மனிதப் பண்பையே பெருமளவு நினைவு கூருகின்றனர்.

இவ்வாறு மக்கள் மனதில் இவர்பற்றிப் பதிந்து போன தார்மீகக் கருத்துக்களுள் முக்கியமான இடத்தைப் பிடித்துக் கொள்ளத்தக்க ஒன்றே. இவர் வெளிப்படுத்திய மனித நேயம் என்ற பண்பாடு இனம், மதம், மொழி என்பவற்றிற்கு மேலாக நின்று தன்னையும் தன் அரசியலையும் இவர் காணவந்தபோது உருவான பண்பே இதுவாகும். மனிதனை மனிதனாகவே நோக்க வேண்டும். மக்கள் பிரச்சினைகளை மனித நேயம் கொண்டே பார்க்க வேண்டும் என்ற இந்தத் தத்துவத்தை அவர் தனது அரசியலில் ஆரம்பகாலம் தொட்டே கடைப்பிடித்து வந்திருக்கிறார். இவர் கற்ற கல்வியும், இக்கல்வியை இவர் கற்ற இடமும் இப் பார்வையை இவர்மீது சிறப்பாக வளர்த்திருக்கின்றது.

இதனை இவரோடு பழகிப் பிரிந்த நண்பர்களும், இவரோடு இன்று பழகிவரும் மக்களும் எந்தளவு இத்தத்துவத்தோடு ஊறிப்போனவர் இவர் என்பதை எமக்கு உறுதிப்படுத்துவர். இவர் தொகுதி கொண்ட பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம், தமிழ், சிங்கள மக்கள் ஒருவரோடொருவர் பகைமையுறாது, ஒருவரோ டொருவர் ஒற்றுமையாக அன்பாகப் பழகிப் பிரிந்தனர் என்றால் அவருக்கிருந்த இந்தத் தத்துவமே காரணமாகும். அதுமாத்திரமன்று; குமணை, பாணமை, லகுகல, ஹுலாநுங்கை போன்ற மிகப் பின்தங்கிய பிரதேசத்தில் வாழ்ந்த சிங்கள மக்கள் படும் கஷ்டங்களை தன் தொகுதியில் வாழ்ந்த முஸ்லிம், தமிழ் மக்களுக்கு எடுத் துக் கூறியும், முஸ்லிம் தமிழ் மக்களிடையே இருந்து வந்த, இருக்க வேண்டிய நல்லுறவை வரலாற்று ரீதியாக வற்புறுத்தி விளக்கி வந்தபோதும் அப்துல் மஜீதின் மனதில் மனித நேயம் ஆழமாகப் பதிய வந்ததில் எவ்வித வியப்புமில்லை.

அப்துல் மஜீட் அவர்களின் முப்பத்திரெண்டு வருட அரசியல் வாழ்க் கையை பின்னோக்கிப் பார்க்கின்றவர்கள் மிக இலகுவாக கண்டு கொள்ளத்தக்க விடயம் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய தொகுதி மக்களை அரசியல் ரீதியாகப் பிரித்து ஆள முற்பட்டமையாகும். தான் பிரதிநிதித்துவப் படுத்திய முழுப் பிரதே சமும் ஒன்று என்றும், அதன் பூரண மேம்பாடு மாத்திரமே தன் நோக்கு எனக் கண்டாரேதவிர, தனக்கு வாக்களித்து தன்னோடு இணைந்து செயல்பட்டவர்கள் ஒருசாதி, ஒரு கட்சியெனவும், மற்றவர்கள் அழித்தொழிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் இவர் சாதாரண ஒரு பாராளுமன்ற உறுப்பினன் இன்று கொள்ளுகின்ற மனநிலையை என்றும் வளர்த்ததில்லை.

அரசியல் ரீதியான பிளவு சமுதாய ரீதியான பிளவாக உருமாறக் கூடாது என்ற கருத்தினை மிக ஆளமாக நம்பி வந்திருக்கின்றார். தனக்கு எதிராக நின்று பிரசாரம் செய்தவரையும் தன் தொகுதி வாழ் மகனாக, தன் தம்பியாகக் கண்டாரே தவிர, அவர்களைத் தன் எதிரிகளாக அவர் கண்டுகொள்ள முயலவில்லை. இந்த ஆழ்ந்த தத்துவத்தை தர்க்கத்தை காணமுடியாத அவரது ஆதரவாளர்கள் பலர் இவரை கண்டித்துப் பேசியதைக் கேட்டிருக்கின்றோம். அரசியல் நடாத்தத் தெரியாதவர் இவர் என்றும், இல்லையென்றால் இவர் முகத்தில் காறித்துப்புகிற மாதிரி பேசிய ஒருவரின் மகனுக்கு வேலை எடுத்துக் கொடுப்பாரா, மற்றவர் பயப்படுகிற மாதிரி அவனைப் பழிவாங்கியிருக்க மாட்டாரா? என்றும் அவரை ஏளனமாகப் பேசியுள்ளனர். உண்மையில் அப்துல் மஜீட் அவர்கள் தன் தொகுதி மக்களைக் கண்டு கொண்ட முறை, அம் மக்களை வைத்து அவர் அரசியல் படைக்க முற்பட்ட முறை ஒரு தனித்துவமான அரசியல் பாணியையே எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இவரது அரசியல் நடத்தையை, போக்கை கிழக்கிலங்கை அரசியல் வானில் உதயமாகி பிராகாசித்து வந்த பல அரசியல் பிரமுகர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையின்போது இம்மனிதனின் உயர்ந்த பண்பாட்டை, இலட்சியங் களை நாம் காண வருகின்றோம்.

தான் பிரதிநிதிப் படுத்திய பிரதேசம் மிகவும் பின்தங்கிய பிரதேசம் எனக் கண்டுகொண்டபோது தன் பிராந்திய நிலமைக்கு ஏற்றதொன்றாக தன் அரசியலை மேற்கொண்டது அவரது அரசியல் வாழ்க்கையில் காணத்தக்க அடுத்த முக்கிய பண்பாகும். பழமை போற்றும் சமூதாய அமைப்பில் வாழ்ந்த இவர், அங்கு வாழ்ந்த விவசாய மக்களில் தன்னையும் ஒருவனாகவே கணித்துக் கொள்ளலானார். அம்மக்கள் உள்ளக்கிடக்கைகளையும், நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகளையும் நன்கு அறிந்து கொள்ள வந்தஇவர், தான் பேணும் போற்றும் அரசியல் அவர்கள் வாழ்க்கைப் பிரச்சினைக்கு மேற்பட்டதாக இருக்க முடியும் என ஒருபோதும் எண்ணவில்லை.

நாடளாவியுள்ள முஸ்லிம் மக்கள் ஒவ்வொருவரினதும் தலைவன் தான் என்று எண்ணாது, தான் பிறந்து வளர்ந்த சம்மாந்துறை மக்களில் தானும் ஒருவன் என்றும், பின்தங்கிய அக்கரைப்பற்று, பொத்துவில் பகுதி மக்களின் பிரதிநிதியே தான் என்றும் தன்னைக் கண்டு கொண்டாரே தவிர. கொழும்புவாழ் முஸ்லிம் மக்கள் தலை வர்களுடன் தன்னைச் சமப்படுத்தி தேசிய ரீதியில் அரசியல் நடாத்த இவர் முற்பட வில்லை. தேசிய ரீதியில் இருந்த அமைப்புக்களோடு, தலைமைத்துவத்தோடு இவருக்கு நெருக்கம் இல்லாது போனதற்கும் தன் அரசியலையும், தன் பிரச்சினைகளையும் பிரதேச ரீதியாக இவர் காணவந்ததே காரணமாகும். தேசிய ரீதியில் உருவான அரசியல் தன் பிராந்திய மக்களுக்கு விமோசனம் தரும் என இவர் நம்பிக்கை வைத்திருந்தால் ஒரு வேளை இவர் இவ்வாறு நடக்க முற்பட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு அவர் அன்றும் இன்றும் எண்ணவில்லை. கல்வி, பொருளாதாரம், சமூக ஒழுங்கு, பழக்க வழக்கம் என்பவற்றில் தன் பிரதேச மக்கள் போதுமான முன்னேற்றம் காணாதவரை தேசிய ரீதியில் தன் மக்களை சக்திப்படுத்த இயலாது எனக் கண்டு கொண்ட இவர் தன் பிரதேச மக்களது சீரிய முன்னேற்றத்துக்கு நிர்வாக ரீதியான தீர்வையே, ஈடுபாடுகளையே பெருமளவு விரும்பினார்.

அரசின் சமூகப் பொருளாதாரத் திட்டங்களை தன் பிரதேசத்தில் துரித மாகக் கொண்டுவர முடியுமானால் அப்பணிகளைச், சேவைகளை முறிவில்லாது ஒழுங்காக இயங்கச் செய்ய முடியுமானால், அதுவே அவர்களது முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என எண்ணலானார். இதனால் அரசாங்க ஊழியர்கள், நிர்வாகக் காரியதரிசிகள், அரசாங்க அதிபர்கள் மிகவும் பேணிப் போற்றப்படவேண்டி

யவர்கள் என்பதை மிகத்திடமாக நம்பிவந்தார். அவர்களுடனான உறவை நெருக்கத்தை தொடர்பை பெருக்கிக் கொள்வதனால் தன் பிரதேசத்திற்கு ஏற்படக் கூடிய நன்மையையே கருத்திற் கொண்டார். அப்துல் மஜீது அவர்கள் பாராளுமன்றக் கட்டிட வாயிலில் கழித்த நேரத்தை விடக் கூடுதலான நேரத்தை அம்பாரைக் கச்சேரியில் இடம் பெற்ற கூட்டங்களில் கழித்ததற்கும், பாராளுமன்ற மந்திரிகள், பாராளுமன்ற சகபாடிகளுடனான நேயத்திலும் பன்மடங்கு நேயத்தை பிரதேச ரீதியில் பொறுப்புப் பெற்றிருந்த நிர்வாகிகளுடன் இவர் கொண்டிருந்ததற்கும் இதுவே காரணமாகும். இவரது பாராளுமன்ற விவாதக் குறிப்புக்களை வாசிக்கின்றவர்கள் இவரது இந்த நிர்வாக அணுகு முறையை இலகுவாகப் புரிந்து கொள்வர். ஏனெனில் இங்கு பிரதேச ரீதியிலான உத்தியோகஸ்த்தர்கள் படும் கஸ்டங்களையும், விசேடமாக அம்பாரை அரசாங்க அதிபர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை துல்லியமாகவும், புள்ளி விபரங்களுடனும் அழகாகப் பேசிமுடிப்பார்.

இவரின் பாராளுமன்ற விவாதக் குறிப்புகளில் மாவட்ட அபிவிருத்திப் பணியில் ஏற்பட்டுள்ள தங்குதடைகளையும், அபிவிருத்திக்குத் தேவையான நிர்வாகப் பொறுப்புகளையும், அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய இடங்களையும் புள்ளிவிபரத்துடன் நயம்பட விளக்கிவைப்பார். உதாரணத்திற்கு இவரது 12.09.1969ம் திகதியப் பாராளுமன்ற விவாதத்தை அவதானிக்கலாம்; அம்பாறை மாவட்டத்தில் 115 மில்கள் உண்டு, 185 MPCS உண்டு, 60,000 ஏக்கர் நிலமுண்டு ஆனால் எத்தனை கமநல உத்தியோகஸ்த்தர்கள் இம்மாவட்டத்தில் பணிபுரிகின்றார்கள்? குருநாகல் மாவட்டத்துக்குச் சமமான அளவு நெல்' உற்பத்தியாகுமிடம் அம்பாறை மாவட்டம். ஆனால் IR 8 நெல் ஏன் இன்னும் வழங்கப்படவில்லை? கால்நடைகள் ஏராளம் இப்பிரதேசத்தில் உண்டு ஆனால் பால் பண்ணை ஒன்று ஏன் இங்கு சீரிய முறையில் செயற்பட வாய்ப்பளிக்கப்படவில்லை? இவ்வாறு அவர் பேசியது தனது பிரதேசத்தின் முன்னேற்றத்தை, நிர்வாக ஒழுங்குகளுக்கு ஊடாக ஏற்படுத்த விழைந்ததையே காட்டி நிற்கின்றது. அரசியலில் பகைமையைக் குறைத்து, நிர்வாக கருமங்களிலேயே மக்கள் கவனம் வைக்க இவரது இந்த அணுகுமுறை வழிவகுத்திருக்கின்றது.

சுயமான ஒழுங்குகள் இல்லாத நிலையில், அவற்றை தூக்கும் சக்தியும் திறனும் அற்ற சூழ் நிலையில், பின் தங்கிய சூழலில், தங்கள் அரசியல் பிரமுகர்களையே மக்கள் தங்கள் எல்லாப் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வாக எண்ணி விடுகின்றனர். இந் நிலையில் குடும்பப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, வேலைவாய்ப்புப் பிரச்சினை, வேலிப் பிரச்சினை, வரம்புப் பிரச்சினை, வாய்க்கால் பிரச்சினை என எண்ணற்ற பிரச்சினைகளை மக்கள் தினமும் கொண்டு வந்து இவரது ஆலோசனையை, சம்மதத்தை, சில நேரம் வெறும் அபிப்பிராயத்தைப் பெறமுயல்வர். எம்.பி. வந்துவிட்டார் என்றால் அவரைச் சந்திக்க ஊரே திரண்டு விடும். ஈ போல் மக்கள் அவரை மொய்த்து அவர்களது எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரே நொடியில் உடன் தீர்வு வேண்டுமென்பர். இந்த நேரங்களில் எவ்வளவு பொறுமையும், அடக்கமும் இவரிடம் இருக்க வேண்டும் என்பதை உய்த்தறிந்து கொள்ளலாம். ஏனெனில் மனிதாபிமான முறையில் நோக்கப் படத்தக்கவை இவை என்றாலும், அரசியல் ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் உடன் தீர்வுக்கு உட்படுத்தமுடியாத பிரச்சினைகளாகவே இவை காணப்படும்.

இந்நேரங்களில் இவர் ஏசிப் பேசிப் பலரை கடிந்து விடுவார். ஆயினும் மக்கள் அதனைப் பொருட்படுத்துவதில்லை. ''எம்பி பேசிற்றார் என்றால் காரியம் முடிந்த மாதிரித்தான். நாளையே மீண்டும் விசாரித்து ஆவனை செய்வார்'' இவ்வாறு இவர் சுமுகமாகத் தீர்த்து வைத்தவை பல; முடித்து வைத்தவை பல; கோடு

கச்சேரி செல்லாது ஒன்று பட்ட குடும்பம், கல்யாணம் பல. வழக்கறிஞரைப்போல் நீதிக்குப் போராடு என்று மக்களைப் பிரித்து வைத்ததில்லை சமரசத்தை, இணக்கத்தை, ஒற்றுமையையே இவர் சமூகவியலாளனாக நின்று வற்புறுத்தியிருக் கிறார். அப்துல் மஜீது அவர்கள் தன் பிரதேச மக்கள் பிரச்சினையைக் கண்டு கொண்ட கோணம் நேர்மையானது, சிறப்பானது, பொருளுள்ளது. தன் கிராமத் தொண்டையே தன் தேசத் தொண்டாக இவர் கண்டிருப்பது இவரது அரசியல் வாழ்க்கையில் பாராட்டத்தக்க அம்சமாகும்.

மேலும் சில நிகழ்வுகள் சம்பவங்கள் இம்மனிதரின் அரசியல் அணுகு முறையினை, சிறப்பம்சத்தை, அடிப்படைக் கோணத்தை எமக்கு வெளிக் கொண்டு வருகின்றன. குறுகிய நோக்குக் கொண்டு செயல்பட வந்த மனிதர் இவர் அல்லர் என்பதையும், நீண்டகாலப் பிரதேச நலன்களையே அரசியல் நோக்காகக் கொண்ட வர் இவர் என்பதையும், தன் சொந்த நலன் அரசியலில் கலக்காமல் பார்த்துக் கொண்டவர் என்பதையும் இச்சம்பவங்கள் எமக்குக் காட்டித் தருகின்றன. இவற்றுள் சம்மாந்துறை குடிநீர் வசதித்திட்டம் பலரது கவனத்தையும் ஈர்த்த சமீபகால நிகழ்வாகும். இந்தத் திட்டம், பலமுறை பின் போடப்பட்டு வந்த விபரத்தை மக்கள் நன்கு அறிவர். ஆனால் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட சூழ்நிலையையும், பின் போடப்பட்டு வந்த காரணத்தையும் மக்கள் அறியார். உண்மையில் அப்துல் மஜீட் அவர்கள் தன் பேரையும் புகழையும் மாத்திரமே கருத்திற் கொண்டிருந்தால், இக்குடிநீர்த் திட்டம் நேரகாலத்துடன் நிறைவுபட்டு பலரது பாராட்டுக்களையும், புகழாரங்களையும் பெற்றிருக்கும். ஆனால் அவ்வாறு அத்திட்டம் நடந்தேறா மல் போனதற்கு மக்கள் நலனை, சுகத்தை அவர் பெரிது படுத்தியதே காரணமாகும். ஏனெனில் வழங்கப்படவிருந்த நீர் குடிப்பதற்கு உகந்த நீரன்று என்றும், அது நஞ்சூட்டப்பட்ட நீருக்குச் சமன் என்றும் அவர் அறிய வந்தபோதும், அவசர அவசரமாக அத்திட்டத்தை இடைநிறுத்தினார்.

இதற்கு மாற்றுத்திட்டம் ஒன்று வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். காலவரையின்றி இத்திட்டம் பின்போடப்பட்டு குடிநீர் வழங்கல் என்பது என்றும் வெற்றிபெற முடியாத நிலை உருவாகிற்று. தான் எடுத்த தீர்மானம் சரியானது, நேர்மையானது என்றே தன் ஆதரவாளர்களுக்குக் கூறிவந்தார். தான் தோற்றுப் போனாலும், தன் மக்கள் நஞ்சூட்டப்பட்ட நீரைப் பருகுவதற்கு ஒரு போதும் நான் அனுமதியேன் என்றே கூறி வந்தார். அவர் அரசியல் லாபம் தேடுகின்ற மனிதராக இருந்திருந்தால், குறுகிய நேரத்தில் அரசியல் படைக்க முற்பட்டிருந்தால், சம்மாந்துறை மக்கள் நீர் என்ற பெயரில் இன்று நஞ்சு கலந்த நீரை அருந்தி நோய் வாய்ப் பட்டிருப்பர், அல்லது எதிர்காலங்களில் நோய்களுக்கு உள்ளாகக் கூடியவர்களாக ஆகியிருப்பர்.

இவ்வாறு இவர் வாழ்க்கையில் காட்டத்தக்க சம்பவங்கள் பலவுண்டு. காணி விவசாய மந்திரியாக இருந்தபோது, கரும்புச் செய்கைக்குச் சுவீகரிக்கப்பட்ட விளை நிலத்தை முஸ்லிம், தமிழ் மக்களுக்கு அவர் மீண்டும் கொடுத்தபோது, அவர் தன் மந்திரிப்பதவியையே இழக்க வரலானார். இதனைப்பலர் அறியார். அம்பாறை மாவட்ட முஸ்லிம் தமிழ் மக்கள் நலனிலேயே அவர் கண்ணும் கருத்து மாக இருந்து வந்திருக்கிறார். ஆதலால் அவருக்குப் பொறுப்புள்ள எந்தப் பதவி வழங்கினாலும், அம்பாறை மாவட்டத்தில் வாழ்ந்த பேரின மக்களுக்கு இது குந்தகம் விளைவிக்கும் என இவர்பற்றி பௌத்த குருமார் மேலிடத்துக்கு முறைப்பாடு செய்கின்ற நிலை அவருக்கு ஏற்பட்டது. என் மக்கள் வாழ்ந்தால், வளமுற்றால் அதுவே திருப்தியென்பார். மேலும் சுயேச்சை உறுப்பினராக இருந்தபோது பல லட்சம் ரூபாய்க்கு இவரது வாக்கு பத்திரிகை மசோதா சம்பந்தமாக விலை பேசப்

பட்டபோது, அவர் மறுத்து விட்டார் என்ற விபரத்தை வெளிநாட்டிலுள்ள ஒரு தூதுவர் அந்நாட்டில் என்னிடம் சொன்னபோது அறிவு பெற்றேன். இவை யாவும் அவர் வகித்த பதவிக்கு அவர் அளித்த மதிப்பை கௌரவத்தை எமக்குக் காட்டி நிற்கிறது.

இவரது அரசியல் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மற்றுமொரு இயல்பாக அவருக்கிருந்த சுயமான சிந்தனையை, போக்கை அதாவது தான் கண்ட உண்மையை யதார்த்தத்தை தன் அரசியல் லாபத்திற்காக மூடி மறைக்க முற்படாத தன்மையைக் குறிப்பிடுதல் வேண்டும். சுயேச்சை வேட்பாளராக மூன்று முறை தான் போட்டியிட்ட தற்கு தனக்கு அது வழங்கிய சுதந்திரத்தைக் காரணமாகக் காட்டுவார். தன் சொந்தச் செல்வாக்கில் வெற்றிபெற முடியுமானால் ஆட்சிக்கு வரும் எந்தக் கட்சியுடனும் பேரம் பேசி தன் பிரதேச மக்கள் நலனை காக்க முடியும் என்பார். இந்த நிலையிலிருந்து அவர் என்றும் விலகவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த போதும் தன் பிரதேச நலனுக்கு ஏற்ற கொள்கையையே அவர் பிரஸ்த்தாபித்து வெற்றிகண்டு வந்திருக்கிறார். கட்சியின் மேலிடத்தில் இருப்பவர்களுக்கு ஏற்ற, அவர்களுக்குப் பிடித்தமான போக்கைத் தான் பின்பற்றி, தன் பிரதேசம் அழிந்தாலும் தான் வளந்துபோக வேண்டும் என்ற போக்கை அவர் கைக்கொள்ளவில்லை. அவரது இந்தச் சுயமான போக்கு அவரது அரசியலுக்கு ஒரு ஸ்திரத்தன்மையை ஒரு உறுதிப் பாட்டை வழங்கி வந்திருக்கிறது. இன்று ஒரு மேடையிலும், நாளை ஒரு மேடை யிலும், இன்று ஒரு கட்சியில் நாளை மறுகட்சியில் என்று அலைந்து திரிந்து தனக்கென ஒரு கூட்டத்தை, வரவேற்பை அடுக்கு மொழிகளால், அலங்கார வார்த்தைகளால் ஆக்கமுற்படாது தான் கண்ட கருத்துக்கு ஏற்ப தன் நிலையை என்றும் உறுதிப்படுத்தி நேரான ஒரு பாதையில் என்றும் முன்னேறிச் சென்றது இவரது அரசியல் கருத்துக்கள், சிந்தனையின் உறுதிப்பாட்டையே காட்டி நிற்கிறது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் காட்டிய கோலத்தை அவர் காட்டமுற்படாதது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். தமிழரசுக் கட்சி உறுப்பினராக நின்று மேடையேறி பின் கீழிறங்கி மறு கருத்துக் கூறிய இழிவு நிலை இவருக்கு என்றும் ஏற்பட்டதில்லை. தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர் போட்டியிட்டபோதும், தமிழ் மக்கள் வாக்குகளை, தம்பிலுவில், திருக் கோயில், வீரமுனை, போன்ற பிரதேசங்களில் அதிக அளவு பெற்று வெற்றி பெற்ற முஸ்லிம் பிரமுகர் இவர். திருக்கோயில், தம்பிலுவில், வீரமுனைப் பிரதேச தமிழ்ப் பெரியார்கள் அப்துல் மஜீது அவர்களின் மேடையேறிய தமிழ் மக்கள் வாக்குகளை அவருக்குப் பெற்றுக் கொடுத்தனர் என்றால் அவருக்கிருந்த சுயமான போக்குகளே விளைந்த அரசியல் நாணயத்தையே அது எமக்கு எடுத்துக் கூறும். தான் நம்பிய தர்மத்தை அரசியலாக நடைமுறைப்படுத்த வந்தபோது, தனது தொகுதியில் உள்ள தமிழ் மக்களை தனியாகப் பிரதி நிதித்துவப் படுத்த ஒரு தமிழ் தொகுதி உருவாக் கப்படவேண்டும் என முதல் குரல் எழுப்பினார். 1970ல் இரட்டைத் தொகுதியாக ஆக்கப்பட்டு தமிழ் பிரதிநிதியாக திரு கனகரத்தினம் இத்தொகுதிக்குத் தேர்தல் மூலம் தெரிவாகலானார்.

இனவெறி இப்பிரதேசத்தில் அண்மையில் தலை விரித்தாடியபோது நிலை தளராது அவர் கடைப்பிடித்த நிதானம், பக்கம் சாராது நடுநிலமை வகுத்துக் கூறிய கருத்துக்களும் இவரது சுயமான சிந்தனைப் போக்கையே எமக்குக் காட்டித் தருகின்றது. சாதாரண ஒரு பாராளுமன்ற உறுப்பினர் போல் அரசியல் நடாத்த முற்பட்டு வந்தவர்களோடு சேர்ந்து இனத்தீயை இவரும் மூட்டியிருக்கலாம். அத்தீயில் சம்மாந்துறை என்றோ அழிந்து போயிருக்கும். இவரது நிதானமும் அடக்கமும் சுயமான சிந்தனைப் போக்கும் சம்மாந்துறை மக்களை சமாதானப் பிரியர்களாகவே

உலகுக்கு எடுத்துக் காட்டியது. கல்முனை, மாளிகைக்காடு, பாலமுனை, அக்கரைப் பற்று போன்ற பிரதேசங்களில் இனப்பிரச்சினை உக்கிரமாக வளர்ந்தபோது, இவர் வாழ்ந்து பழகிய இடங்களில் அமைதியும் ஒற்றுமையும் நிலவி வந்திருக்கிறது. ''எங்கள் மதம் சமாதானத்தையே விரும்புகின்றது; அது புனிதமானது, அதனை அரசியலாக்கி இழிவு படுத்தாதீர்கள்'' என்றபோது இஸ்லாம் தெரியாத அரசியல் வாதி மயக்கத்தில் பேசுகின்றார் என்று எள்ளி நகையாடியவர்கள் உண்டு. அவர் விரும்பியிருந்தால் மக்கள் வாக்குகளுக்காக இஸ்லாத்தை முழங்கியிருக்கலாம், அவர் விரும்பியிருந்தால் இனத்தீயை மூட்டியிருக்கலாம், ஆயத்தப்படுங்கள் என்று போர் முழக்கம் முழங்கியிருக்கலாம், பல நூறு இளஞ்சிறார்களையும், பல லட்ச ரூபாப் பெறுமதியரன சொத்துக்களையும் மக்கள் இழக்க வளிவகுத்திருக்கலாம். இவ்வாறில்லா மல் மதிநுட்பமாக நடந்து கொண்ட இம்மனிதனின் அரசியல் யதார்த்தம் பாராட்டப் பட வேண்டிய தொன்று என்பதில் ஐயமில்லை.

சமய வளர்ச்சி என்ற போர்வையில் அரசியலில் கொள்ளைலாபம் தேட முற்பட்ட அமைப்புக்களை அழித்தொழிக்க முற்பட்ட தன் ஆதரவாளர்களை அடக்கிவைத்த மனிதர் இவர். அவர்கள்தான் வளராவிட்டாலும், சமயமாவது வளரும் என்று தடுத்து விடுவார். ''இதில் என்ன விசேசம் என்றால், நான் யாருக்கு அதிகஅளவு உதவுகிறேனோ அவனே என்னைப் பகைக்கின்றான். ஆதலால் நான் செய்தவைகளை அவன் அறிவான், நீங்கள் ஏதும் செய்ய வேண்டாம்'' என்பார். ''இந்த ஜென்மத்தில் என் பிள்ளைகளோ, என் குடும்பத்தினரோ அரசியலுக்கு வர அனுமதியேன்'' என்பார். ''நாணயமான மனிதன் அரசியலுக்கு வரக்கூடாது'' என்பார். ''காசு போட்டு காசு எடுக்கின்ற ஒன்றாக அரசியலை எம் மக்களில் சிலர் ஆக்கிவிட்டார்கள். இதனால் பொய் புரட்டு, தான் தோன்றித்தனம், கொலை, கொள்ளை மலிந்த இடமாக அரசியல் இனி மாறிவிடும் இதனால் நல்லவன் நிலை கொள்ள இடமில்லை'' என்பார். இக்கூற்றுக்களைக் கேட்கின்ற போது நேர்மையுள்ள, சுயசிந்தனைமிக்க ஒரு நாணயமான மனிதன் பேசுகின்றான் என்ற உணர்வே மனதைத் தொடும் மனித நேயம் மிக்கவர், பண்புள்ளவர், தர்மம் தார்மீகம் மிக்கவர். இன ரீதியான அணுகு முறை அற்றவர் என்றெல்லாம் கூறும்போது முஸ்லிம் மக்கள் நலனைத் தாரை வாத்துக் கொடுத்து சூனியமாக நின்றவர் இவர் என நாம் எண்ணக் கூடாது.

பேரினவாத, இனவாதக் கட்சிகளின் நிலைப்பாடு எது என திட்ட வட்டமாக நாம் கூறமுடியாத நிலையிலிருக்கின்றோம். ஆனால் அப்துல் மஜீதைப் பொறுத்தவரை கிழக்கிலங்கையில் வாழும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் கிழக்கு மாகாணத்தை தங்களுக்குரிய தனிப் பிரதேசமாகக்கண்டு, அதனைத் தனிப்படுத்தி ஆட்சி புரிய முற்பட்டாலே அவர்கள் மீண்டும் சுபீட்சம் அடைவர் என்ற கருத்தை மிகத் திட்டவட்டமாகக் கொண்டுள்ளார். இவ்விரு இனங்களும் இப்பிரதேசத்தில் நீண்ட காலம் சேர்ந்து வாழ்ந்த இனங்களாகும். இவர்களுக் கிடையேயுள்ள பற்று, பாசத்தை, நல்லுறவை பிரிக்காதவரை வேறு எந்தச் சக்தியும் இப்பிரதேசத்துக்குள் ஆதிக்கம் செலுத்தவியலாது என்ற கருத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். வடக்கு-கிழக்கு தனியொரு பிரதேசமாக இணைக்கப் படுமேயானால் கிழக்கிலங்கைத் தமிழ் மகன் அடிமையாக்கப்பட்டு விடுவான். கிழக்கிலான முக்குவத் தமிழ் மக்களை வடமாகாண துமிலர்களின் ஆதிக்க வெறியிலிருந்து மீட்டுக் கொடுத் தவர்கள் முஸ்லிம்களே. ''சத்துருக் கொண்டான்'' வரை துமிலரை முக்குவத் தமிழரும் கிழக்கிலங்கை முஸ்லிம்களும் துரத்திச் சென்று விரட்டியடித்தனர் என்பது வரலாறு. மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராக அப்துல் மஜீட் அவர்கள் இருந்தபோது, பல்வேறு தமிழ்க் கிராம மக்கள் இக்கருத்தை அவரிடம் சொல்லக்கேட்டு அவர் புளகாங்கிதம் அடைந்தாராம்.

எனவே இந்த நூற்றாண்டின், சமீபகாலத்தில் கிழக்கிலங்கைத் தமிழ் மக்களைப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு முஸ்லிம் மக்களுக்குண்டு என்று கூறுகின்றார். விபுலானந்த அடிகள் கைபிடித்து தமிழ் எழுதக் கற்றுக் கொண்ட நான், அடிகளவர்களால் ஆக்குவிக்கப்பட்ட சிவானந்தாக் கல்லூரியில் எனது ஆரம்பக் கல்வியைக் கற்று வந்த நான், தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகளை என்றும் ஆதரித்து வந்திருக்கிறேன். ஆயினும் தமிழ் ஏகாதிபத்திய வாதிகள் தமிழரசுக்கட்சி என்ற போர்வையில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் எதிராகச் செயல்பட்டு பகைமையூட்ட முற்பட்டபோது மிகத் தெளிவாகக் குரல் கொடுத்திருக்கின்றேன். தமிழரசுக்கட்சி என்பது தமிழ் பேசும் இனங்களுக்குப் பொதுவானது; அவர்களின் நலனை நோக்காகக் கொண்டுள்ளது என்ற கருத்தை அவர் ஒரு போதும் ஏற்றதில்லை. தமிழரசுக்கட்சி என்பது வடமாகணத் தமிழர்களது நலன் காத்தது என்றே கூறிவந்திருக்கிறார். தேவநாயகம் முஸ்லிங்களது வாக்குகளுடன் கற்குடாவில் வெற்றி பெற்றார். பொத்துவில் தொகுதியில் தமிழர்களது வாக்குகளுடன் முஸ்லிமாகிய நான் வெற்றி பெற்றேன். தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையேயுள்ள நெருக்கத்தை இது காட்டுகிறது. ஆனால் தமிழரசுக்கட்சி இதனை விரும்பவில்லை. மேலும் தமிழ்-முஸ்லிம்களுக் கிடையிலான நல்லுறவை இக்கட்சி எவ்வாறு கெடுக்க வந்தது என்பதை 1968 ஜுன் 13 ஆம் திகதி பேசிய பாராளுமன்ற விவாதத்தில் மிகப் பகிரங்கமாகவே காட்டிவைத்தார். கிழக்கிலங்கை முஸ்லிம் தலைவர்கள் பலர் அதிகாரம் வேண்டும் என்ற மோகத்தில் ''தமிழ் கூறும் நல்லுலகம்'' என்றும், ''நாமெல்லாம் தமிழர்களே'' என்றும் தமிழர்களையும், முஸ்லிம்களையும் ஏமாற்றித் தமிழரசுக்கட்சிக் கூட்டங்களில் சிறு பிள்ளைத்தனமாக பேசவந்தபோது அப்துல் மஜீது அவர்கள் எவ்வளவு தீர்க்க தரிசனமாக தூரதிருஷ்டிப் பார்வையோடு கிழக்கிலங்கை முஸ்லிம்கள் நிலையை எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

அண்மைக் காலத்து ஏகாதிபத்திய வாதிகள் கிழக்கிலங்கை முஸ்லிம் மக்கள் மதம்மாறிய தமிழர்கள் என்று B B C வழியாச் சொல்ல வந்த போதும், சிங்கள மக்களில் சிலர் தீகவாப்பியப் பகுதி நிலம் சிங்கள மக்கள் நிலமே என்றும் முஸ்லிம் மக்கள் நலனுக்கு எதிராக வம்பு வார்த்தை பேசவந்த போதும் அப்துல் மஜீது அவர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்கள் நுட்பமாகவும், ஆய்வு ரீதியாகவும் வழங்கப்பட்டதால் இக்கருத்துக்களும் கவனிக்கத்தக்கவையாகும். சிங்கள மக்கள் கூறுமாப்போல் அவர்கள் நிலத்தை முஸ்லிம் மக்கள் சூறயாடவில்லை. போர்த்துக்கேயருக்குப் பயந்த சிங்கள மக்கள் மலைப் பகுதிகளில் பாதுகாப்பாக குடியமர வந்தபோது, கண்டியில் தஞ்சம் புகுந்த முஸ்லிம்களைக் கண்டி மன்னன் கிழக்குப் பிரதேசத்தில் குடியமர்த்த வந்தது ஊரறிந்த விவகாரம். அவ்வாறு வாழ்ந்த இந்த மக்களில் பாதிப்போர் தொழுநோய், மண்டைக் காய்ச்சல், மலேரியா, சொறி, சிரங்கு என்பவற்றிற்கு ஆளாகி அல்லல்பட்டு மாண்டு போக, மீதிப்பேர் காடுவெட்டி, களனியாக்கி, பயிர் வளர்த்து இப்பிரதேசத்தை உருவாக்கினர். இந்நிலையில் ஏறத்தாழ ஐநூறு ஆண்டுகளுக்குப் பின்பு, இப்பிரதேசம்பற்றி இவ்வாறு கூறுவதும், உரிமை கோருவதும் எந்த அளவு நியாயமாகும் என்றார்.

முஸ்லிம் மக்கள் மதம்மாறிய தமிழர்கள் அல்லர். கண்டி மன்னனுக்குச் சொந்தமான நிலப்பரப்பில் அம்மன்னனால் குடியமர்த்தப்பட்ட முஸ்லிம்களின் வழித்தோன்றல்களே கிழக்கிலங்கையில் வாழும் பெரும்பகுதி முஸ்லிம் மக்களாகும். என்று பாராளுமன்றத்தில் இவர் எழுப்பிய குரல் B B C நிருபரின் அறியாமையை அம்பலப் படுத்திற்று. முஸ்லிம்களது நலனுக்கு குந்தகம் விளைவிக்கின்ற நடைமுறைகளை, கருத்துப் போக்குகளை அவர் மிக்க கடுமையாகக் கண்டித்து வந்திருக்கிறார். அக் கண்டனங்களை அவர் தெரிவித்த போதும், அது பற்றிப் பேசியபோதும் மிக அடக்க ஒடுக்கமாக, பண்புள்ள மனிதனாக பலரும் ஏற்றுக் கொள்ளும் வகையில்

அவற்றை அவர் வெளிப்படுத்த வந்தது அவரது ஆழ்ந்த அறிவிற்கும், மனிதாபிமான பண்பு கொண்ட ஆளுமை சுபாவத்திற்கும் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

அப்துல் மஜீட் அவர்களது அரசியல் வாழ்க்கை இத்தகைய அபூர்வமான மனித நேயம் மிக்கப் பண்புகளோடு உறுதியான கொள்கை, கோட்பாடு என்ப வற்றையும் உள்ளடக்கி மிளிர்ந்தமைக்கான காரணத்தைக் கண்டு கொள்வது அவ்வளவு கடினமாகா. அரசியலுக்கென்றே பிறந்தவர் இவர் என்று கூடக் கூறிவிடலாம். ஏனெனில் அவர் பிறந்த குடும்பம், அவர் பெற்ற கல்வி, சமூகத்தில் அவருக்கிருந்த கௌரவம், அந்தஸ்து, மதிப்பு மரியாதை என்பவற்றுடன் அவருக்குப் பரம்பரை யாகத் திரண்டு வந்த சொத்து செல்வம் என்பனவும் அவருக்குத் தொண்டாட்டிற்று. அவருக்கு வாய்த்த இந்தக் குடும்பப் பின்னணியை அவர் பெறாமல் போயிருந்தால், அவர் வெளிப் படுத்திய இந்த அபூர்வமான பண்புகளை வெளிக் கொணராமலே போயிருக்கலாம்.

1952ல் அவரது தாய் மாமன் மர்ஹூம் ஏ.எம்.மேர்ஸா அவர்கள் கல்முனைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவரது பாட்டன் கே.எம். அப்துல் மஜீது வன்னியனார் மட்டக்களப்பு (தென்) பிராந்தியத்திற்கான தேர்தலில் போட்டியிட்டு 1936ல் S. O. கனகரத்தினத்துக்குத் தோற்றுப் போனார். இவை சாதாரண நிகழ்வுகள் அல்ல. கிழக்கிலங்கை அரசியல் களத்தை நன்கு அறிந்து கொள்ள வைத்த நிகழ்வுகள் இவையாகும். அதே நேரம் 1947ல் தனது தந்தை மல்கம்பிட்டி பள்ளி வாசலில் ஏற்பாடு செய்த கூட்டம்' முஸ்லிம் பிரதி நிதித்துவத்தில் உள்ள பிரச்சினைகளை இவருக்குத் தெளிவாக்கியது. இவ்வாறு இவர் ஆரம்பகாலம் தொட்டே இப்பிரதேசத்தில் நடந்தவற்றை உன்னிப்பாக அறிய வந்ததும், அவரது குடும்ப நண்பர்களும், நெருங்கிய குடும்ப உறவினர்களும் முக்கிய அரசியல் பிரமுகர்களாக இங்கு காணப்பட்டதும் அவரது அரசியல் பிரவேசத்தை இலகு படுத்தி அரசியல் வாழ்க்கையை வளமுள்ள ஒன்றாக்கியது. மேலும் 1949ம் ஆண்டு 23 ம் வயதில் பொருளியல் பட்டத்தில் B.A. பட்டத்தைப் பெற்றுக் கொண்ட போது இப்பிரதேச முஸ்லிம் மக்களால் ஆரவாரமாகக் கொண்டாடப்பட்ட மனித ரானார். அப்துல் மஜீட் என்றால் B.A. மஜீது என்றும், B.A. என்றால் M.P. என்றும் மக்கள் பொருள் உணர்ந்தனர். எனவே அவரது குடும்பம், கல்வி, பட்டம் செல்வம் என்பன யாவும் அவரது அரசியல் வாழ்வில் நோக்கத்தக்க அடிப்படைக் காரணிகளாகும்.

ஆயின் அவரது வாழ்க்கை பற்றி எழுதப்படுகின்ற எந்தக்கட்டுரையிலும், அவரது வெற்றிக்குப் பின்னின்ற பண்புகளைக் கோர்வைப்படுத்துகின்ற எந்த முயற் சியிலும் தவறாது இடம்பெறவேண்டிய மற்றுமோர் காரணி உண்டென்றால் அது அவருக்குத் தளபதியாக அரசியலில் உழைத்து வந்த அவரது தம்பி மர்ஹூம் அமீரலியின் செயலாக்கத் திறமையைக் குறித்து நிற்கும். அமீரலி என்பவர் அப்துல் மஜீதின் அடுத்த உருவம், மறுதரம் கண், காது என்று சொல்லும் அளவிற்கு அரசியல் வட்டத்தில் எழுந்த எல்லாப் பிரச்சினைகளுக்கும் எல்லா வழிகளிலும் முகம்கொடுத்து வெற்றி வாகை சூடி வந்த போது, சில நேரங்களில் வென்றவர் அப்துல் மஜீதா, அமீர் அலியா என்று கேட்கத்தோன்றும், அமீரலி அவர்களது உழைப்பும் ஊக்கமும், அரசியலில் அவருக்கிருந்த கூர்மையும், சாணக்கியமும் அப்துல் மஜீதுக்குக் கிடைத்தபோது மன்னனும் மந்திரியும் போல் இவர்கள் இருவரும் இணைந்த போது அரசியல் வெற்றி என்பது இயல்பான, சுலபமான ஒன்று போல் எல்லோருக்கும் தென்படவரலாயிற்று. கிழக்கிலங்கை அரசியலில் இரட்டையர்களாக வந்தனர். அப்துல் மஜீதின் முப்பத்திரெண்டு வருடம் இன்று கொண்டாடப்படும் அரசியல் வெற்றிக்கு அமீரலி ஒரு அடிப்படைக் காரணி என்றால் அது மிகையான கூற்றாகாது.

பின்னிணைப்பு – 01

# நெசவுக் கைத்தொழில் அமைச்சர் கொரவ எம். ஏ. அப்துல் மஜீட் M.P. அவர்களின் அரசியல் வாழ்க்கைப் படிகள் 1954 — 1992.....

| உள்ளூராட்சி மன்ற அரசியல், | பாராளுமன்ற அரசியல் | அமைச்சு, பிரதியமைச்சு, நிர்வாகப் பொறுப்பு. |
|---|---|---|
| | **1989 - இன்றுவரை**<br>தேசியப் பட்டியல் M.P. | **1982 - இன்றுவரை**<br>நெசவுக் கைத்தொழில் அமைச்சர்.<br><br>**1981 - 1989**<br>தபால் தந்தி பிரதி அமைச்சர்<br><br>**1981 - 1982**<br>மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர்.<br><br>**1980 - 1981**<br>மின்சக்தி எரிபொருள் பிரதி அமைச்சர்.<br><br>**1978 - 1980**<br>மின்சக்தி எரிபொருள் நெடுஞ்சாலைப் பிரதி அமைச்சர்.<br><br>**1977 - 1987**<br>காணி விவசாயப் பிரதி அமைச்சர். |
| | **1977-1989**<br>சம்மாந்துறைத் தொகுதி M.P. | |
| | **1970-1977**<br>பொத்துவில் தொகுதி M.P.<br><br>**1965-1970**<br>பொத்துவில் தொகுதி M.P.<br><br>**1960-1964**<br>பொத்துவில் தொகுதி M.P. | |
| **1958** சம்மாந்துறை பட்டின சபைத் தலைவர்<br><br>**1954** சம்மாந்துறை பட்டின சபைத் தலைவர் | **1960 மார்ச்**<br>பொத்துவில் தொகுதி M.P.<br><br>**1956**<br>கல்முனைத் தொகுதி தோல்வி | |

பின்னிணைப்பு 02

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகள் 1956 - 1977

## 1956

58. கல்முனைத் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்: | 27,841 |
| *எம். எஸ். காரியப்பர் ...* | *9,464* |
| *எம். ஏ. அப்துல் மஜீட் ...* | *6,095* |
| *பிரான்ஸிஸ் சேவியர் ...* | *4,242* |

## 1960

59. பொத்துவில் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்: | 18,250 |
| *ஏம். ஏ. அப்துல் மஜீட் ...* | *9,874* |
| *ஏம். ஐ. அப்துல் ஜவாட் ...* | *2,138* |
| *வி. சந்திர சேகர ...* | *1,910* |

## 1960 ஜூலை

95. பொத்துவில் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்: | 18,250 |
| *ஏம். ஏ. அப்துல் மஜீட் ...* | *11,591* |
| *எம். இஸட். கமால் காரியப்பர் ...* | *937* |

## 1965

95. பொத்துவில் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்: | 23,586 |
| *எம். ஏ. அப்துல் மஜீட் ...* | *6,768* |
| *ஏன். தர்மலிங்கம் ...* | *5,296* |
| *எம். எம். முஸ்தபா ...* | *3,217* |
| *யூ. எம். சுலைமாலெவ்வை ...* | *2,911* |
| *பி. ஏ. ஸால் ஜயவர்த்தன ...* | *153* |

## 1970

95. பொத்துவில் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்: | 28,232 |
| *எம். ஏ, அப்துல் மஜீட் ...* | *10,610* |
| *என். தர்மலிங்கம் ...* | *9,335* |
| *எம். ஐ. அப்துல் ஜப்பார் ...* | *5,209* |

## 1977

100. சம்மாந்துறை தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்: | 27,308 |
| *எம். ஏ. அப்துல் மஜீட் ...* | *13,642* |
| *எச். எல். எம். ஹாசிம் ...* | *8,615* |
| *எம். ஐ. அப்துல் ஜப்பார் ...* | *2,605* |

பின்னிணைப்பு - 03

# மட்டக்களப்பு தென்பிராந்திய தேர்தல்கள் 1936 - 1956

முகம்மதலி அகமது அப்துல் மஜீதின் பாட்டனார்
ஜனாப் கே. எம். அப்துல் மஜீது அவர்களின்
தேர்தல் போட்டிப் பெறுபேறு.

## மட்டக்களப்பு தெற்கு

### 1936:

| | | |
|---|---|---|
| தேர்தல் நடந்த திகதி | | 1936 - 02 - 29 |
| மொத்த வாக்குகள் | ... | 57,991 |
| போடப்பட்ட வாக்குகள் | ... | 23,794 |
| *எஸ். ஓ. கனகரத்தினம்* | ... | *14,021* |
| *கே. எம். அப்துல் மஜீட்* | ... | *8,216* |
| *எம். ஏ. எல். காரியப்பர்* | ... | *1,557* |

### 1938:

| | | |
|---|---|---|
| *எஸ். தர்மரத்தினம்* | ... | *14,478* |
| *எம். ஏ. எல். காரியப்பர்* | ... | *11,813* |
| *ஜி. சி. ஸ்டீபன்ஸ்* | ... | *760* |

### 1943:

| | | |
|---|---|---|
| *வி. நல்லையா* | ... | *4,190* |
| *ஏ. என். என். மிகிலார்* | ... | *3,981* |
| *கே. கனக சபை* | ... | *2,438* |
| *சீ. டபள்யூ. கனகசபை* | ... | *2,282* |

## கல்முனைத் தொகுதி

### 1947:

| | | |
|---|---|---|
| மொத்த வாக்குகள் | | 22,753 |
| *எம். எஸ். காரியப்பர்* | ... | *6,886* |
| *கே. கணபதிப்பிள்ளை* | ... | *3,592* |
| *எம். ஏ. ஏல். காரியப்பர்* | ... | *2,978* |

### 1952:

| | | |
|---|---|---|
| *ஏ. எம். மேர்ஸா* | ... | *6,078* |
| *எம். ஏ. எல். காரியப்பர்* | ... | *4,414* |
| *எம். எஸ். காரியப்பர்* | ... | *3,744* |

# வான்மழை போலவந்த வள்ளலே!

அன்றுநாம் வாழ்ந்தகோலம் அழுந்திசீ ரழிந்தகாலம்
கண்டுகண் கலங்கிஎங்கள் கவலைகள் தீர்க்கஎண்ணி
வான்மழை போலவந்த வள்ளல்அப் துல்மஜீதே,
தேன்மழை ஆனவுன்றன் தியாகங்கள் என்னசொல்வோம்!

எங்கிருந் தோவடர்ந்து எங்களை ஆட்சிகொண்ட
பங்கினர் கண்டுநெஞ்சம் பதறினீர், அன்றுஎங்கும்
மங்கள விளக்குஏற்றி மக்களுன் பக்கல்நிற்கச்
சிங்கமாய்ச் சிலிர்த்தவுன்றன் செய்திகள் மறந்துபோமோ!

'பிறந்தமண் பேசவேண்டும் பெருமைகள் பூக்கவேண்டும்
சிறந்தநல் வாழ்வைமக்கள் சிந்தனைக் கெடுக்கவேண்டும்,
நிறைந்தநின் வேட்கைதன்னை நெஞ்சிலே இருத்தியன்று
அறைந்துநீர் சொன்னவார்த்தை அகலுமோ எம்மைவிட்டும்!

ஏழைகள் காணிபெற்று இனியநல் வயல்கள்செய்து
வாழநீர் செய்தசேவை வறுமைகள் போக்கவென்று
ஆளுமை மிக்கவுன்றன் அரசியல் தலைமைதன்னை
காலமும் காணாதெங்கள் கண்களும் கண்களாமோ!

காடுகள் மேடுஆகக் காட்சிகள் தந்தமண்ணை
வீடுகள் வீதிஎன்று விளக்குமின் வெளிச்சமென்று
பாடுகள் பட்டுஎங்கள் பகுதிகள் ஒளிர்வதற்காய்
நாடிநீர் செய்தசேவை நாவெலாம் இனிக்குதன்றோ!

எல்லோரும் கல்விகற்று எழுச்சிகள் பெற்றுவாழக்
கல்விசார் நிறுவனங்கள் கண்டிட வழிகள்செய்த
ஒல்லுமுன் சேவையெங்கும் ஒளிருதே காலமெல்லாம்
வல்லவ நின்னைநெஞ்சம் வாழ்த்தவும் வார்த்தையேது!

ஆயிரக் கணக்கில்கல்வி அறிவினைப் பெறுவதற்கும்
பாயிருள் அகலநம்மோர் பதவிகள் வகிப்பதற்கும்
தாயினும் இனியவுன்றன் தருமங்கள் அல்லோசாலும்
தீயவர் தானுமிந்தத் தியாகத்தை உணர்வதென்றோ!

சிங்களர் தமிழர்முஸ்லிம் சேர்ந்துவாழ் கின்றவோர்நல்
மங்களம் பொங்கும்நாளை மனத்தினில் இருத்திநீவிர்
எங்களின் வாழ்விற்காணும் இனப்பகை அகல்வதற்காய்க்
கங்குலைப் போக்கும்திங்கள் கதிர்களாய் ஒளிர்ந்துநின்றீர்!

அன்னையை இழந்தும்நீவிர் அயர்ந்துபோய் இருந்ததில்லை,
மன்னனாய் வாழ்ந்ததந்தை மறைந்துய்நீர் தளர்ந்ததில்லை,
கண்களாய்த் திகழ்ந்தவுன்றன் கருமவீ ரர்களான
புண்ணிய தம்பிமார்கள் பொன்றியும் சோர்ந்ததில்லை,

ஏழைகள் உயர்ந்துவாழ்வில் எழுச்சிகள் காண்பதற்காய்ப்
'பாழுறும் விதியைமாற்றிப் பசுமைகள் சேர்ப்பதொன்றே
நாளுமென் பணிகள்'ஈதை நச்சுகள் கெடுக்கவந்தால்
வாழுமோ என்றன்நெஞ்சம் ஆறுமோ என்றுநீவிர்,

'என்னுயிர் இருக்குமட்டும் எனதுதாய் தந்தையர்க்குப்
பண்ணிடும் பணியைஎன்றன் பதியினில் கண்ணீர்சிந்தும்
மன்னுயிர் வாழ்வதற்காய் மரணமே நேர்ந்தபோதும்
எண்ணியே செய்வேன்'என்றீர் என்புமே உருகுதன்றோ!

ஏகமாய் எங்கள்வாழ்வில் இழைந்துநீர் கலந்துநாளும்
சோகங்கள் தீர்க்கவந்தீர் சொந்தமும் ஆகிப்போனீர்
வேகங்கள் உன்னைவந்து வெல்லுமோ இனியுமிங்கு
தாகங்கள் தீர்க்குமெங்கள் தலைவனே தருமம்காக்க!

எங்களுக் கொருதலைவன் இனியென்றும் பிறப்பதில்லை
மங்கல்வான் கோழிஆடி மயிலாகப் போவதில்லை
தங்களின் ஆளுமைக்குத் தக்கவோர் தலைவன்வந்து
எங்களை ஆட்சிசெய்ய ஏலுமோ இந்தமண்ணில்!

மாறன் யூ. செயின்

சேவையின் செம்மல்

# கௌரவ எம்.ஏ. அப்துல் மஜீட் அவர்கள்பற்றி

சில

# செவ்விகள் கேட்போம்.....

அமைச்சர் எம்.ஏ. அப்துல் மஜீத் அவர்கள்பற்றிய சில நேரடித் தகவல்களைப் பெற்றுப் பிரசுரிப்பதற்காக இச்சிறப்புமலரின் பிரதம ஆசிரியர் என்ற வகையில் நான்கு முக்கிய பிரமுகர்களை நான் சந்தித்து-என்னால் கேட்கப் பட்ட கேள்விகளும், அவர்களால் அளிக்கப்பட்ட பதில்களையுமே இங்கு செவ்வியாகத் தருகின்றோம்.

கிழக்கு மாகாணத்தின் தென்பகுதித் தம்பிலுவில் கிராமத்தைச் சேர்ந்த, எம்.ஏ. அப்துல் மஜீத் அவர்களுடன் இரண்டு பொதுத்தேர்தல்களில் போட்டியிட்ட இளைப் பாறிய கூட்டுறவுப் பரிசோதகர் திருவாளர் என். தருமலிங்கம் அவர்களுடன்....

**கேள்வி:-** பொத்துவில் தொகுதியில் - தம்பிலுவில், திருக்கோயில் என்பன முக்கிய தமிழ்க்கிராமங்களாகும். இக்கிராம மக்களுக்கு பொத்துவில் தொகுதியின் பாராளுமன்றப் பிரதிநியாகவிருந்த காலத்தில் எம். ஏ. அப்துல் மஜீத் அவர்கள் செய்த சேவைகளைத் தாங்கள் கூறமுடியுமா?

**பதில்:-** தாராளமாக - அப்துல் மஜீத் அவர்கள் தான் ஒரு பிரதிநிதி என்ற வகையில் இத்தமிழ்க் கிராமங்களுக்குப் பல சேவைகளைச் செய்துள்ளார். அப்போது எங்கள் கிராம மக்கள் குடியிருப்புக்குப் போதுமான காணிகள் இல்லாது மிகவும் கஷ்டப்பட்டபோது - இந்த மஜீத் ஐயா அவர்கள்தான் றசூல் முதலாளி என்பவருடைய தோட்டக்காணியை தான் முன்னின்று வாங்கி ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தார். இச்சம்பவத்தை இன்றுங்கூட இப் பகுதி மக்கள் நன்றியுடன் பாராட்டுகின்றனர்.

கல்வித்துறையிலும்கூட இவரது சேவை காலத்தால் அழிக்கமுடியாத தாகும். தம்பிலுவிலில் சாதாரணமாக இயங்கிய ஒரு தமிழ் வித்தியாலயத்தை ஒரு மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தி - இதற்கு விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றையும் பெற்றுக் கொடுத்து - போதுமான ஆசிரியர்களையும் நியமிக்க வழிசெய்து இப்பகுதி மக்களைக் கல்வியின்பால் நாட்டமுறச்செய்த பெருமை இவரையே சாரும்.

இப்பகுதி மக்களின் ஜீவநாடியான கமத்தொழில் விருத்திக்கும் இவர் சேவையாற்றியுள்ளார். திருவாளர்களான ஸி. பி. டி. சில்வா, சிவசிதம்பரம், எல். ஸி. அருட்பிரகாசம் ஆகியோரின் உதவியுடன் கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் குளம் ஒன்றையும் அணைக்கட்டையும் கட்டுவித்து நீர்ப்பாசன வசதியையும் விரிவுபடுத்தியதோடு - புதிதாக விவசாயக் காணிகளையும் பெற்றுக் கொடுத்து இவற்றிக்கான உத்தரவுப் பத்திரங்களும் கிடைக்க வழிசெய்தமை எம்மவரால் மறக்கக் கூடியதல்ல.

**கேள்வி:-** 1970 ஆம் ஆண்டு நிகழ்ந்த பொதுத் தேர்தலில் தாங்களும் பொத்துவில் தொகுதியின் அபேட்சகராக அப்துல் மஜீத் அவர்களுடன் போட்டியிட்டிருந்தீர்கள். இதில் அப்துல் மஜீத் அவர்களே பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இதன்பின் அவருடன் தாங்கள் தொடர்பு கொண்டிருந் தீர்களா? அப்படியானால் உங்களை அவர் எதிர்கொண்ட விதம் எப்படி?

**பதில்:-** 1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அவருடன் நான் போட்டி யிட்டேன். என்றாலும் எங்கள் பகுதிக்கு வரும்போது அவர் என்னை எனது வீட்டுக்குவந்து சந்திக்கத் தவறுவதே இல்லை. என்னோடு பல சந்தர்ப்பங்களில் உண்டுமகிழ்ந்திருக்கிறார். எதிராகப் போட்டியிட்டவன் என் பதையெல்லாம் மறந்து என்னை ஒரு சகோதரனாக - நண்பனாக அவர்கருதி அரவணைத்தார். என்னை அடிக்கடி கொழும்புக்கு வரச்சொல்லி அமைச்சு - காரியாலயங்களுக்கெல்லாம் அழைத்துச் செல்வார். எங்கள் கிராமத்து மக்களின் தேவைகளையெல்லாம் எடுத்து முன்வைப்பார். இவர் என்னை எதிரியாக நினைத்திருந்தால் என்னைப் பலவகையிலும் பழியும் வாங்கியிருக்க முடியும். அந்த உணர்வை அவரிடம் கிஞ்கித்தும் நான் கண்டதில்லை. இவருடன் நெருங்கிப் பழகிப் பல அனுபவங்களைப் பெற்றதனால்தான் எங்கள் பகுதி மக்களுக்கு என்னாலும் சில சேவைகளைச் செய்யக்கூடியதாக இருந்தது. இவற்றையெல்லாம் நான் எண்ணிப் பாக்கும்போது இந்த மனிதருடன் ஏன் போட்டியிட்டேன் என்றெல்லாம் என்னை நான் கேட்டுக் கொள்ளத்தவறு வதில்லை.

**கேள்வி:-** நீண்ட நெடுங்காலமாக ஒன்றாக வாழ்ந்துவந்த எமது தமிழ் முஸ்லிம் களுக்கிடையே அண்மைக்காலமாக இனமுரண்பாடும், மோதல்களும் இடம் பெற்றன. இந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் அப்துல் மஜீத் அவர்களின் பங் களிப்பு எவ்வாறு அமைந்தது என்பதைக் கூறுவீர்களா?

இனமுரண்பாடுகளையும் மோதல்களையும் எப்போதுமே விரும்பாத ஒருவர் அப்துல் மஜீத். இனங்களுக்கிடையே பரஸ்பர நல்லுறவை உருவாக்கு வதில் ஆரம்பகாலத்திலிருந்தே ஈடுபட்டு வந்திருப்பதை நான் அறிவேன். இனவெறிகளைத் தூண்டிவிட்டு குறுகிய அரசியல் இலாபம்தேட அவர் எண்ணியதே இல்லை. இனமுரண்பாடுகள் மோதல்களாக வெடித்தபோதெல்லாம் மிகவும் வேதனை அடைந்தார். கனவனை எதிரிகள் கட்டிவைத்து மனைவியை அவன் கண்முன்னாலேயே மானபங்கப்படுத்தும்போது எத்தன்மையான வேத னையை அக்கணவன் அனுபவிப்பானோ - அதே வேதனையைத்தான் இன மோதல்கள் ஏற்பட்டபோதெல்லாம் அப்துல் மஜீத் அவர்கள் அனுபவித்தார். இந்த இன முரண்பாடுகளைச் சுமுகமாகத் தீர்த்துவைக்கும் ஒரு வாய்ப்பு அப்துல் மஜீத் அவர்களுக்குக் கிடைத்திருந்தால் எமது தமிழ் முஸ்லிம் சமூ கங்கள் ஒற்றுமையாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை அவரால் ஏற்படுத் தியிருக்கவும் முடியும் என்பது எனது நம்பிக்கை.

கிழக்கு மாகாணத்தின் தென்பகுதியின் அக்கரைப்பற்றைச் சேர்ந்த கல்முனைக் கல்விமாவட்ட இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவரும், அக்கரைப்பற்று மத்திய கொத்தணி அதிபருமான ஜனாப் M.A. உதுமாலெவ்வை அவர்களுடன்....

**கேள்வி:-** சம்மாந்துறைத் தொகுதியின் முக்கிய பட்டினங்களில் அக்கரைப்பற்று ஒரு பழம்பெரும் பகுதியாகும். இப்பட்டினத்தின் அபிவிருத்திக்கு அப்துல் மஜீத் எம். பி. அவர்கள் பாராளுமன்றப் பிரதிநிதியாகவிருந்த காலங்களில் ஆற்றிய சேவைகளைச் சுருக்கமாகத் தாங்கள் சொல்வீர்களா?

**பதில்:-** அக்கரைப்பற்றுப் பகுதிமக்களுக்கு அப்துல் மஜீத் அவர்கள் ஆற்றிய சேவைகளைச் சுருக்கமாகச் சொல்வது மிகவும் கஷ்டம். என்றாலும் அவர் செய்ததைச் சொல்லாமலும் இருக்க முடியாது.

அவர் எம்பகுதியில் கல்விக்கு ஆற்றிய தொண்டுகள் அனந்தம். இங்கியங்கும் அல் - முனவ்வறா வித்தியாலயத்தைத் தவிர்ந்த எல்லாவித்தியாலயங்களின் பெளதீக வளர்ச்சிக்குமே அவர் நிறையச் சேவை ஆற்றியுள்ளார். 1979 ஆம் ஆண்டு சாதாரணமாக இயங்கிய மகாவித்தியாலயத்தை ஒரு மத்திய மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தி இதற்குப் பல வளங்களும் கிடைக்க வழிசெய்துள்ளார். இங்கியங்கும் மூலாதாரப் பாடசாலைகள் பலவற்றிலும் விஞ்ஞானப் பட்டதாரிகள் நியமனம் பெறுவதற்குப் பணியாற்றிய காரணத்தினால்தான் - அக்கரைப்பற்று இன்று ஆறு டாக்டர்களைப் பெற்று மகிழக்கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது. சிறப்பாக இவரது ஆசிரிய நியமனங்களுக்கான நடவடிக்கைகள் அக்கரைப்பற்றுப் பதியின் கல்விவிருத்திக்கு பல வகையிலும் ஆதாரமாக அமைந்தன.

இப்பகுதி மக்களின் விவசாயத் தொழில்துறைக்கும் இவரது சேவை திருப்தியாக இருந்தது. குறிப்பாக - நுரைச்சோலை என்னும் வயற்காணிகள் கரும்புச் செய்கைக்காகச் சுவீகரிக்கப்பட்டபோது இதற்காக வேறுகாணிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தமையும், இக்காணிகளுக்கு நீர்ப்பாய்ச்சல் வாய்ப்புக்களை ஏற்படுத்தியமையும், சாதாரண ஒரு சாதனையல்ல. இதைத் தொட்டு சென்றவருடம் அக்கரைப்பற்றுப் பெரியபள்ளிவாசலில் பாரிய ஒரு பாராட்டுவிழா பொது மக்களால் எடுக்கப்பட்டதை நீங்களும் அறிந்திருக்கலாம்.

இன்னும் பாதைகள் சீரமைக்கப்பட இவர் ஆற்றிய சேவைகள், வடிகான் திட்டங்களுக்கு வழிவகுத்தமை, படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தமை என்று இவர் ஆற்றிய சேவைகளை எமது அக்கரைப்பற்று மக்கள் அண்மையில் ஒரு புத்தகமாகவே வெளியிட்டுள்ளார்கள். இதைப்படித்தால் நான் சொல்லாமலே அவரின் சேவைகளை நீங்களே விளங்கிக் கொள்வீர்கள்.

**கேள்வி:-** ஓர் அதிபராகவும், ஆசிரிய சங்கமொன்றின் பிரதேச தலைவராகவும் சேவைசெய்யும் நீங்கள், அப்துல் மஜீத் அவர்களிடம் நீங்கள் கண்ட சமூகப் பண்புகளைப் பற்றிக் கூறமுடியுமா?

**பதில்:-** எனது அதிபர் சேவையின்போதும் ஆசிரியர் சங்க நடவடிக்கைகளின் போதும் அப்துல் மஜீட் எம். பி. அவர்களுடன் நான் அனேகமாகத் தொடர்பு

கொண்டிருக்கிறேன். இதன்போதெல்லாம் மக்களின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை இவருக்கு உண்டு என்பதை நான் அறிவேன்.

தனது ஒரு தொகுதிக்குள்ளேயே - ஒரே இனத்துக்கு இரண்டு மத்திய மகாவித்தியாலயங்களைப் பெற்றுக் கொடுத்த சாதனையிலிருந்து மக்கள்பால் இவருக்கிருந்த அக்கறை புலப்படுகிறது.

இத்துடன் அக்கறைப்பற்று, திருக்கோயில் பகுதிகளுக்குத் தனித்தனிக் கல்விக்கோட்டங்களை உருவாக்கிய இவரது சேவையும், சம்மாந்துறைக் கென்றும் அண்மையில் தனியான கல்விக்கோட்டம் ஒன்றை உருவாக்கிய சாதனையும் எடுத்த காரியத்தை முடிக்கின்ற இவரது திறமையைக் காட்டு கின்றன. எதையும் கூர்ந்துகேட்டு நிறைவேற்றும் திறமை இவருக்கு இயல் பானது. இத்தன்மைகளை எமது ஆசிரிய சங்க நடவடிக்கையைத் தொட்டு இவருடன் அணுகியபோதெல்லாம் நான் அவதானித்து இருக்கிறேன்.

இவரிடம் காணப்படும் ஒருவிஷேட தன்மையையும் இங்கு நான் கூற வேண்டியவனாக இருக்கிறேன். அதாவது - ஏதாவது ஒரு விஷயத்தை ஆதரங் களுடன் எடுத்துச் செல்லாவிட்டால் சில வேளைகளில் இவர் கடிந்து கொள்வார். பின்னர் இதில் தெளிவு ஏற்பட்டுவிட்டால் அந்த விஷயத்தை எப்படியும் முடித்தே தீருவார். இதைத் தொட்டுத்தான் - எவராவது ஒருவர் இவரிடம் ஏச்சு வாங்கினால், அவர் தனது விடயத்தில் வென்று விட்டார் என்று பலரும் பேசிக்கொள்வதை நீங்கள் அறிவீர்கள். இதிலிருந்து இவரது ஏச்சிலும் கடிதலிலும் இழைகின்ற அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.

